மலர் : 52 இதழ் : 5

தமிழரசு

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

நவம்பர் 2021
விலை ரூ. 20/–

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

களப்பணியில்
மக்களின் முதலமைச்சர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 01.11.2021 அன்று
சென்னை, கோயம்பேடு புறநகர் பேருந்து நிலைய வளாகத்தில் 75ஆவது சுதந்திர திருநாள் கொண்டாட்டத்தின் தொடர்ச்சியாக,
தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில், தீரத் தியாகிகளின் வீரப் பெருமிதங்களை நினைவுகூர்ந்து
போற்றும் வகையில் "விடுதலைப் போரில் தமிழகம்" என்ற புகைப்படக் கண்காட்சியைத் திறந்துவைத்துப் பார்வையிட்டார்.

அக்டோபர் 30: உலகச் சிக்கன நாள்

வீட்டிற்கொரு அஞ்சலகத் தொடர் சேமிப்புக் கணக்குத் தொடங்குவீர் !

சிக்கனத்தின் முக்கியத்துவத்தையும்,
சேமிப்பின் அவசியத்தையும் எடுத்துரைக்கும்
பொருட்டு ஆண்டுதோறும் அக்டோபர் 30ஆம் நாள்
“உலகச் சிக்கன நாளாக” நாடு முழுவதும்
கொண்டாடப்படுவது குறித்துப் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

“அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்”

எனும் உலகப் பொதுமறை தந்திட்ட அய்யன் வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, பொருளின் அளவு அறிந்துச் செலவு செய்யாதவன் வாழ்க்கை நன்றாக இருப்பது போல் தோன்றினாலும், பின்னர் இல்லாது அழிந்துவிடும். எனவே, சிக்கன நடவடிக்கைகளைக் கடைப்பிடித்து, சிக்கனமாக வாழ்ந்து, வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமைச் சேர்ப்பதையே இந்த “உலகச் சிக்கன நாள்” வலியுறுத்துகிறது.

“சிறு துளி பெரு வெள்ளம்” “சிறுகக் கட்டிப் பெருக வாழ்” போன்ற பொருள் பொதிந்த இப்பொன்வரிகள் சேமிப்பின் முக்கியத்துவத்தை விளக்குகின்றன. மக்கள் தங்கள் வருமானத்தின் ஒரு பகுதியை எதிர்காலத் தேவைகளைக் கருதிச் சேமிப்பது மிகவும் அவசியம். இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பாகும். அஞ்சலகச் சேமிப்பு முதுமைக் காலத்தில் தேவையான பாதுகாப்பினை அளிக்கிறது. எதிர்கால வாழ்க்கைப் பாதுகாப்பாக அமைந்திட ஒவ்வொரு குடும்பமும் சேமித்திடும் பழக்கத்தினைத் திறம்பட வளர்த்துக்கொள்ள வேண்டும். அஞ்சலகத்தில் செயல்படுத்தப்படும் சிறுசேமிப்புத் திட்டங்களில் செய்யப்படும் முதலீடு சிறந்த பாதுகாப்பினைத் தருகிறது.

மேலும், சிறுகச் சிறுகச் சேமிக்கும் இத்தொகை பன்மடங்குப் பெருகி அரசின் வளர்ச்சித் திட்டங்களுக்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் பெரிதும் பயன்படுகிறது.

எனவே, இந்த உலகச் சிக்கன நாளில், தமிழக மக்கள் அனைவரும் தங்கள் வாழ்க்கையை வளப்படுத்த, வீட்டிற்கொரு அஞ்சலகத் தொடர் சேமிப்புக் கணக்கினை (Recurring Deposit) அருகில் உள்ள அஞ்சலகங்களில் தொடங்கி, சேமித்துப் பயன் பல பெற்றிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

– திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

தமிழரசு

தமிழ்நாடு அரசு

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2052
பிலவ வருடம் : ஐப்பசி – கார்த்திகை
நவம்பர் 2021

மலர் : 52 விலை ரூ.20 இதழ் : 5

ஆசிரியர் - வெளியிடுபவர்
முனைவர் **வீ.ப. ஜெயசீலன்,** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
த. ஹரிராம்
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
அ. மகேஸ்வரி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
சு. தீபா
எஸ். உதயா கதிரவன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
அ. மதன்
கு. சுபாஷ்
போ. முத்துக்குமார்

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

வடிவமைப்பாளர்
கோ. முரளி கிருஷ்ணன்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
தொலைபேசி : 22542224 / 22542221
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தாத் தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு. *(குறள் : 544)*

குடிமக்களை அரவணைத்து ஆட்சி நடத்தும் நல்லரசின் அடிச்சுவட்டை நானிலமே போற்றி நிற்கும்

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

★ தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழையால் பாதிக்கப்பட்டப் பகுதிகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் களப்பணிகள்........ 5

★ 6 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.1,597.18 கோடி சம்பாப் பருவப் பயிர்களுக்கான இழப்பீட்டுத் தொகை........ 21

★ நமது அரசு ஏழை, எளிய மக்களுக்கான அரசு (மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் பொருளாதார ஆலோசனைக் குழுவினருடனான கூட்டத்தில் ஆற்றிய உரை – 25.10.2021)........ 38

★ வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்........ 40

★ “இல்லம் தேடிக் கல்வி” திட்டம் துவக்கம்........ 43

★ ரூ.102.95 கோடியில் உயர்கல்வித்துறைக் கட்டடங்கள்........ 49

★ “விடுதலைப் போரில் தமிழகம்” – புகைப்படக் கண்காட்சி........ 56

★ ரூ.142.16 கோடியில் புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழர்களுக்குப் புதிய குடியிருப்புகள்........ 73

★ நரிக்குறவர், இருளர் இன மக்களுக்கு ரூ.4.53 கோடியில் நலத்திட்ட உதவிகள்........ 77

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 07.11.2021 அன்று வடகிழக்குப் பருவமழையையொட்டி, சென்னையில் பெய்துவரும் கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள சென்னை, வேப்பேரி, பேரக்ஸ் சாலை பகுதியைப் பார்வையிட்டு, ஆய்வுசெய்து, மழை வெள்ள நீரை வெளியேற்றத் துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெருநகரச் சென்னை மாநகராட்சி அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை

கனமழையால் பாதிக்கப்பட்டப் பகுதிகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் களப்பணிகள்

பெரம்பூர், பேரக்ஸ் சாலை

கொளத்தூரில்...

06.11.2021

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழையையொட்டியும், வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்தத் தாழ்வு மண்டலத்தை எதிர்கொள்ளவும் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் வெள்ளத் தடுப்புப் பணிகள் குறித்து அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக ஆய்வு மேற்கொண்டார்.

பேரிடர்களைத் திறம்பட எதிர்கொள்ளத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொண்டு, பொதுமக்களுக்கும் உட்கட்டமைப்புகளுக்கும் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

07.11.2021

தமிழ்நாட்டில் கடந்த 24 மணி நேரத்தில், 36 மாவட்டங்களில் அதிக அளவில் மழை பெய்துள்ளது. சென்னை மாவட்டத்தில் அதிகபட்சமாக 134.29 மி.மீட்டரும், அரியலூர் மாவட்டத்தில் குறைந்தபட்சமாக 0.20 மி.மீ மழையும் பதிவாகியுள்ளது. சென்னை நகரில் குறிப்பாக மிக அதிக அளவு மழைப் பதிவாகிப் பெய்து வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்டப் பகுதிகளான கொளத்தூர், செல்வி நகர், சீனிவாசா நகர், பெரம்பூர், பெருமாள்பேட்டை, வல்லம் பங்காரு தெரு, புரசைவாக்கம், மூக்குச் செட்டித் தெரு, கொசப்பேட்டை, படவட்டமன் தெரு, ஓட்டேரி, கொன்னூர், அன்னை சத்யா நகர் உள்ளிட்ட பகுதிகளை நேரடியாக ஆய்வு செய்து கே.ஆர்.எம். பள்ளியில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு ரொட்டி, அரிசி, போர்வை, சோப்பு உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையம், எழிலகம்

திரு.வி.க.நகரில் நிவாரண உதவி

அன்னை சத்யா நகரில் நிவாரண உதவி

வேளச்சேரி ஏரி பாலப்பகுதியில் நிவாரண உதவி

சைதாப்பேட்டை ஆட்டுத்தொட்டிப் பகுதியில் நிவாரண உதவி

வேளச்சேரி ரேடியல் ரோடு பம்பிங் ஸ்டேஷன் பகுதியில்...

தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில், 121 பல்நோக்கு பாதுகாப்பு மையங்களும், அனைத்து மாவட்டங்களில் 5,106 நிவாரண முகாம்களும், பெருநகரச் சென்னை மாநகராட்சிப் பகுதிகளில், மொத்தம் 160 நிவாரண முகாம்களும் அமைக்கப்பட்டு, அதற்கான பொறுப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுத் தயார் நிலையில் உள்ளது. மேலும், பெருநகரச் சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் தேங்கியுள்ள மழை நீர், இராட்சச பம்புகள் மூலம் அகற்றப்பட்டு வருகிறது.

தேசியப் பேரிடர் மீட்புப் படையின் இரண்டு குழுக்கள் மதுரைக்கும், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டத்திற்குத் தலா ஒரு குழுவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். மேலும், தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையின் இரண்டு குழுக்கள் தஞ்சாவூர் மற்றும் கடலூர் மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை எழிலகத்தில் உள்ள மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையத்தில் மாநிலத்தில் மழை வெள்ளம் குறித்த தகவல் கட்டுப்பாடு விபரங்களைக் கேட்டறிந்தார். கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் பேரிடர் மேலாண்மை இயக்குநர் ஆகியோருடன் ஆலோசனை மேற்கொண்டு, மாவட்ட ஆட்சியர்களுக்கும், பொதுமக்களுக்கும் அனுப்ப வேண்டிய முன்னெச்சரிக்கை செய்திகளை உடனடியாக அனுப்பவும், கட்டணமில்லாத் தொலைப்பேசி 1070 மூலம் வரப்பெறும் புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுரை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள தென்சென்னைப் பகுதிகளான சைதாப்பேட்டை, ஆட்டுத்தொட்டிப் பாலப் பகுதியில் கனமழையால் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர், ஆட்டுத்தொட்டி, செங்கேணியம்மன் கோயில் தெரு, வண்டிக்காரன் தெரு ஆகியப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார்.

வேளச்சேரி ஏரியின் வெள்ள நிலவரத்தைப் பார்வையிட்டு, ஆய்வு செய்து, வேளச்சேரி ரேடியல் ரோடு, ஏ.ஜி.எஸ். காலனியில் உள்ள கல்கி நகரில் பம்பிங் ஸ்டேஷன் மூலம் மழைநீரை வெளியேற்றும் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பள்ளிக்கரணை, கைவேலி பாலப் பகுதியில் கனமழையால் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கையும், ஆகாயத் தாமரைகளை அகற்றும் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தியாகராய நகரில் சாலைகளில் தேங்கியுள்ள மழைநீரைப் பார்வையிட்டு, அதனை உடனடியாக அகற்றிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

அதைத் தொடர்ந்து, ரிப்பன் மாளிகையில் உள்ள பெருநகரச் சென்னை மாநகராட்சி அலுவலகத்தில், வடகிழக்குப் பருவமழை பாதிப்பைக் கண்காணிக்க அமைக்கப்பட்டுள்ள இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களின் ஆய்வுக் கூட்டத்தில் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள வெள்ளத் தடுப்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்தும், இனி மேற்கொள்ளப்பட வேண்டியப் பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

கட்டுப்பாட்டு அறைக்கு தொலைப்பேசி மூலம் பொதுமக்கள் தெரிவிக்கும் புகார்கள் மீது துரிதமாக நடவடிக்கை எடுத்திடவும், மழைக் காலங்களில் ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மருத்துவ முகாம்கள் நடத்திடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

08.11.2021

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சென்னையில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் பாதிக்கப்பட்டப் பகுதிகளான சென்னை, துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கல்யாணபுரத்தில் கனமழையால் வெள்ளநீர் வடியும் பக்கிங்ஹாம் கால்வாயைப் பார்வையிட்டு ஆய்வுசெய்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு மற்றும் நிவாரண உதவிகளை வழங்கினார். மேலும், மழைக் காலங்களில் ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கல்யாணபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு மருத்துவ முகாமினைப் பார்வையிட்டு ஆய்வுசெய்து, பொதுமக்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

இராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாரத் திரையரங்கம் ரவுண்டானா பகுதியில் தேங்கியுள்ள மழைநீரைப் பார்வையிட்டு, தேங்கியுள்ள மழைநீரை வெளியேற்றத் துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இப்பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு மற்றும் அரிசி, பால், ரொட்டி, பாய், போர்வை, துண்டு போன்ற நிவாரணப் பொருட்களையும் வழங்கினார்.

ஆர்.கே. நகர்ப் பகுதியில் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்கி, பொதுமக்களிடம் பாதிப்புகள் குறித்துக் கேட்டறிந்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார்.

கொடுங்கையூர், மீனாம்பாள் சாலையில் திரளாகக் கூடியிருந்த பொதுமக்களிடம் மழை பாதிப்புகள் குறித்துக் கேட்டறிந்து, அவற்றைக் களைய உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

பெரம்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முல்லை நகர், பாலப் பகுதியில் கனமழையால் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், மகாகவி பாரதியார் நகரில் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

அன்னை சத்யா நகரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்கி, மழைநீர் தேங்கியுள்ள குடியிருப்புகளுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டு, அப்பகுதி மக்களிடம் தேவைப்படும் உதவிகள் குறித்துக் கேட்டறிந்தார்.

சென்னையில் தொடர்ந்து பெய்துவரும் கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைக் களையும் வகையில் பெருநகரச் சென்னை மாநகராட்சியின் சார்பில் 200 வார்டுகளிலும் சிறப்பு மருத்துவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலத்திற்கும் மின்மோட்டார் பொருத்திய படகுடன் மூன்று மீனவர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்கிட 200 பொறுப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சுரங்கப்பாதை மற்றும் சாலைகளில் தேங்கியுள்ள வெள்ளநீரை வெளியேற்றப் போர்க்கால அடிப்படையில் பணிகள் நடைபெற்று வருகிறது எனத் தெரிவித்தார்.

முல்லை நகர் பகுதியில்...

அன்னை சத்யா நகர் பகுதியில்...

கல்யாணபுரம் மருத்துவ முகாமில்...

மகாகவி பாரதியார் நகரில்...

இராயபுரம் பகுதியில்...

கொரட்டூர் ஏரி...

போரூர் ஏரி...

கோபாலபுரம் மருத்துவ முகாம்...

கொரட்டூர் அக்ரஹாரம் தெருவில்...

கொளத்தூர் ரமணா நகரில்...

09.11.2021

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் சென்னையில் தொடர்ந்து கனமழையால் பாதிக்கப்பட்ட கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திரு.வி.க. நகர் மண்டலம், ரமணா நகர், சுப்பிரமணிய தோட்டம், ஜி.கே.எம். காலனி ஆகியப் பகுதிகளில் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உணவு மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

கோபாலபுரம் அரசு நடுநிலைப் பள்ளி மற்றும் அக்பர் சதுக்கம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு மருத்துவ முகாம்களைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, மக்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

செம்பியம் வியாபாரிகள் சங்கத் திருமண மண்டபத்தில் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக, உணவு தயாரிக்கப்படும் பணிகளைப் பார்வையிட்டு உணவினைச் சுவைத்து, தரத்தினை ஆய்வு செய்தார். மேலும், கே.சி. கார்டன் 2ஆவது தெருவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்கினார்.

சிவ இளங்கோ சாலை – பேப்பர் மில்ஸ் சாலை சந்திப்பு, டெம்பிள் ஸ்கூல் சாலை மற்றும் வீனஸ் நகர் 1ஆவது தெரு ஆகிய இடங்களில் கனமழையால் தேங்கியுள்ள மழைநீரை, பெருநகரச் சென்னை மாநகராட்சி சார்பில் மோட்டார் இயந்திரம் கொண்டு வெளியேற்றும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

காமராஜர் சாலை, மங்காரம் தோட்டப் பகுதியில் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்கி, பொதுமக்களைச் சந்தித்துக் குறைகளைக் கேட்டறிந்தார். மேலும், டீச்சர்ஸ் கில்டு காலனியில் தொடர்ந்து தேங்கியுள்ள மழைநீரை உடனடியாக அகற்றிட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தாதன் குப்பம் குளம், அம்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட டி.ஆர்.ஜே. நெடுஞ்சாலை பாயிண்ட் பகுதி ஆகிய இடங்களில் கனமழையால் ஏற்பட்டுள்ள நீர்வரத்தைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ரெட்டேரி தெற்குப் பகுதியில் உள்ள தணிகாசலம் கால்வாய், ரெட்டேரி வடக்குப் பகுதியிலிருந்து கொளத்தூர் ஏரி ஆகியவற்றில் கனமழையால் ஏற்பட்டுள்ள நீர்வரத்தைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கண்ணகி நகரில் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்கி, அங்குக் கூடியிருந்த பொதுமக்களிடம் குறைகளைக் கேட்டறிந்தார்.

அம்பத்தூர் தொகுதிக்குட்பட்ட கொரட்டூர் ஏரியில் கனமழையால் ஏற்பட்டுள்ள நீர்வரத்தைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, அக்ரஹாரம் தெருவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குலசேகரபுரம், விருகம்பாக்கம் கால்வாய் வடிகால் பகுதியில் வெள்ளநீர் வரத்தைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, கிருஷ்ணா தெருவில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு மருத்துவ முகாமையும் பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருட்களையும் வழங்கினார். மேலும், சஞ்ஜய் காந்தி நகரில் மழைநீர் வடிகால் பணிகளைப் பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

மதுரவாயல் தொகுதிக்குட்பட்ட நெற்குன்றம் – மேட்டுக்குப்பம் பகுதியில் சாலைகளில் தேங்கியுள்ள மழைநீரை அகற்றும் பணிகளைப் பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கினார். மேலும், போரூர் ஏரியில் கனமழையால் ஏற்பட்டுள்ள நீர்வரத்தைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

போரூர், பூந்தமல்லி – மவுண்ட் சாலையில் உள்ள அம்மா உணவகத்தைப் பார்வையிட்டு, அங்குத் தயாரித்து வைக்கப்பட்டிருந்த உணவினைச் சுவைத்துத் தரத்தினை ஆய்வு செய்தார். மேலும், அங்கு தினசரி சுமார் 400 நபர்கள் உணவருந்த வரும் விவரத்தினைக் கேட்டறிந்து மழைக்காலங்களில் மக்களுக்குத் தவறாது தொடர்ந்து உணவளித்திட வேண்டும் என்று அம்மா உணவக ஊழியர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

அம்மா உணவகத்தில் இந்த மழை முடியும் வரை இலவசமாக உணவு அளிப்பதற்கு நான் உத்தரவிட்டிருக்கிறேன். அதுமட்டுமல்லாமல், மாநகராட்சி சார்பாகக் காலை, மதியம், இரவு ஆகிய நேரங்களில் அதற்கென்று இருக்கும் சமையல் கூடங்களில் சமைத்து, சாம்பார் சாதம், தயிர் சாதம், சப்பாத்தி போன்றவைகளைத் தயார் செய்து எங்கெங்கு மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் உணவு வழங்கப்பட்டு வருகிறது என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

10.11.2021

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் சென்னை, எழிலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று அதன் செயல்பாடுகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், பொதுமக்கள் தெரிவிக்கும் கோரிக்கைகளைக் கட்டுப்பாட்டு அறையின் தொலைப்பேசி வாயிலாக நேரடியாகக் கேட்டறிந்து, அதனை உடனடியாகக் களைய நடவடிக்கை எடுக்குமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

கனமழையால் பாதிக்கப்பட்ட சென்னை, தியாகராய நகர், விஜயராகவா சாலையில் உள்ள கால்வாயில் பொக்லைன் இயந்திரங்களைக் கொண்டு கழிவுகளை அகற்றும் பணிகளையும், சாலைகளில் தேங்கியுள்ள மழைநீரை அகற்றும் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஜி.என்.செட்டி சாலையில் சத்தியமூர்த்தி பள்ளி வளாகம், விஸ்வநாதபுரம், ரங்கராஜபுரம் ஆகிய இடங்களில் மழைநீர் தேங்கியுள்ள பகுதிகளைப் பார்வையிட்டு, அங்கு நடைபெறும் மழைநீரை அகற்றும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தின் உட்புறத்தில் மாம்பலம் கால்வாய் அடையாற்றில் கலக்கும் இடத்தில் கனமழையால் ஏற்பட்டுள்ள வெள்ளநீர் வரத்தைப் பார்வையிட்டார்.

பெருநகரச் சென்னை மாநகராட்சியின் சார்பில் பாதிக்கப்பட்ட மக்கள் தங்குவதற்காகத் தற்காலிக முகாம்கள் அமைக்கப்பட்டு, இதுவரை 1,548 மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இன்று காலை மற்றும் மதியம் சுமார் 4,40,500 உணவுப் பொட்டலங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

தாதன் குப்பம் குளம்...

பூந்தமல்லி மவுண்ட் சாலை அம்மா உணவகத்தில்...

அக்பர் சதுக்கத்தில்...

மாநில அவசர கட்டுப்பாட்டு மையம், எழிலகம்

ஜி.என்.செட்டி சாலை கால்வாய்

11.11.2021

மாநிலத்தில் மழை வெள்ள நிலை குறித்தும், மேற்கொள்ளப்பட்டுள்ள நிவாரண நடவடிக்கைகள் குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை வெள்ள நிவாரண நடவடிக்கைகளைத் துரிதப்படுத்திட மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மாவட்டச் சிறப்புக் கண்காணிப்பு அலுவலர்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு அறிவுறுத்தினார்.

சிந்தாதிரிப்பேட்டை பொது சமையற்கூடம்

மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் குறைகளைக் கேட்டறிந்து, அவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கிடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் உடனுக்குடன் எடுத்திட அறிவுறுத்திய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஆங்காங்கே நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தரமான உணவு, மருத்துவ வசதி மற்றும் நிவாரண உதவிகள் வழங்கப்படுவதை உறுதி செய்திடவும் உத்தரவிட்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் மழை வெள்ளத்தால் பாதித்த பயிர்களைக் காப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவும், டெல்டா மாவட்டங்களில் பயிர் சேத விவரங்களைப் பார்வையிட்டுப் பயிர் சேத விவர அறிக்கையினைத் தயார் செய்யவும், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. ஐ. பெரியசாமி அவர்கள் தலைமையில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. கே.ஆர். பெரியகருப்பன், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு. எஸ். ரகுபதி, மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர் அடங்கிய குழு ஒன்றினை அமைத்து உத்தரவிட்டார்.

இக்குழுவினர் டெல்டா மாவட்டங்களுக்கு உடனடியாகச் சென்று, பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு, நிவாரண நடவடிக்கைகளைத் துரிதப்படுத்திட ஏதுவாக அறிக்கையைத் தர மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும், கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்குவதற்காகச் சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள கொதிகலன் மூலம் உணவு தயாரிக்கும் பொது சமையற்கூடத்தில் உணவு தயாரிக்கும் பணிகளைப் பார்வையிட்டுத் தரத்தினை ஆய்வு செய்தார்.

தேனாம்பேட்டை ஆஸ்டின் நகரில் மருத்துவ முகாம்

12.11.2021

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், வடகிழக்குப் பருவமழையையொட்டி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மழைக்கால நோய்களில் இருந்து பொதுமக்களைக் காக்கும் வகையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகளின் சார்பில் பெருநகரச் சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கூடுதலாக 200 சிறப்பு மருத்துவ முகாம்களைத் தொடங்கிவைக்கும் விதமாகச் சென்னை, தேனாம்பேட்டை, ஆஸ்டின் நகரில் சிறப்பு மருத்துவ முகாமினைத் தொடங்கிவைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், கனமழையின்போது சென்னை, கீழ்ப்பாக்கம் கல்லறைத் தோட்டத்தில் உடல்நிலை சரியில்லாமல் மயங்கிக் கிடந்த இளைஞரைத் தோளில் சுமந்து சென்று காப்பாற்றிய டி.பி. சத்திரம் காவல் நிலைய ஆய்வாளர் திருமதி இராஜேஸ்வரி அவர்களை நேரில் அழைத்து, அவரது சேவையினைப் பாராட்டினார்.

பருவமழைக் காலத்தை முன்னிட்டு ஏற்படக் கூடிய தொற்றுநோய்கள் மற்றும் தொற்றா நோய்களிலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்க, பெருநகரச் சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பொதுச் சுகாதாரத்துறையின் சார்பில் 200 வார்டுகளிலும் ஒரு வார்டுக்கு இரண்டு சிறப்பு மருத்துவ முகாம்கள் என மொத்தம் 400 சிறப்பு மருத்துவ முகாம்களை நடத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார். அதனடிப்படையில், பொதுச் சுகாதாரத்துறையின் சார்பில் 200 வார்டுகளிலும் முதற்கட்டமாக 200 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அதனைத் தொடர்ந்து, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகளின் சார்பில் பெருநகரச் சென்னை மாநகராட்சிக்குட்பட்டப் பகுதிகளில் கூடுதலாக 200 மருத்துவ முகாம்கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் செங்கல்பட்டு மாவட்டம், பள்ளிக்கரணை ரேடியல் ரோடு, நாராயணபுரம் ஏரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

செங்கல்பட்டு மாவட்டம், மாம்பாக்கம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில், வண்டலூர் வட்டத்திற்குப்பட்ட கிராமங்களில் வசிக்கும் இருளர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த 33 குடும்பங்களுக்குக் கீழ்க்கோட்டையூர் கிராமத்தில் உள்ள நிலத்தில் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கினார். மேலும், நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்யும் வழியில், கீழ்க்கோட்டையூரில் உள்ள தேநீர்க் கடையில், தேநீர் அருந்தி பொதுமக்களிடம் கலந்துரையாடினார். தொடர்ந்து, ஆய்விற்குச் செல்லும் வழியில், கண்டிகையில் தூய்மைப் பணியாளர்களைச் சந்தித்து, நலம் விசாரித்து, தேவைப்படும் உதவிகள் குறித்துக் கேட்டறிந்தார்.

காஞ்சிபுரம் மாவட்டம், ஆதனூர், அடையாறு ஆறு துவங்கும் இடம் மற்றும் மண்ணிவாக்கம், அடையாறு ஆற்றுப் பாலத்தில் கனமழையால் ஏற்பட்டுள்ள நீர்வரத்தைப் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

முடிச்சூர், சி.எஸ்.ஐ. செயின்ட் பால்ஸ் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாம் மற்றும் மருத்துவ முகாமைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, முடிச்சூர் டோல்கேட் அருகில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருட்களையும் வழங்கினார்.

பள்ளிக்கரணை ரேடியல் ரோடு, நாராயணபுரம் ஏரி

இருளர் மற்றும் பழங்குடியினர் இன மக்களுக்கு உணவு அளித்தல் மாம்பாக்கம் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி நிவாரண முகாம்

கண்டிகையில் தூய்மைப் பணியாளர்களிடம் நலம் விசாரித்தல்...

மேலும், முடிச்சூர், மதனபுரத்தில் கனமழையால் சாலைகளில் தேங்கியுள்ள மழைநீரில் இறங்கி நடந்து, வெள்ளநீர் அகற்றிடும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் செங்கல்பட்டு மாவட்டத்தில் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்யும் வழியில் கீழ்க்கோட்டையூரில் உள்ள தேநீர்க் கடையில் தேநீர் அருந்தியபோது அங்கிருந்த சிறுவன் மற்றும் பொதுமக்களிடம் கலந்துரையாடினார்.

கடலூர், ஆடூர் அகரம் பகுதியில்...

மயிலாடுதுறை, சீர்காழி-புத்தூர் கிராமத்தில்...

மயிலாடுதுறை, கேசவன் பாளையத்தில்...

கடலூர், அரங்கமங்கலம் - மாருதி நகரில்...

13.11.2021

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், அரங்கமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட மாருதி நகர்ப் பகுதியில் கனமழையால் ஏற்பட்டுள்ள வெள்ள பாதிப்புகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், 18 ஆதிதிராவிடக் குடும்பங்களுக்கு 5 இலட்சத்து 22 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான இலவச வீட்டுமனைப் பட்டா, பசுமை வீடு கட்டுவதற்குத் தலா ரூ.2.10 இலட்சத்திற்கான ஆணை மற்றும் நிவாரண உதவிகளை வழங்கினார்.

ஆடூர் அகரம் பகுதியில் கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள விளைநிலங்களைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, விவசாயிகளிடம் வெள்ள பாதிப்புகள் குறித்த விவரங்களைக் கேட்டறிந்தார். மேலும், மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளாக, கனமழையால் பசுமாட்டை இழந்தவர்களுக்குத் தலா ரூ.30 ஆயிரம், கன்றுக்குட்டியை இழந்தவர்களுக்குத் தலா ரூ.16 ஆயிரம், பகுதியளவு கூரைவீடு சேதமடைந்தவர்களுக்குத் தலா ரூ.4,100 என மொத்தம் 10 நபர்களுக்கு 1 இலட்சத்து 42 ஆயிரத்து 500 ரூபாய் நிவாரணத் தொகைகளை வழங்கினார்.

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டம், புத்தூர் கிராமத்தில் கனமழையால் பாதிக்கப்பட்ட விளைநிலங்களைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, விவசாயிகளிடம் வெள்ள பாதிப்புகள் குறித்த விவரங்களைக் கேட்டறிந்தார். மேலும், கனமழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்கள் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களையும், வெள்ள பாதிப்புகளை விளக்கும் புகைப்படங்களையும் பார்வையிட்டார்.

தரங்கம்பாடி வட்டம், கேசவன்பாளையம் மீனவர்கள் வாழும் சுனாமி குடியிருப்புப் பகுதிகளில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளைப் பார்வையிட்டு, வெள்ள பாதிப்புகள் குறித்த விவரங்களைக் கேட்டறிந்து, நிவாரண உதவிகளை வழங்கினார். மேலும், அங்கு அமைக்கப்பட்டுள்ள சிறப்பு மருத்துவ முகாமையினைப் பார்வையிட்டு, மருத்துவர்களிடம் மக்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை விவரங்கள் குறித்துக் கேட்டறிந்தார்.

14.11.2021

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள் சென்னை வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட லாக்மா நகரில், கொரோனா தடுப்பூசி மற்றும் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினைத் தொடங்கிவைத்தார்.

சென்னை, திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட சங்கர பக்தன் தெரு, கொன்னூர் நெடுஞ்சாலை ஆகிய பகுதிகளில் மழை நீரினால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

சென்னை, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மைலப்பா தெரு, நேரு மண்டபப் பகுதியில், மழைக்காலச் சிறப்பு மருத்துவ முகாமினைப் பார்வையிட்டு, வழங்கப்படும் சிகிச்சைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்து, மழையால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கினார். மேலும், மாதவரம் நெடுஞ்சாலை கமலாம்பாள் திருமண மண்டபம், வி.வி.நகர் மெயின் ரோடு, மூகாம்பிகை நகர் ஆகிய இடங்களில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினைப் பார்வையிட்டு பொதுமக்களிடம் சிகிச்சை பற்றிக் கேட்டறிந்தார்.

பெரம்பூர் பல்லவன்சாலை, கே.கே.நகர் அவென்யூ சாலை அருகே மழையால் ஏற்பட்டிருந்த பள்ளத்தைப் பார்வையிட்டு, ஆய்வு செய்து உடனடியாகச் சரி செய்வதற்கு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

ஜானகிராம் நகர், ஒற்றைவாடை தெரு, வெற்றி நகர் அய்யாலு தெரு, ராஜா தோட்டம் குடிசை மாற்று வாரிய குடியிருப்பு, தான்தோன்றியம்மன் கோவில் தெரு, நாகாத்தம்மன் கோவில் தெரு, ஜி.கே.எம் காலனி 35வது தெரு, லட்சுமி நகர் மெயின் ரோடு, அஞ்சுகம் நகர் முதல் மெயின் ரோடு ஆகிய இடங்களில் நிவாரணப் பொருட்களை வழங்கி. மழையால் பாதிக்கப்பட்ட பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றுப் பாதிப்பின் விவரங்களைக் கேட்டறிந்தார். மேலும், ஜி.கே.எம் காலனியில் உள்ள நகர்ப்புற ஆரம்பச் சுகாதார நிலையத்தினையும் பார்வையிட்டார். சென்னை, 70 அடிச் சாலை, பேப்பர் மில்ஸ் ரோடு, பெரவள்ளூர் ஆகிய பகுதிகளில் மழை நீர் அகற்றும் பணிகளையும் பார்வையிட்டார்.

ஜம்புலிங்கம் மெயின் ரோடு, JR திருமண மண்டபத்தில் நபிகள் நாயகம் தெரு, வெற்றிச் செல்வி அன்பழகன் நகரில் அமைந்துள்ள SIP மெமோரியல் டிரஸ்ட் காப்பகத்தைச் சேர்ந்த ஆதரவற்ற குழந்தைகளுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

சென்னை வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வில்லிவாக்கம், பாரதி நகர் கிழக்கு ஏரிக்கரை தெரு, சென்னை திருவள்ளூர் நெடுஞ்சாலை, மழையால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கி, ராஜமங்களம் சிக்னல் அருகில் பொதுமக்களைச் சந்தித்துத் தேவைகளைக் கேட்டறிந்தார்.

மேலும், சென்னை எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட டோபிகானா பகுதியில் மழையால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு நிவாரணப் பொருட்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

கே.கே.நகர் அவென்யூ சாலை அருகில்...

கொளத்தூர், மைலப்பா தெருவில் உரையாடல்

கொளத்தூர், மைலப்பா தெருவில் நிவாரண உதவி

கொளத்தூர், வெற்றிச்செல்வி அன்பழகன் நகரில்...

சென்னை, திரு.வி.க.நகரில் நிவாரண உதவி

கன்னியாகுமரி, தோவாளையில் நிவாரண உதவி

கன்னியாகுமரியில் மழை வெள்ளத்தால் உயிரிழந்த குடும்பத்திற்கு நிதியுதவி

கன்னியாகுமரி, பத்மநாபபுரம் - புத்தனார் கால்வாய்

கன்னியாகுமரி, மேலாங்கோடு பகுதியில்

கன்னியாகுமரி,
தோவாளை பெரியகுளம் கண்மாய்

15.11.2021

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், தோவாளையில் உள்ள பெரியகுளத்தின் கரைகளில் ஏற்பட்ட உடைப்புகளைப் பார்வையிட்டு, ஆய்வு செய்தார். மேலும், தோவாளை, கிருஷ்ணசாமி திருமண மண்டபத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் தங்குவதற்காகத் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் தங்கியுள்ள சுமார் 75 நபர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார். மழைக் காலங்களில் ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அந்நிவாரண முகாமில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு மருத்துவ முகாமைப் பார்வையிட்டு, மக்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். தோவாளை வட்டம், தேரேகாலில் கனமழை வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள கால்வாய் கரை உடைப்பு மற்றும் சாலை சேதங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நாகர்கோவில் ஆய்வு மாளிகையில், மழை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்த கன்னியாகுமரி மாவட்டம், வடிவீஸ்வரம், பறக்கின்காலைச் சேர்ந்த திரு. பாஸ்கரன் அவர்களின் குடும்பத்திற்கு 4 இலட்சம் ரூபாய் நிவாரணத் தொகைக்கான காசோலையை வழங்கினார். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், மேற்கொள்ளப்பட்டு வரும் சீரமைப்புப் பணிகள் குறித்தும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், வெள்ள பாதிப்புகளைத் துரிதமாகச் சீர்செய்திடவும், நோய்த் தொற்று ஏற்படாவண்ணம் தூய்மைப் பணிகளை மேற்கொண்டு சுகாதாரத்தைப் பேணிக் காத்திடவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, மருத்துவ வசதி மற்றும் இதர அடிப்படை வசதிகளை எவ்வித குறைபாடுமின்றி வழங்கிடவும், மக்கள் இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்து மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், மாநகராட்சிப் பகுதிகளில் ஆண்டுதோறும் மழைக்காலங்களில் மழைநீர் தேங்காமல் இருப்பதற்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், மேலாங்கோட்டில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள வாழைப் பயிர் பயிரிடப்பட்டுள்ள விவசாய நிலங்களைப் பார்வையிட்டு, பயிர்சேத விவரங்கள் குறித்து விவசாயிகளிடம் கேட்டறிந்தார். மேலும், கல்குளம் வட்டம், பத்மநாபபுரம் புத்தனார் கால்வாயில் ஏற்பட்டுள்ள உடைப்புகளைப் பார்வையிட்டு, ஆய்வு செய்து, சீரமைப்புப் பணிகளை விரைவாக முடித்திட அலுவலர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

அக்டோபர் 15: முன்னாள் ஜனாதிபதி

டாக்டர் ஆ.ப.ஜெ. அப்துல் கலாம் பிறந்தநாள்

ஏவுகணை நாயகன்

ஏழ்மைக் குடும்பத்தில் பிறந்து,
தனது படிப்பாலும், விடாமுயற்சியாலும்
இந்தியாவின் ஏவுகணை நாயகன்
எனப் பெயர்பெற்று; பின்னாளில்
இந்தியக் குடியரசின்
முதல் குடிமகனாகவும் உயர்ந்த
அப்துல் கலாம் அவர்களின் பிறந்தநாளில்,
இந்தியாவின் எதிரி என அவர் கருதிய
வறுமையை ஒழிக்க உறுதியேற்போம்!

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்



**“கனவு காணுங்கள், ஆனால் கனவு என்பது
தூக்கத்தில் வருவதல்ல, உங்களைத் தூங்க விடாமல்
செய்வது எதுவோ அதுவே கனவு...”**

**“நீங்கள் வெற்றி பெற்றவர்களின் சரித்திரங்களைப் படிக்காதீர்கள்
அவற்றிலிருந்து வெறும் தகவல்களை மட்டுமே பெற முடியும்
தோல்வி பெற்றவர்களின் சரித்திரங்களைப் படியுங்கள்
அதிலிருந்து வெற்றிக்கான வாய்ப்புகளை அறிந்து கொள்ளலாம்.”**

– டாக்டர் ஆ.ப.ஜெ. அப்துல் கலாம்

சென்னையில்
கலைஞரின் வருமுன் காப்போம் திட்டச் சிறப்பு மருத்துவ முகாம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 16.10.2021 அன்று கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திரு.வி.க. நகர் மண்டலம், கொளத்தூர் பள்ளி சாலையில் உள்ள சென்னை ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பொதுமக்களின் உயிர்காக்கும் உன்னதத் திட்டமான கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தின்கீழ்ச் சிறப்பு மருத்துவ முகாமைத் தொடங்கிவைத்தார்.

ஏழை, எளியோருக்கான இலவச மருத்துவப் பரிசோதனை மற்றும் சிகிச்சைத் திட்டமான கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தை மீண்டும் புதுப்பொலிவுடன் செயல்படுத்திடும் வகையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து 385 வட்டாரங்களிலும் ஒரு வட்டாரத்திற்கு மூன்று முகாம் வீதம் மொத்தம் ஒரு வருடத்திற்கு 1,155 முகாம்களும், நகர்ப்புறங்களில் ஒரு மாநகராட்சிக்கு 4 முகாம் வீதம் ஒரு வருடத்திற்கு 80 முகாம்களும், பெருநகரச் சென்னை மாநகராட்சியில் 15 முகாம்களும் நடத்தத் திட்டமிட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 29.09.2021 அன்று சேலம் மாவட்டம், வாழப்பாடியில் தொடங்கிவைக்கப்பட்டது.

கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட மருத்துவ முகாம்களின் மூலம் பொதுமக்களுக்குப் பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், மகப்பேறு மற்றும் பெண்கள் நல மருத்துவம், கண் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை மருத்துவம் போன்ற 17 வகையான சிறப்பு மருத்துவர்களால் நோயைக் கண்டறிந்து அதற்கான முதல் சிகிச்சைகளும் அளிக்கப்படும். இம்முகாம்கள் மூலம், மக்கள் தாங்கள் வசிக்கும் பகுதிக்கு அருகாமையிலேயே நோய்க்கான ஆரம்ப நிலையிலேயே சிகிச்சைக்கான ஆலோசனைகளைப் பெற இயலும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கொளத்தூர், சென்னை மாநகராட்சிப் பள்ளியில் தொடங்கிவைக்கப்பட்ட வருமுன் காப்போம் திட்ட மருத்துவ முகாமில், பில்ராத் மருத்துவமனையின் சார்பில் புற்றுநோய் கண்டறியும் சிகிச்சை முறைகள், ஆர்பிஎஸ் மருத்துவமனையின் சார்பில் குடல் மற்றும் கல்லீரல் சிகிச்சைகள், முருகன் மருத்துவமனையின் சார்பில் நரம்பு மற்றும் எலும்பு சார்ந்த சிகிச்சைகள், ஃபோர்டிஸ் (Fortis) மலர் மருத்துவமனையின் சார்பில் இருதய சிகிச்சைகள், வாசன் கண் மருத்துவமனையின் சார்பில் கண் பரிசோதனைகள் மற்றும் இலவச கண் கண்ணாடி வழங்குதல், சென்னை பல் மருத்துவமனையின் சார்பில் பல் தொடர்பான சிகிச்சைகள், MERF மருத்துவமனையின் மூலம் காது–மூக்கு–தொண்டை குறித்த சிகிச்சைகள், HYCARE மருத்துவமனையின் மூலம் சர்க்கரை மற்றும் சிறுநீரகம் தொடர்பான சிகிச்சைகள், சீடிஎச் மருத்துவமனையின் சார்பில் மனநலம் சார்ந்த சிகிச்சைகள், காசநோய் தொடர்பான சிகிச்சைகள், ஆயுஸ் மருத்துவர்கள் மூலம் சித்த மருத்துவச் சிகிச்சைகள் ஆகிய சிகிச்சை முறைகள் குறித்த கண்காட்சிகள் இடம்பெற்றிருந்தன. ■

திருவள்ளூரில் ரூ.1,200 கோடி முதலீட்டில்
“பல்முனைய சரக்குப் போக்குவரத்துப் பூங்கா”

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் முன்னிலையில் **12.10.2021** அன்று தலைமைச் செயலகத்திலிருந்தும், காணொலிக் காட்சி வாயிலாகப் புதுதில்லியிலிருந்து மாண்புமிகு ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் திரு.நிதின் ஜெயராம் கட்கரி அவர்கள், மாண்புமிகு ஒன்றிய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித்துறை அமைச்சர் திரு.சர்பானந்த சோனோவால் மற்றும் மாண்புமிகு ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை இணை அமைச்சர் ஜெனரல் வி.கே.சிங் ஆகியோர் முன்னிலையிலும், தமிழ்நாடு அரசின் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் மற்றும் National Highway Logistics Management Ltd., சென்னை துறைமுகம் ஆகியவை இணைந்து, பொது மற்றும் தனியார் பங்களிப்புடன், திருவள்ளூர் மாவட்டம், மப்பேட்டில் ரூ.1,200 கோடி முதலீட்டில் “பல்முனைய சரக்குப் போக்குவரத்துப் பூங்கா” (Multi-Modal Logistics Park) தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்நிகழ்வில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பேசியதாவது:

மாண்புமிகு ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் திரு.நிதின் கட்கரி அவர்களே, மாண்புமிகு ஒன்றிய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித்துறை அமைச்சர் திரு.சர்பானந்த சோனோவால் அவர்களே, மாண்புமிகு ஒன்றிய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை இணை அமைச்சர் ஜெனரல். வி.கே. சிங் அவர்களே, மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்களே, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு அவர்களே, ஒன்றிய அரசின் செயலாளர்களே! மற்றும் உயர் அலுவலர்களே,

பல்முனைய சரக்குப் போக்குவரத்துப் பூங்காத் திட்ட விழாவில் பங்கெடுத்துள்ள ஒன்றிய அமைச்சர்களான மாண்புமிகு நிதின் கட்கரி அவர்களுக்கும், மாண்புமிகு சர்பானந்த சோனோவால் அவர்களுக்கும், மாண்புமிகு வி.கே. சிங் அவர்களுக்கும் எனது நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். தங்களது பல்வேறு பணிகளுக்கு இடையில் இந்த நிகழ்வில் நீங்கள் பங்கெடுத்துள்ளீர்கள்.

தமிழகத் தொழில்துறை வரலாற்றில் இது ஒரு முக்கியமான நாள் ஆகும். தமிழ்நாடு அரசுடன் இணைந்து பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் பல்முனைய சரக்குப் போக்குவரத்துப் பூங்காவை ஒன்றிய அரசு தமிழ்நாட்டில் தொடங்குவது உண்மையில் மகிழ்ச்சி அளிப்பது ஆகும்.

தமிழ்நாட்டில் அமையும் முதலாவது பல்முனைய சரக்குப் போக்குவரத்துப் பூங்காவாக இது அமைந்துள்ளது. திருவள்ளூர் மாவட்டத்தில், **158** ஏக்கர் பரப்பளவில் ரூ.**1,200** கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ளது. இந்தப் பூங்கா அமையும் பகுதி மிக மிக முக்கியமான தொழில் பகுதியாக இருக்கிறது என்பதை உங்கள் அனைவருக்கும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரிய தொழிற்சாலைகள் திரளாக அமைந்துள்ள திருபெரும்புதூர், பிள்ளைப்பாக்கம், ஒரகடம் ஆகிய பகுதிகளுக்கு மிக அருகில் இப்பூங்கா அமையப்போகிறது.

இந்தப் பூங்கா சென்னை எல்லை சுற்று வட்டச் சாலைக்கு (CPRR) மிக அருகில் அமைந்துள்ளது. சென்னை விமான நிலையம், சென்னை துறைமுகம், காமராஜர் துறைமுகம், காட்டுப்பள்ளி துறைமுகம் ஆகியவற்றைச் சிறப்பான முறையில் இணைக்க வழிவகை செய்கிறது. அனைத்து வசதிகளும் கொண்ட இடத்தில் அமைய இருக்கிறது. அதேபோல், உலகத் தரம் வாய்ந்த வசதிகளும் இதில் இருக்கின்றன.

இரயில் மற்றும் சாலை இணைப்புகளுடன் சரக்கு முனையம், சேமிப்புக் கிடங்கு, குளிர்பதன சேமிப்புக் கிடங்கு, இயந்திரங்கள் மூலம் சரக்குகளைக் கையாளுதல், மதிப்புக் கூட்டப்பட்ட சேவைகளான சுங்க அனுமதிப் பெறுதல், சோதனை வசதிகள் போன்ற உலகத்தரம் வாய்ந்த வசதிகள் அனைத்தும் இப்பூங்காவில் அமைக்கப்பட இருப்பதை அறிந்து மகிழ்கிறேன்.

இதன்மூலம், சரக்குப் போக்குவரத்துச் செலவு கணிசமான அளவில் குறையும் என்பது இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம். சரக்குப் போக்குவரத்து உட்கட்டமைப்பை மேம்படுத்திட பல்வேறு திட்டங்களை நாங்கள் செய்யத் தொடங்கி இருக்கிறோம். சரக்குப் போக்குவரத்துச் செலவைக் குறைக்கும் வகையில், 'தமிழ்நாடு மாநில சரக்குப் போக்குவரத்திற்கான திட்டத்தை' தயாரிக்கும் முயற்சிகளைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது என்பதைப் பெரும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென, டிட்கோ (TIDCO) சார்பில் ஒரு ஆலோசகரை நியமித்துள்ளது. தமிழ்நாடு அரசு, இத்திட்டத்தை மிக விரைவில் வெளியிட உள்ளது.

இத்தகைய சூழலில் தமிழ்நாட்டில் பல்முனைய சரக்குப் போக்குவரத்துப் பூங்காத் திட்டத்தை ஒன்றிய அரசு, தமிழ்நாடு அரசின் துணையுடனும் பொது மற்றும் தனியாருடன் இணைந்தும் தொடங்குவதை மனப்பூர்வமாக வரவேற்கிறேன், நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

டிட்கோ, சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகம், ஒன்றிய அரசின் தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் ஆகியவை இணைந்து செயல்படுத்தும் இந்தப் புதுமையான முயற்சியின் காரணமாக, தமிழ்நாட்டில் உள்ள 10,000 இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும்.

இந்த மகிழ்ச்சியான தருணத்தில், தமிழ்நாட்டில் சரக்குப் போக்குவரத்துத்துறைக்கு உதவ வேண்டுமென மாண்புமிகு ஒன்றிய அமைச்சர் அவர்களுக்குச் சில கோரிக்கைகளை முன்வைக்க விரும்புகிறேன்:

தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் அமைக்கப்பட்டு வரும், பெங்களூரு, சென்னை விரைவுச் சாலை, திருபெரும்புதூர் அருகே இருங்காட்டுக்கோட்டையில் முடிவடையுமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. சரக்குப் போக்குவரத்தைத் துரிதப்படுத்தவும், போக்குவரத்துச் செலவைக் குறைக்கவும், இந்த விரைவுச் சாலையை, சென்னை சர்வதேச விமான நிலையம் வரை நீட்டிக்க வேண்டும்.

கோயம்புத்தூர் மற்றும் தூத்துக்குடியில் இதுபோன்ற பல்முனைய சரக்குப் போக்குவரத்துப் பூங்காக்கள் அமைக்கப்படவேண்டும். இதற்கு மாநில அரசு முழு ஒத்துழைப்பைத் தரும் என நான் உறுதி அளிக்கிறேன்.

இப்போது அமைய உள்ள பல்முனைய சரக்குப் போக்குவரத்துப் பூங்காவில், இரயில்வே துறையின் பங்களிப்பையும் பெற்றுத் தரவேண்டும் என மாண்புமிகு ஒன்றிய அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

இவற்றை விரைந்து வழங்குவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிரம்ப இருக்கிறது. இந்தத் திட்டத்தினைத் தமிழ்நாட்டிற்கு வழங்கியமைக்கு மாண்புமிகு ஒன்றிய அமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை மீண்டும் ஒரு முறை உரித்தாக்கி, எனது உரையை நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களிடம் 28.10.2021 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) சார்பில் 2020–2021ஆம் ஆண்டிற்கான இடைக்கால ஈவுத் தொகையாக ரூ.70 கோடிக்கான காசோலை வழங்கப்பட்டது.

வருவாய் நிருவாக ஆணையரகத்திற்கான இணையதளம்!
துணை ஆட்சியாளர்களுக்கான வலைத்தளம்!
கிராம நிருவாக அலுவலர்களுக்கான பணி மாறுதல் வலைதளம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 13.10.2021 அன்று தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக்கான www.cra.tn.gov.in என்ற வருவாய் நிருவாக ஆணையரக இணையதளம், https://www.cra.tn.gov.in/tnscs என்ற துணை ஆட்சியர்களுக்கான வலைத்தளம், https://www.cra.tn.gov.in/vaotransfer என்ற கிராம நிருவாக அலுவலர்களுக்கான மாவட்ட மாறுதல் வலைத்தளம் ஆகியவற்றைத் தொடங்கி வைத்தார்.

வருவாய்த்துறையானது மாநிலத்தின் நிருவாக அமைப்புக்கு முதுகெலும்பாக உள்ளதோடு, சாமானிய மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் முக்கிய பங்காற்றுகிறது. அரசின் பல்வேறு சமூகப் பொருளாதாரத் திட்டங்கள் இத்துறையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. பொதுமக்கள், விவசாயிகள், மாணவர்களுக்குத் தேவையான பட்டா, சிட்டா, அடங்கல், சாதிச்சான்று, இருப்பிடச் சான்று, வருமானச் சான்று போன்ற பல்வேறுச் சான்றிதழ்களை வழங்கி வருகிறது. மழை, வெள்ளம், புயல் போன்ற பேரிடர் காலங்களில் மக்கள் துயர் துடைக்கும் துறையாகவும் இத்துறை விளங்கி வருகிறது. இத்துறையின் பணியினை மேலும் செம்மைப்படுத்தும் வகையில் பல்வேறுத் திட்டங்களைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், மாநில அரசால் அறிவிக்கப்படும் வருவாய்த் துறையின் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டங்கள், பொதுமக்கள், மாணவர்களுக்குப் பயன்படும் சான்றிதழ்கள் வழங்கும் திட்டங்கள் போன்ற திட்டங்கள் வருவாய் நிருவாக ஆணையரகம் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டங்கள் குறித்த விவரங்கள் மற்றும் பயன்களை மக்கள் எளிதில் தெரிந்துகொண்டு பயனடைவதற்கு ஏதுவாக, வருவாய் நிருவாக ஆணையரகத்தால், **www.cra.tn.gov.in என்ற வருவாய் நிருவாக ஆணையரக இணையதளம்** உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இணையதளத்தில், இவ்வலுவலகம் சம்பந்தப்பட்ட அரசுத் திட்டங்களின் விவரங்கள் மற்றும் அரசாணைகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காகப் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனால், பொதுமக்கள் தங்களது இருப்பிடத்திலிருந்தபடியே அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் பயன்கள் குறித்து அறிந்துகொள்ளலாம்.

தமிழ்நாடு அரசின் குடிமைப்பணியின்கீழ்ப் பணிபுரியும் அலுவலர்களின் நிருவாகத் தேவைகளைப் பூர்த்தி செய்யத் **துணை ஆட்சியர்களுக்கான https://www.cra.tn.gov.in/tnscs என்ற வலைத்தளம்** உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம், அரசு விதிகள் மற்றும் சட்டங்கள், அரசால் அவ்வப்போது வெளியிடப்படும் அரசாணைகள், வழிகாட்டு நெறிமுறைகள், சுற்றறிக்கைகள், பணிமாறுதல் மற்றும் பணிநியமனங்கள் குறித்த விவரங்களை அறிந்துகொள்ள இயலும்.

கிராம நிருவாக அலுவலர்களுக்கான கோட்ட, வட்ட அளவிலானப் பொது மாறுதல்கள் ஆண்டுதோறும் வருவாய்க் கோட்டாட்சியர் அளவிலும், மாவட்ட அளவிலான மாறுதல்கள் நிருவாக நலன் கருதி, மாவட்ட ஆட்சியர் அளவிலும், மாவட்டங்களுக்கு இடையேயான ஒருவழி மாறுதல்கள் மற்றும் மனமொத்த இருவழி மாறுதல்கள் வருவாய் நிருவாக ஆணையர் அவர்களாலும் வழங்கப்பட்டு வருகின்றன. இம்மாறுதல்கள் தொடர்பான கோரிக்கைகளைப் பரிசிலித்து, மாறுதல்களைத் தாமதமின்றியும், வெளிப்படைத் தன்மையுடனும் செயல்படுத்தும் வகையில் வருவாய் நிருவாக ஆணையரகத்தால், **https://www.cra.tn.gov.in/vaotransfer என்ற கிராம நிருவாக அலுவலர்களுக்கான பணிமாறுதல் வலைத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது.**

கொளத்தூரில் ரூ.2.87 கோடியில் நலத்திட்ட உதவிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 16.10.2021 அன்று கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட எவர்வின் பள்ளியில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில், 16 மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், 5 பயனாளிகளுக்குத் திருமண நிதியுதவி, 2 பயனாளிகளுக்கு வங்கிக் கடன் மானியம், 5 பயனாளிகளுக்குத் தையல் இயந்திரங்கள், 197 பயனாளிகளுக்கு முதியோர், கணவனால் கைவிடப்பட்டோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் விதவைகளுக்கு மாதாந்திர ஓய்வூதியம் பெறுவதற்கான ஆணைகள், சாலை விபத்தில் உயிரிழந்த குடும்பத்தைச் சேர்ந்த 312 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதி, 5 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதி, கொரோனா தொற்றால் பெற்றோரில் ஒருவரை இழந்த 18 குழந்தைகளுக்கு நிவாரண நிதி என மொத்தம் 560 பயனாளிகளுக்கு ரூ.2.87 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து, கொளத்தூர், பெரியார் நகர், மேம்படுத்தப்பட்ட அரசு புறநகர் மருத்துவமனையின் பயன்பாட்டிற்காகத் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியின் சார்பில் வழங்கப்பட்ட ஒரு அவசரக்கால ஊர்தியையும், கொரோனா தடுப்பூசி பணிக்காக 2 வாகனங்களின் சேவைகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்துத் தொடங்கி வைத்து, 210 நபர்கள் அமரக்கூடிய மூன்று இருக்கைகள் கொண்ட 70 நாற்காலிகளையும் மருத்துவமனையின் பயன்பாட்டிற்காக வழங்கினார்.

பின்னர், கொளத்தூர், ஜி.கே.எம்.காலனியிலுள்ள சென்னை மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 70 பள்ளி மாணவ, மாணவியர்களுக்குக் கல்வி உபகரணங்களை வழங்கி, 34 ஆசிரியர்களுக்குச் சிறப்பு செய்தார். மேலும், அப்பள்ளிக்குக் கட்டடம் கட்டுவதற்காகத் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியின் சார்பில் ரூ.1 கோடிக்கான காசோலையைத் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியின் நிருவாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் திரு.கே.வி.ராமமூர்த்தி அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினார். அத்துடன், தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியின் சார்பில் 1,500 மாணவர்கள் அமரும் வகையில் ரூ.25 இலட்சம் மதிப்பில் அளிக்கப்பட்ட மேஜைகள் மற்றும் நாற்காலிகளையும் பள்ளியின் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

6 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.1,597.18 கோடி சம்பாப் பருவப் பயிர்களுக்கான இழப்பீட்டுத் தொகை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 18.10.2021 அன்று தலைமைச் செயலகத்தில், வேளாண்மை – உழவர் நலத்துறை சார்பில், சம்பாப் பருவப் பயிர்களுக்கான இழப்பீட்டுத் தொகையான ரூ.1,597.18 கோடியினைச் சுமார் 6 இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கிடும் விதமாக 10 விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகைக்கான சான்றிதழ்களை வழங்கி தொடங்கி வைத்தார்.

வேளாண்மையில் தொடர் வளர்ச்சியானது ஒரு மாநிலத்தின் ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும். உணவுப் பாதுகாப்புடன் கிராமப்புற விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும், அவர்களுக்குத் தொடர் வருமானம் கிடைத்திடவும், மாநில அளவில் நிலையான பொருளாதார வளர்ச்சி அடைவதற்கும் வேளாண்மையில் நீடித்த வளர்ச்சியை ஏற்படுத்துவது மிகவும் இன்றியமையாததாகும். இதனைக் கருத்தில்கொண்டு தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே முதன்முறையாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசால் வேளாண்மைத் துறைக்கென 2021–2022ஆம் ஆண்டிற்கான தனி நிதிநிலை அறிக்கைத் தாக்கல் செய்யப்பட்டது. அதுமட்டுமின்றி வேளாண்மைத்துறை என்ற பெயரினை வேளாண்மை – உழவர் நலத்துறை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு இயற்கை வேளாண்மையை ஊக்குவித்து நிலையான வேளாண் வளர்ச்சிக்கு வழிவகுத்து வருகிறது.

2020–2021ஆம் ஆண்டில், பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ்க் குறுவை, சம்பா மற்றும் குளிர்காலப் பருவப் பயிர்கள் 42.75 இலட்சம் ஏக்கர் பரப்பளவு பயிர்க் காப்பீடு செய்வதற்காக, 25.76 இலட்சம் விவசாயிகள் பதிவு செய்தனர். குறுவை (காரீப்) பருவத்திற்கான இழப்பீட்டுத் தொகையாக ரூ.133.07 கோடி, 2,02,335 விவசாயிகளுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது.

தமிழக விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டு 2021–2022ஆம் ஆண்டில் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்காக ரூ.2,327 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதில், 2020–2021ஆம் ஆண்டு சம்பாப் பருவப் பயிர்களுக்கான தமிழ்நாடு அரசின் பயிர்க் காப்பீட்டுக் கட்டண மானியமாக ரூ.1,553.15 கோடி, காப்பீட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.

இதன் காரணமாக, 2020–2021ஆம் ஆண்டு சம்பாப் பருவப் பயிர்களுக்கு (சம்பா நெற்பயிர் உட்பட) இழப்பீட்டுத் தொகையான ரூ.1,597.18 கோடியில், இப்கோ–டோக்யோ பொது காப்பீட்டு நிறுவனத்தின் மூலம் ரூ.1,089.53 கோடியும், இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனத்தின் மூலம் ரூ.507.65 கோடியும், சுமார் 6 இலட்சம் விவசாயிகளுக்குத் தற்போது ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கான இந்த இழப்பீட்டுத் தொகையைப் பாதிக்கப்பட்ட 6 இலட்சம் விவசாயிகளுக்கு வழங்கிடும் விதமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 10 விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையினை வழங்கித் தொடங்கி வைத்தார்.

மேலும், 2021–2022ஆம் ஆண்டு சம்பாப் பருவப் பயிர்களைக் காப்பீடு செய்ய 26.08.2021 அன்று தமிழ்நாடு அரசால் அரசாணை வெளியிடப்பட்டு, விவசாயிகள் சம்பாப் பருவப் பயிர்களுக்கானக் காப்பீட்டுக் கட்டணத்தைச் செப்டம்பர் 15ஆம் தேதி முதல் செலுத்தி வருகின்றனர். 13.10.2021 வரை, 61,871 விவசாயிகளால் பயிர்க் காப்பீடு செய்யப் பதிவு செய்யப்பட்டு, 67,556 ஏக்கர் பரப்பளவு காப்பீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகளின் நலனுக்காகச் செயல்படுத்தப்பட்டு வரும் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் அனைத்து விவசாயிகளும் பதிவுசெய்து தங்கள் பயிரைக் காப்பீடு செய்து கொள்ளுமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வேளாண் பெருமக்களைக் கேட்டுக்கொண்டார்.

நெம்மேலியில்
கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 19.10.2021 அன்று, சென்னை, குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில், கிழக்குக் கடற்கரைச் சாலை, நெம்மேலியில் செயல்பட்டு வரும் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புத் திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் மற்றும் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புத் திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைக்கும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சென்னைக்கு அருகே வற்றாத நீராதாரங்கள் இல்லாத காரணத்தினால் சென்னைப் பெருநகரம் வடகிழக்குப் பருவ மழையைப் பெரிதும் சார்ந்திருக்கிறது. வடகிழக்குப் பருவமழை பொய்க்கும் காலங்களில் நகரின் நீண்ட காலக் குடிநீர்த் தேவை மற்றும் மக்களின் அன்றாட குடிநீர்த் தேவையைக் கருத்திற்கொண்டு, தமிழ்நாடு அரசு கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்களை அமைத்துள்ளது. கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள், சென்னை மாநகரின் குடிநீர்த் தேவைகளை நிறைவு செய்வதில் பெரும்பங்காற்றி வருகின்றன.

தமிழ்நாட்டில் மீஞ்சூரில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புத் திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் முதல் நிலையம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2010ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது.

இரண்டாவது நிலையமாக நெம்மேலியில் ரூ.805.08 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புத் திறன் கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் அன்றைய மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் 23.02.2010 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, 2013ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகின்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புத்

திறன் கொண்ட இக்கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்தின் செயல்பாடுகளைப் பார்வையிட்டு, ஆய்வு செய்தார். இந்த நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்த் தென்சென்னையில் அமைந்துள்ள வேளச்சேரி, பள்ளிப்பட்டு, திருவான்மியூர், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, சோழிங்கநல்லூர் மற்றும் தகவல் தொழில்நுட்ப வளாகத்தைச் சார்ந்துள்ள பகுதிகளுக்குக் குழாய்க் கட்டமைப்புகள் மற்றும் நீரேற்று நிலையங்கள் வாயிலாக மக்களுக்கு வழங்கப்பட்டு, சுமார் 10 இலட்சம் மக்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

அதனைத்தொடர்ந்து, நெம்மேலியில் ரூ.1,259.38 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புத் திறன்கொண்ட கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் அமைப்பதற்காக நடைபெற்று வரும், கடல்நீரை உள்வாங்கும் ஆழ்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, சுத்திகரிக்கப்பட்ட நீர்தேக்கத் தொட்டி, சுத்திகரிக்கப்பட்ட நீர் உந்து நிலையம், வடிகட்டப்பட்ட கடல் நீர்தேக்கத் தொட்டி மற்றும் உந்து நிலையம், காற்றழுத்தம் மூலம் எண்ணெய் மற்றும் கசடுகளை அகற்றும் தொட்டி, நுண் வடிகட்டி மற்றும் எதிர்மறைச் சவ்வூடுப் பரவல் நிலையம், நிருவாகக் கட்டடம், கசடுகளைக் கெட்டிப்படுத்தும் பிரிவு, செதிலடுக்கு வடிகட்டி போன்ற கட்டுமானப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து, இப்பணிகளை முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ள ஏப்ரல் 2023க்குள் முழுமையாக முடித்திட அலுவலர்களை அறிவுறுத்தினார்.

மேலும், இத்திட்டத்தில் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்திலிருந்து பல்லாவரம் வரை குழாய் பதிக்கும் பணிகளும் நடைபெற்று வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முட்டுக்காடுப் பகுதியில் நடைபெற்று வரும் குழாய் பதிக்கும் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இத்திட்டத்தின் வாயிலாகப் பெறப்படும் குடிநீர் மூலம், தென்சென்னைப் பகுதிகளான உள்ளகரம்–புழுதிவாக்கம், வேளச்சேரி, மடிப்பாக்கம், சோழிங்கநல்லூர், ஆலந்தூர், புனித தோமையார் மலை, பல்லாவரம் மற்றும் தகவல் தொழில்நுட்ப வழித்தடப் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 9 இலட்சம் மக்கள் பயனடைவர்.

செம்பரம்பாக்கம் ஏரி ரூ.2.24 கோடி செலவில்
சீரமைக்கும் பணி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
பார்வையிட்டு ஆய்வு – 20.10.2021

சென்னை மாநகரத்திற்குக் குடிநீர் வழங்கும் மிக முக்கிய நீர் ஆதாரமாக விளங்கும் புழல் ஏரியானது 21.20 அடி உயரமும், 3,300 மில்லியன் கன அடி கொள்ளளவும் கொண்டதாகும். தற்போது இப்புழல் ஏரியில் 18.88 அடி உயரமும், 2,786 மில்லியன் கன அடி நீர் இருப்பும் உள்ளது. ஏரியின் உபரி நீர் கால்வாயின் மொத்த நீளம் 13,500 மீட்டர் ஆகும். சென்னை மண்டலத்திற்கு வடகிழக்குப் பருவ மழையை முன்னிட்டு வெள்ளத்தடுப்புப் பணிக்காக மொத்தம் ரூ.11.70 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் புழல் செங்குன்றம் ஏரியின் உபரி நீர் கால்வாய், அம்பத்தூர் ஏரி உபரி நீர் கால்வாய், தணிகாச்சலம் நகர் கால்வாய் ஆகியவற்றிற்கு ரூ.77.50 இலட்சம் மதிப்பீட்டில் வெள்ளத்தடுப்புப் பணிகள் நடைபெற்று வருகிறது. இதனால் கால்வாயில் உள்ள நீர்த்தாவரங்கள், ஆகாயத் தாமரைகள் ஆகியவற்றை அப்புறப்படுத்தித் தண்ணீர் தடையில்லாமல் செல்ல ஏதுவாகப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனைத் தொடர்ந்து, காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள செம்பரம்பாக்கம் ஏரியின் நீர் இருப்பு மற்றும் உறுதித் தன்மை குறித்தும், ஏரியின் 5 மற்றும் 19 கண் கொண்ட மதகுகளில் ஏற்பட்டுள்ள அடைப்பான்களை ரூ.2.24 கோடி செலவில் சீரமைக்கும் பணிகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, அப்பணிகளை விரைந்து முடித்திடவும், வடகிழக்குப் பருவமழையையொட்டி ஏரியின் கரைகளைத் தொடர்ந்து கண்காணித்திடவும் பொதுப்பணித்துறை அலுவலர்களை அறிவுறுத்தினார். மேலும், செம்பரம்பாக்கம், புழல், பூண்டி போன்ற முக்கிய ஏரிகளில் உள்ள அனைத்து விதமான கழிவுகளையும் அகற்றிடத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அலுவலர்களை அறிவுறுத்தினார்.

சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் நீர் நிலைகளில் செம்பரம்பாக்கம் ஏரி முக்கியமானதாகும். செம்பரம்பாக்கம் ஏரியானது தமிழ்நாட்டிலுள்ள மிகப்பெரிய ஏரிகளுள் ஒன்றாகும். இந்த ஏரி பல்லவர் காலத்தில் கட்டப்பட்டதாகும். இந்த ஏரி பாலாறு அணைக்கட்டு முறையின் கடைநிலை ஏரியான திருப்பெரும்புதூர்

ஏரியிலிருந்து சௌத்ரிகால் வாய்க்கால் மூலமாக உபரி நீரைக் கொண்டு வருகிறது. மேலும், கூவம் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள கொரட்டூர் அணைக்கட்டிலிருந்து நீர்வரத்துப் பெறக்கூடிய மற்றொரு முறையுமாகும். மேற்படி ஏரியிலிருந்து வெளியேறும் மிகைநீர் அடையாற்றில் விழுந்து தென்சென்னை மூலமாக அடையாறு முகத்துவாரத்தில் கலக்கிறது.

செம்பரம்பாக்கம் ஏரிக்குப் பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து இணைப்புக் கால்வாய் மூலமாகக் கிருஷ்ணா நீரைக் கொண்டு வருவதற்கு ஏதுவாக இந்த ஏரி பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஏரி சென்னைக்குக் குடிநீர் வழங்கும் இரண்டாவது கடைநிலை ஏரியாகும்.

மேலும், கிருஷ்ணா கூட்டுக்குடிநீர்த் திட்டத்தின் மூலம் செம்பரம்பாக்கம் ஏரியின் நீரளவின் உயரத்தை 22 அடியிலிருந்து 24 அடி கொண்டதாக 2 அடி உயர்த்தியும், அதன் கொள்ளளவானது 3,120 மில்லியன் கன அடியிலிருந்து 3,645 மில்லியன் கன அடியாக 1996இல் உயர்த்தப்பட்டது. தற்போதைய நீரின் ஆழம் 20.77 அடியாகும். செம்பரம்பாக்கம் ஏரியின் உபரி நீர் வெளியேறும் கால்வாயின் மொத்த நீளம் 6,200 மீட்டர் ஆகும். வடகிழக்குப் பருவமழையை எதிர்கொள்ள முன்னேற்பாடாக ரூ.37.50 இலட்சம் செலவில் மணப்பாக்கம், குன்றத்தூர், கோவூர், தந்திக் கால்வாய், நத்தம் கால்வாய் ஆகிய கால்வாய்களில் உள்ள நீரியல் தாவரங்கள், ஆகாயத் தாமரைகள் ஆகியவற்றை அப்புறப்படுத்தித் தண்ணீர் தடையில்லாமல் சென்று அடையாற்றில் கலக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், செம்பரம்பாக்கத்தில் செயல்பட்டு வரும் நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கும் திறனுடைய குடிநீர்ச் சுத்திகரிப்பு நிலையத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கிருஷ்ணா குடிநீர் வழங்கல் திட்டத்தின்கீழ், பெறப்பட்ட தண்ணீரைச் சுத்திகரிப்பதற்காக ரூ.296 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கும் திறனுடைய குடிநீர்ச் சுத்திகரிப்பு நிலையம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2007ஆம் ஆண்டு துவக்கி வைக்கப்பட்டது. இந்நிலையம் மூலம் சென்னைக்குக் குடிநீர் வழங்கும் பல்வேறு ஏரிகளில் உள்ள நீரின் இருப்பு மற்றும் நகரின் குடிநீர்த் தேவைக்கு ஏற்பச் செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து நீரை எடுத்துச் சுத்திகரித்துச் சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கப்படுகிறது.

அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி உதவிப் பேராசிரியர்கள் நியமனம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 21.10.2021 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் புதியதாகத் துவக்கப்பட்டுள்ள அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குப் பல்கலைக்கழக விதிமுறைகளின் அடிப்படையில் உதவிப் பேராசிரியர் பணியிடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்ட 9 நபர்களுக்கும், ஒரு நூலகர் மற்றும் ஒரு உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்ட 2 நபர்களுக்கும் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

2021–2022ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில், இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் 10 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பினைத் துரிதமாகச் செயல்படுத்தும் விதமாக, முதற்கட்டமாகச் சென்னை மாவட்டம், கொளத்தூர், நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு, திண்டுக்கல் மாவட்டம், தொப்பம்பட்டி, தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் ஆகிய 4 இடங்களில் B.Com., BBA, BCA, B.Sc., Computer Science ஆகிய பாடப்பிரிவுகளைக் கொண்டு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்கிட 06.10.2021 அன்று அரசாணை வெளியிடப்பட்டது.

இந்நான்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சென்னை, கொளத்தூரில் மயிலாப்பூர், அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் சார்பில் அருள்மிகு சோமநாத சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான சுமார் 5 ஏக்கர் நிலப்பரப்பில் கல்லூரி துவங்கிட உத்தேசிக்கப்பட்டதன் அடிப்படையில், நடப்புக் கல்வியாண்டிலேயே அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தற்காலிகமாகக் கொளத்தூரில் உள்ள எவர்வின் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் தொடங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு, மாணவ, மாணவியர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, பல்கலைக்கழக விதிமுறைகளின்படி அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கான உதவிப் பேராசிரியர் நேர்முகத் தேர்வுக்கு வல்லுநர் குழு அமைக்கப்பட்டு, 18.10.2021 அன்று நேர்காணல் நடத்தப்பட்டு, தகுதி, அனுபவம் மற்றும் மதிப்பெண் அடிப்படையில் 9 நபர்கள் தேர்வு செய்யப்பட்டனர். மேலும், ஒரு நூலகர் மற்றும் ஒரு உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்களுக்கு 2 நபர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

“இ-முன்னேற்றம்”, “தகவல் தொழில்நுட்ப நண்பன்” வலைத்தளங்கள் “கீழடி-தமிழிணைய விசைப்பலகை”, “தமிழி-தமிழிணைய ஒருங்குறி மாற்றி” மென்பொருள்கள் உருவாக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 22.10.2021 அன்று தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் துறையின் சார்பில் உருவாக்கப்பட்டுள்ள ‘‘இ–முன்னேற்றம்’’ மற்றும் ‘‘தகவல் தொழில்நுட்ப நண்பன்’’ ஆகிய இரண்டு வலைத்தளங்களையும், ‘‘கீழடி–தமிழிணைய விசைப்பலகை’’ மற்றும் ‘‘தமிழி–தமிழிணைய ஒருங்குறி மாற்றி’’ ஆகிய இரு தமிழ் மென்பொருள்களையும் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு, சுமார் ஒரு இலட்சம் கோடிக்கான 200 முக்கிய உட்கட்டமைப்புத் திட்டங்களைத் தொடர்ந்து கண்காணித்து வருகிறது. இத்திட்டங்களின் வளர்ச்சிகளை மீளாய்வு செய்து அவற்றைக் கண்காணிப்பதற்காக ‘‘இ–முன்னேற்றம்’’ என்ற வலைத்தளம் (https://emunnetram.tn.gov.in/) தமிழ்நாடு மின்னாளுமை முகமையால் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொரு திட்டம் குறித்த விவரங்களான, பணி ஒப்பந்தமான நாள், தொடங்கப்பட்ட நாள், நடைபெறும் இடம், நிதி நிலைமை, மாதாந்திர அடிப்படையில் திட்டத்தின் வளர்ச்சி, நிதி நிலைமையின் வரையறை, பணிவளர்ச்சியின் தொடர் புகைப்படம் போன்றவை இடம் பெற்றிருக்கும். மேலும், முக்கிய அரசுத் துறைகளின் செயல்பாடுகளை இதன் வழியே கண்காணித்திடவும் இயலும். துறைத்தலைமை அலுவலகங்கள் அவ்வப்போது திட்டங்களின் வளர்ச்சியினைத் தெரிவிப்பதற்கும், நெருக்கடியான பொருண்மைகள் மற்றும் தாமதத்திற்கான காரணங்கள் ஏதேனும் இருப்பின், அவற்றைத் தெரிவிப்பதற்கும் ஏதுவாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலிருந்து தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளின் ஏற்றுமதி ஆண்டுதோறும் 10 சதவிகிதம் என்ற அளவில் வளர்ந்து வருகிறது. இது மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. தமிழ்நாடு மின்னாளுமை முகமையால் உருவாக்கப்பட்டுள்ள ‘‘தகவல் தொழில்நுட்ப நண்பன்’’ என்ற வலைத்தளம், தகவல்

நேர்மைக்குப் பரிசு

தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் திருவொற்றியூர் மண்டலத்தில் பணியாற்றிவரும் தூய்மைப் பணியாளர் திருமதி ஏ.மேரி அவர்கள், குப்பையில் கிடந்த தங்கத்தைக் கண்டுபிடித்து உரியவரிடம் ஒப்படைத்ததற்காக, அவரது நேர்மையைப் பாராட்டி, அவருக்குப் பொன்னாடை அணிவித்து திருவள்ளுவர் சிலையை வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார். (23.10.2021)

தொழில்நுட்பவியல் தொழில்கள் குறித்த கருத்துக்கேட்புத் தளமாக விளங்குவதுடன், மாநிலத்தில் உள்ள அனைத்துத் தொழில்நுட்பம் சார்ந்த குழுமங்கள் நேரடியாக இதில் இணைந்து கொள்கைகளை உருவாக்கிடவும் அவர்களின் பங்களிப்பினை நல்கிடவும் உதவும்.

இத்தளத்தின் வாயிலாக உள்நுழையும் குழுமங்கள், தகவல் தொழில்நுட்பவியல் துறையால் வெளியிடப்படும் அனைத்துக் கொள்கைகள், அரசாணைகள் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகளை எளிதில் பார்வையிட இயலும். மேலும், எதிர்நோக்கும் முக்கியப் பிரச்சினைகள் மற்றும் தற்போதைய கொள்கைகள் குறித்துத் தமது கருத்துரைகளைப் பதிவிடும் வசதியும், அதற்குத்தக்கத் தீர்வுகளைப் பெற்றிடவும், தகவல்களை மின்னஞ்சல் வழியாகப் பெற்றிடவும் உதவும்.

இதன்மூலம் குழுமங்களின் கொள்கைகள், திட்டங்களின் வரைமுறைகள் மற்றும் மிக வேகமான வளர்ச்சிக்கு வித்திடும் திட்டங்கள் போன்றவற்றைக் கண்காணிக்க முடியும். மேலும், இது எளிதாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் உள்ளதால் வர்த்தகத்தைப் பெருக்கப் பெரிதும் துணைபுரியும்.

தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ள “கணினி விசைப்பலகை”, “தமிழிணையம்–ஒருங்குறி மாற்றி” ஆகிய இரு தமிழ் மென்பொருள்களையும் பல புதிய வசதிகளுடன் மேம்படுத்தி, “கீழடி–தமிழிணைய விசைப்பலகை”, “தமிழி–தமிழிணைய ஒருங்குறி மாற்றி” (Keezhadi - Keyboard and Tamizhi -Unicode Converter) எனப் பெயர் மாற்றம் செய்து வெளியிடப்பட்டுள்ளது.

கீழடி–விசைப்பலகை மென்பொருளானது, தமிழ்’99 விசைப்பலகை (Tamil’99 Keyboard), ஒலிபெயர்ப்பு விசைப்பலகை (Phonetic Keyboard), பழையத் தட்டச்சு விசைப்பலகை (Old Typewriter Keyboard) ஆகிய மூன்று விதமான கணினி விசைப்பலகைகளின் அமைப்பில் செயல்படும்.

தமிழி–தமிழிணைய ஒருங்குறி மாற்றி மென்பொருளானது, வானவில் மற்றும் பிற தமிழ் எழுத்துருக்களில் (Fonts) தட்டச்சு செய்யப்பட்ட .doc, .docx, .rtf, .xls, .xlsx, .ods, .ppt, .pptx போன்ற அமைப்புகளில் உள்ள உரைநடை (Text), கோப்பு (File) மற்றும் கோப்புறை (Folder) ஆவணங்களைத் “தமிழ் ஒருங்குறி”க்கு மாற்றும் தன்மையுடையது.

தமிழ் இணையக் கல்விக்கழகத்தால் உருவாக்கப்பட்டுள்ள இம்மென்பொருட்களைக் கட்டணமின்றி தமிழ் இணையக் கல்விக்கழக இணையதளத்திலிருந்து (www.tamilvu.org/unicode) பதிவிறக்கம் செய்திட இயலும்.

தீவிரக் கோவிட் தடுப்பூசி சிறப்பு முகாம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 23.10.2021 அன்று, தமிழ்நாடு முழுவதும் நடைபெற்ற 6ஆவது தீவிரக் கோவிட் தடுப்பூசி சிறப்பு முகாமினையொட்டிச் சென்னை, ஒக்கியம் துரைப்பாக்கம், எழில் நகரில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கண்ணகி நகரில் உள்ள அரசு இ–சேவை மையம், ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி ஆகிய இடங்களில் கோவிட் தடுப்பூசி முகாமைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். கண்ணகி நகரில் உள்ள நகர்ப்புறச் சமுதாய நல மருத்துவமனையில் நடைபெற்ற கோவிட் தடுப்பூசி சிறப்பு முகாமைப் பார்வையிட்டு, மருத்துவமனைப் பதிவேடுகளை ஆய்வு செய்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 30.10.2021 அன்று, தமிழ்நாடு முழுவதும் நடைபெற்று வரும் 7ஆவது மாபெரும் கோவிட் தடுப்பூசி சிறப்பு முகாமினையொட்டி விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், கஞ்சநாயக்கன்பட்டி ஊராட்சியில் உள்ள ராஜ்கோ மஹாலில் கோவிட் தடுப்பூசி சிறப்பு முகாமைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பொதுமக்களிடம் தடுப்பூசி செலுத்திக் கொண்ட விவரங்கள் குறித்துக் கேட்டறிந்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, கொரோனா தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக ஏற்கெனவே நடைபெற்ற 6 மாபெரும் கோவிட் தடுப்பூசி சிறப்பு முகாம்கள் வாயிலாக 5 கோடியே 73 இலட்சத்து 91 ஆயிரம் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக பல்வேறு தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டதன் விளைவாகத் தமிழ்நாட்டில் கொரோனா நோய்த் தொற்றுப் பரவல் தற்போது கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கண்ணகி நகர் ஆய்வின்போது, அப்பகுதியில் நின்று கொண்டிருந்த M–19B தி.நகர் – கண்ணகி நகர் வழித்தடப் பேருந்தில் ஏறி அரசின் மகளிருக்கான இலவசப் பேருந்துப் பயணத் திட்டம் குறித்துப் பெண் பயணிகளிடம் உரையாடினார்.

துணிநூல் துறை என்ற புதிய துறை உருவாக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 23.10.2021 அன்று தலைமைச் செயலகத்தில், கைத்தறி மற்றும் துணிநூல் துறையினைப் பிரித்து, தனியாகத் துணிநூல் துறை என்ற புதிய துறையினை உருவாக்கித் துவக்கி வைத்தார்.

கள்ளக்குறிச்சி மரச்சிற்பம், கருப்பூர் கலம்காரி ஓவியம், தஞ்சாவூர் நெட்டி வேலை, அரும்பாவூர் மரச்சிற்பம் ஆகிய கைவினைப் பொருட்களுக்குப் புவிசார் குறியீடு பதிவகம் மூலம் பெறப்பட்ட புவிசார் குறியீடு அங்கீகாரச் சான்றிதழ்களை வெளியிட்டார்.

புவிசார் குறியீடு என்பது ஒரு குறிப்பிட்ட பகுதி / மாநிலம் / நாட்டில் பல ஆண்டுகளாகப் பாரம்பரிய முறைகளின்படி உற்பத்தி செய்யும் பொருட்களைப் பயன்படுத்துவதற்காகவும், சந்தைப்படுத்துவதற்காகவும் அப்பொருட்களை உற்பத்தி செய்பவர்களுக்கு அங்கீகாரம் அளிப்பதற்காகச் சட்டப்படி வழங்கப்படும் சான்றாகும்.

புவிசார் குறியீட்டின் மூலம் அப்பொருட்களுக்கான தரம், நற்பெயர் மற்றும் அடையாளம் காக்கப்படுகிறது. மேலும், அவ்வாறு புவிசார் குறியீடு அங்கீகாரம் பெற்ற குறிப்பிட்ட பொருட்களுக்கு மட்டுமே உற்பத்தி செய்யவும், சந்தைப்படுத்தவும் வழிவகை செய்யப்படுகிறது. இதனால் புவிசார் குறியீடு பெற்ற பொருட்களின் தரம், பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் அதன் தொன்மை பேணிப் பாதுகாக்கப்படுகிறது. புவிசார் குறியீடு அங்கீகாரம் பெற்றவைகளைத் தவிரப் பிறபகுதி, மாநிலம், நாட்டில் உள்ளவர்கள் அப்பொருட்களை உற்பத்தி செய்யவோ, சந்தைப்படுத்தவோ சட்டப்படி இயலாது. இதன்மூலம் போலியாக உற்பத்தி செய்வதும் கள்ளச்சந்தையில் விற்பதும் கட்டுப்படுத்தப்படுகிறது.

அந்த வகையில், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் தொடர் முயற்சியின் காரணமாக, கள்ளக்குறிச்சி மரச்சிற்பம், கருப்பூர் கலம்காரி ஓவியம், தஞ்சாவூர் நெட்டி வேலை, அரும்பாவூர் மரச்சிற்பம் ஆகிய கைவினைப் பொருட்களுக்கு புவிசார் குறியீடு பதிவகம் மூலம் புவிசார் குறியீடு அங்கீகாரச் சான்றிதழ்கள் பெறப்பட்டுள்ளது. இந்தப் புவிசார் குறியீட்டின் மூலம் தமிழக கைவினைஞர்கள் படைப்புகள் உலகளவில் கொண்டுசென்று சந்தைப்படுத்துவதற்கு வாய்ப்பாக அமையும்.

தீபாவளிப் பண்டிகையினை முன்னிட்டுத் தமிழரின் கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் நவீன முறையில் கைத்தறி நெசவாளர்களால் உருவாக்கப்பட்ட காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள் 100 புதிய வடிவமைப்புகள், ஆரணி பட்டுச் சேலைகள் 25 புதிய வடிவமைப்புகள், திருபுவனம் பட்டுச் சேலைகள் 50 புதிய வடிவமைப்புகள், சேலம் & கோயம்புத்தூர் பட்டுச் சேலைகள் 200 புதிய வடிவமைப்புகள், சின்னாளப்பட்டி பட்டு / பருத்திச் சேலைகள் 75 புதிய வடிவமைப்புகள், நெகமம் பருத்திச் சேலைகள் 40 புதிய வடிவமைப்புகள், திண்டுக்கல் & பரமக்குடி பருத்திச் சேலைகள் 80 புதிய வடிவமைப்புகள், லினன் சேலைகள் 25 புதிய வடிவமைப்புகள், ஆடவருக்கான கைலிகள் 75 புதிய வடிவமைப்புகள், பவானி கோர்வை ஜமக்காளம் 30 புதிய வடிவமைப்புகள் மற்றும் குழந்தைகளுக்கான காஞ்சிபுரம் பட்டுப்பாவாடை சட்டை 50 புதிய வடிவமைப்புகள் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் வாயிலாகத் ‘‘தமிழ்த்தறி’’ என்ற தொகுப்பு.

இந்தியாவில் முதன்முதலாக கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் சரிகை உத்தரவாத அட்டை.

சுற்றுச்சூழலுக்கு உகந்த மென்மையான இயற்கைப் பருத்தி நூலினை உபயோகித்துப் பச்சிளம் குழந்தைகளுக்கான புதிய ஆர்கானிக் ஆடை இரகங்கள்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் புதிய முயற்சியாகப் பெண்களைக் கவரும் வகையில் ஆதிரை கலெக்சன்ஸ் வகையான அச்சிடப்பட்ட பட்டுப்புடவைகள், டிஜிட்டல் பிரிண்டிங் பட்டுப்புடவைகள், கையினால் வர்ணம் தீட்டப்பட்ட பட்டுப்புடவைகள், மெல்லிய ரக பருத்தி இழைப் புடவைகள் ஆகியவற்றையும் தமிழ்த் தறியின் ஒரு பகுதியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிமுகப்படுத்தினார்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் நவீனக் காலத்திற்கேற்றவாறு சந்தையில் உள்ள இதரச் சோப்புகளுக்கு இணையாக ரோஸ், லேவண்டர், சந்தனம் மற்றும் செஞ்சந்தனம் எனும் 4 வகையான நறுமணங்களில் 125 கிராம் அளவுகளில் மக்கள் விரும்பும் வண்ணம் வாரிய கதரங்காடிகள் மற்றும் சந்தையில் பிரசித்திபெற்ற பல்பொருள் அங்காடிகளின் மூலம் விற்பனை செய்யும் திட்டத்தையும்,

காதி தேனை, பெட் பாட்டில்களுக்கு மாற்றாக நவீனக் கண்ணாடி பாட்டில்களில் அடைத்துப் பொதுமக்களைக் கவரும் வண்ணம் 250 கிராம் மற்றும் 500 கிராம் அளவுகளில் அக்மார்க் தரத்துடன் தேன் விற்பனையையும்,

பனைத் தொழிலில் ஈடுபட்டு வரும் பனை விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் பொருட்டு ‘‘கற்பகம்’’ என்ற பெயரில் நியாய விலைக் கடைகள் மூலம் பனை வெல்லம் விற்பனை செய்யும் திட்டத்தையும்,

பல்பொருள் அங்காடிகளில் கரும்பனை எனும் பெயரில் பனை வெல்லம் விற்பனை செய்யும் திட்டத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்.

வணிகக் களத்தில் ஏற்பட்டு வரும் அபரிமிதமான மின்னணு தொழில் நுட்ப வளர்ச்சியினைக் கருத்தில்கொண்டு இளம் தலைமுறையினர் எளிதில் இணையதள சேவையினைப் பயன்படுத்தித் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய பொருட்களைக் கொள்முதல் செய்திட “tnkhadi” எனும் ஆண்ட்ராய்டு / iOS இயக்கக் கைப்பேசி செயலியை அறிமுகப்படுத்தி,

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஊராட்சி ஒன்றியம், சாயல்குடியில் ‘‘இராமநாதபுரம், சிவகங்கை’’ மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவு விற்பனை சம்மேளனத்திற்குச் சொந்தமான இடத்தில், பனைத் தொழிலை மேம்படுத்திடும் நோக்கில் மாநிலச் சமச்சீர் வளர்ச்சி நிதியின்கீழ் ரூ.53.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பனை வெல்லம் மற்றும் பனைப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி நிலையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

2020–2021ஆம் ஆண்டிற்கான பட்டு மற்றும் பருத்தி ஆகிய இரண்டு இரகங்களுக்கான சிறந்த நெசவாளர் விருதுகளையும், சிறந்த ஏற்றுமதியாளர் விருதுகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி, பாராட்டினார்.

அக்டோபர் 24 : மருது சகோதரர்கள் நினைவு நாள்

மாமன்னர் மருது சகோதரர்களுக்கு மரியாதை

மண்ணைக் காக்கும் போரில் மானமே பெரிது என -
மரணத்தைத் துச்சமென நினைத்த வீரமிகு மருது சகோதரர்கள்
வெள்ளையர்களால் தூக்கிலிடப்பட்ட நாள் இன்று!
தாய்மண்ணைக் காக்கத் தமிழ் மன்னர்களை
ஒருங்கிணைத்து, எதிரிகள் - துரோகிகளை
எதிர்கொண்டு சிம்மசொப்பனமாக விளங்கிய
மருதிருவரின் தியாகத்தைப் போற்றுவோம்!!

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் மதுரைத் தெப்பக்குளத்தில் உள்ள மாமன்னர் மருது சகோதரர்கள் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். (30.10.2021)

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் மாமன்னர் மருதுபாண்டியர்கள் நினைவு மண்டபத்தில், மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன் அவர்கள் மரியாதை (24.10.2021)

மாநிலத்தின் வளர்ச்சியில் அரசுக்கும் வங்கிகளுக்கும் இடையிலான கூட்டுறவு உறவின் தொடக்கம்...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் மாநில அளவிலான வங்கியாளர்கள் குழுக் கூட்டத்தில் ஆற்றிய உரை – 25.10.2021.

மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்களே, மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களே, தலைமைச் செயலாளர் அவர்களே, நிதித்துறைக் கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களே, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் தலைவர் அவர்களே, அரசு அதிகாரிகளே, வங்கி அதிகாரிகளே, உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தல் நடந்து முடிந்து – ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு நடைபெறும் முதல் கூட்டம் என்பதால் நீங்கள் இதுவரை தமிழ்நாடு அரசுக்கும் மக்களுக்கும் செய்துவரும் சேவைகளுக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சந்திப்பு மாநிலத்தின் வளர்ச்சியில் அரசாங்கத்திற்கும் வங்கிகளுக்கும் இடையிலான கூட்டுறவு உறவின் தொடக்கமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் திட்டங்களைச் செயல்படுத்துவதில் வங்கிகள் முக்கியப் பங்கு வகிக்கிறது. அதிலும் குறிப்பாக கொரோனாவில் இருந்து வென்று வரும் இக்காலகட்டத்தில் உங்களது பங்களிப்பு மிக மிக முக்கியமானதாகும்.

இப்போது மாநிலத்தின் பொருளாதாரத்தில் முக்கியமான துறைகளுக்குக் கடன் வழங்குவதை அதிகரிக்கவும்; பொருளாதாரம் புத்துயிர் பெறவும்; தொற்றுநோய்களின் போது பல குடும்பங்கள் அனுபவித்த வருமான இழப்பை மாற்றவும் வேண்டிய ஒரு முக்கியமான காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். எனவே, அரசும் வங்கிகளும் இந்த நேரத்தில் இணைந்து செயல்படுவது மிக முக்கியமானது என்பதால் இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

* கிட்டத்தட்ட ரூ.20 இலட்சம் கோடி ஜிஎஸ்டிபியுடன் நாட்டிலேயே இரண்டாவது பெரிய மாநிலப் பொருளாதாரமாகத் தமிழ்நாடு உள்ளது. தமிழக அரசு பல்வேறு முக்கிய நலத்திட்டங்கள் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்திக்கொண்டு இருக்கிறது. இது மாநிலத்தின் வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல், மக்களின் வளர்ச்சிக்குக் குறிப்பாக சமூகத்தின் ஏழை மற்றும் நலிந்த பிரிவினரின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தியுள்ளது. மக்களும் வளர வேண்டும் – தொழில் நிறுவனங்களும் வளர வேண்டும் – அரசும் வளர வேண்டும். அதுதான் உண்மையான வளர்ச்சி. இதில் எது ஒன்று தேய்ந்தாலும் அது வளர்ச்சி ஆகாது.

* கொரோனா காலத்துப் பின்னடைவுகள் என்று பட்டியலிட்டால் அது மிக மிக நீளமானது. ஆனால் அதே நேரத்தில் அது பல நன்மைகளை மறைமுகமாகச் செய்துள்ளது. நம்மை யார் என்று நமக்கே காட்டி இருக்கிறது. கொரோனா என்ற உலகளாவிய பெருந்தீமையை வெல்லும் ஆற்றல் உள்ளவர்கள் நாம் என்பதை நமக்கே காட்டி உள்ளது. ஒரு சில மாதங்களில் நமது மாநிலத்தின் மருத்துவ உள்கட்டமைப்பை நாம் சீர் செய்தோம். இது போன்ற பேரிடர் காலத்தில் மருத்துவத்துறை மட்டுமல்லாது, அனைத்துத் துறைகளும் மருத்துவத்துறையாக உருமாற்றம் அடைந்து மாநிலத்தையும் மாநில மக்களையும் நாம் காப்பாற்றினோம். ஊரடங்கு காலம் என்பது தவிர்க்க முடியாதது. ஊரடங்கு அறிவித்தால் மட்டுமே கொரோனா பரவும் சங்கிலியை உடைக்க முடியும். அதே நேரத்தில் ஊரடங்கு காரணமாக ஏழை எளிய நடுத்தர மக்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டார்கள். அந்த மக்களுக்கு ரூ.4,000 வழங்கினோம். 14 வகையான மளிகைப் பொருட்களை வழங்கினோம். மாநில விற்பனை வரியைக் குறைத்ததன் மூலம் பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ.3 குறைக்கப்பட்டது. பல்வேறு நிதிச் சுமைக்கு இடையில்தான் இதனை வழங்கினோம். இதற்கு ஒரே காரணம், மக்களைக் காக்கவேண்டும் என்ற அரசின் நோக்கம்தான். நேற்றும், இன்றும், நாளையும் தி.மு.க. அரசின் ஒரே நோக்கம் இது ஒன்றுதான். இந்த நோக்கத்துக்கு வங்கிகளும் உதவ வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்!

* ஏழை எளிய மக்கள், விளிம்புநிலை மக்களின் உயர்வுக்கு வங்கிகள் உழைக்க வேண்டும். வங்கிச் சேவைகள் அவர்களுக்குப் பயன்பட வேண்டும். தமிழக அரசால் வகுக்கப்பட்ட பல்வேறு திட்டங்கள் மக்களுக்குப் பயன்தர அரசுடன் வங்கிகள் இணைந்து செயல்பட வேண்டும். அரசாங்கம் திட்டமிடுகிறது. மக்களுக்கு ஓரளவு நிதி உதவி செய்கிறது. கூடுதல் நிதியை அந்த மக்கள் வங்கிகள் மூலமாகப் பெறுகிறார்கள். அந்தத் தேவையை வங்கிகள் பூர்த்தி செய்தாக வேண்டும். கடன்களை சும்மா தருவது இல்லை. சும்மாவும் தர முடியாது. தகுதியானவர்களுக்குக் கடன்களைக் கொடுப்பதன் மூலமாக வங்கியும் வளரும், மக்களும் வளர்வார்கள். இந்தப் பரஸ்பர நிதி நட்பானது நிலைத்து நீடிப்பது என்பது மாநிலத்தின் நிதி வளர்ச்சிக்கும் மக்களின் வளர்ச்சிக்கும் உதவியாக அமையும்.

* தி.மு.க. ஆட்சி என்பது சுயநிதிக் குழுக்களின் பொற்கால ஆட்சி ஆகும். சுயஉதவிக்குழு இயக்கம் தமிழ்நாட்டில் 1989–1990ஆம் ஆண்டில் பிறந்தது. அதனை நான் உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்தபோது அதற்குத் தனிக்கவனம் செலுத்தி நடத்தினேன். அடுத்து வந்த ஆட்சியாளர்களால் அது திறம்பட நடத்தப்படவில்லை. சமூக மறுமலர்ச்சிக்குக் குறிப்பாகப் பெண்களின் உயர்வுக்கு இது மிக மிக முக்கியமான திட்டமாகும். பெண்களின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்குச் சுயஉதவிக் குழுக்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இந்த ஆண்டு வங்கிக் கடன் இணைப்புக்கு ரூ.20,000 கோடி இலக்கு உள்ளது. செப்டம்பர் 2021 வரை, ரூ.4,951 கோடி கடன்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு இலக்கை அடைய மீதமுள்ள தொகையையும் சேர்த்து வழங்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். இத்திட்டத்தின் மூலம் சுயஉதவிக் குழுக்கள் கடன்பெறுவதற்குத் தங்களின் கள அளவிலான செயல்பாட்டாளர்களுக்குத் தகுந்த அறிவுரைகளை வங்கிகள் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

* பிஎம் ஸ்வாநிதி என்பது கோவிட்–19 தொற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள தெருப்புறச் சின்னஞ்சிறு விற்பனையாளர்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை மீண்டும் தொடங்க மலிவு கடன்களை வழங்குவதற்கான சிறப்பு மைக்ரோ கிரெடிட் வசதித் திட்டமாகும். இத்திட்டத்தின் படி விண்ணப்பித்த அனைத்து விண்ணப்பதாரர்கள் கோரிக்கையையும் கனிவுடன் கவனிக்க வேண்டுகிறேன்.

* தேசிய நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு பல ஆண்டுகளாகச் சீரான அடிப்படையில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. வங்கிகள் இந்த செயல்திறனைத் தொடரவும், தகுதியான அனைத்து விண்ணப்பங்களுக்கும் கடன் கிடைப்பதை உறுதிசெய்யவும் வேண்டும். அதனால் அவர்களின் வாழ்வாதாரம் மேம்படும் என்பதை உங்களுக்கு நான் நினைவூட்டுகிறேன்.

* தமிழ்நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் இம்மாநிலத்தின் வளர்ச்சிக்கு அடிப்படையானவை ஆகும் என்று உங்கள் அனைவருக்கும் தெரியும். 49.48 இலட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் 96.73 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை வழங்குகின்றன.

* தமிழ்நாடு அரசு வங்கிக் கடன் அடிப்படையில் மூன்று சுயவேலைவாய்ப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. சமீப ஆண்டுகளில் மாநிலத்தில் உள்ள பல்வேறு வங்கிகளுக்குப் பரிந்துரைக்கப்பட்ட 1,37,429 விண்ணப்பங்களில், இதுவரை 35.67 விழுக்காடு மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளன. இந்த எண்ணிக்கையை உடனடியாக அதிகரிக்க வேண்டும்.

* இந்த ஆண்டில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை ஆதரிப்பதற்காகத் தமிழ்நாடு அரசு பல முக்கியமான முடிவுகளை அறிவித்துள்ளது. வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களால் இத்தகைய தொழில் நிறுவனங்களுக்குக் கடன்களை அதிகரிக்க அரசு மாநில அளவிலான கடன் உத்தரவாத நிதியை அமைக்கும். இது சிறு நிறுவனங்களைக் காப்பாற்றுவதாக அமையும். அதனை வளர்த்தெடுப்பதாக அமையும். கொரோனா தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்டது இந்த நிறுவனங்கள் ஆகும். எனவே, அதனை மீட்டெடுப்பது அரசின் முக்கியமான இலக்காக அமைந்திருக்கிறது. எனவே, அரசின் இரண்டு திட்டங்களையும் வங்கிகள் முழு மனதுடன் ஆதரிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

* அதேபோல், மாணவர்களுக்கான கல்விக் கடனையும் தமிழக அரசு முக்கியமானதாகக் கருதுகிறது. மாணவர்களுக்குத் தரமான உயர்கல்வி கிடைப்பதை அரசு உறுதி செய்துள்ளது. அந்தக் கல்வியை அடையப் பணம் தடையாக இருக்கக் கூடாது. எனவே, கல்விக் கடன்களை வழங்குவதன் மூலம் இந்த நோக்கத்தை மேம்படுத்துவதில் வங்கிகளுக்கு முக்கியப் பங்கு உண்டு. இங்குள்ள அனைத்து வங்கிகளும் சமுதாயத்தின் பின்தங்கிய பிரிவுகளைச் சேர்ந்த ஏழை மக்களுக்குக் கல்விக்கடன் வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

* விவசாயிகள் மாநிலத்தின் முதுகெலும்பாக உள்ளனர். அத்தகைய விவசாயிகளுக்குத் தேவையானதைச் செய்து கொடுக்கும் கடமை அரசுக்கும் இருக்கிறது, ஏன் உங்களைப் போன்ற வங்கிகளுக்கும் இருக்கிறது. கூட்டுறவு வங்கிகள் மற்றும் வணிக வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் கடன் வழங்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதேபோல், அனைத்து வங்கிகளும் செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

* கிசான் கிரெடிட் கார்டு திட்டத்தின்கீழ், இதுவரை 31.09 இலட்சம் கார்டுகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 7.16 இலட்சம் பயனாளிகளுக்கு விரைவாகக் கார்டுகள் வழங்கப்பட வேண்டும்.

* உணவு பதப்படுத்தும் தொழில்களின்கீழ், 104 விண்ணப்பங்கள் வங்கிகளில் நிலுவையில் உள்ளன. இந்த விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் கடன் வழங்குமாறு வங்கியாளர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். இதனால் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களுக்கு உரிய விலையைப் பெற முடியும்.

* மீன்பிடித் தொழில் என்பது நம்முடைய பாரம்பரியத் தொழில்களில் ஒன்றாகும். இத்தொழிலை நம்பி இலட்சக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள். இன்று மீன்பிடித் தொழில் நவீனமாகி வருகிறது. ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளைப் பயன்படுத்தியாக வேண்டும். இதனை வாங்குவதற்கு வங்கியாளர்கள் முடிந்த அளவிற்கு உதவிகளைச் செய்திட வேண்டும்.

* 2020–2021ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 13.08.2021 அன்று தாக்கல் செய்தார். அப்போது நிதித்துறையில் ஒரு சிறப்புப் பணிக்குழுவை அமைத்தார். அரசின் வங்கிக் கணக்குகளை ஆய்வு செய்யச் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது. அனைத்து வங்கிகளும் தங்களது கணக்கு விபரங்களை எங்களுக்கு அளித்துள்ளன. எதிர்காலத்தில் இந்தக் கவனத்தை இன்னும் நாங்கள் கூர்மைப்படுத்துவோம். அதற்கு அனைத்து வங்கிகளும் ஒத்துழைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

* கோவிட் தொற்றுநோயால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும், வளர்ச்சியை மீட்டெடுப்பதற்கும் வரவிருக்கும் நாட்களில் நமக்கு ஒரு பெரிய சவால் உள்ளது. ஏழை, எளிய மக்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரசுடன் வங்கிகள் கைகோர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சந்திப்பு மாநிலத்தின் வளர்ச்சியில் அரசாங்கத்திற்கும் வங்கிகளுக்கும் இடையிலான கூட்டுறவு உறவின் தொடக்கமாக இருக்கும் என்ற எனது நம்பிக்கையை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொண்டு, எனது உரையை நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கூட்டத்தின் நிறைவில் பேசியதாவது:

வங்கியைச் சார்ந்திருக்கக்கூடிய அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புவது, சுயஉதவிக்குழுவினருக்கான கடன், மாணவர்களுக்கான கல்விக் கடன் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருக்கு நீங்கள் முடிந்த அளவிற்குக் கடன் அளிப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள், அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். விரைவில் இதற்கான ஆக்கப் பணிகளில் ஈடுபட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கல்விக்காக, மகளிர் சுயஉதவிக் குழுவினருக்காக நீங்கள் வழங்கக்கூடிய கடனை ஒவ்வொரு மாவட்டமாக நீங்கள் வழங்குகின்றபோது, அப்படிப்பட்ட நிகழ்ச்சிக்கு முதலமைச்சர் என்ற முறையில் நானே நேரடியாக வருகிறேன் என்ற அந்தச் செய்தியையும் உங்களுக்குத் தெரிவித்து, உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

ரூ.11.36 கோடியில்

சமூக நலன், மகளிர் உரிமைத்துறைக்கான கட்டடங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 25.10.2021 அன்று தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் ரூ.11.36 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 5 ஒருங்கிணைந்த சேவை மையங்கள், தஞ்சாவூரில் ஒரு அரசுப் பணிபுரியும் மகளிர் விடுதி, தஞ்சாவூர் அரசினர் குழந்தைகள் இல்ல வளாகத்தில் பல்நோக்குக் கூடம், சென்னை அரசினர் கூர்நோக்கு இல்லம், சமூகப் பாதுகாப்புத்துறை இயக்குநரக அலுவலகம் மற்றும் இராயபுரம், அரசினர் குழந்தைகள் இல்ல வரவேற்புப் பிரிவு ஆகியவற்றிற்கான கூடுதல் கட்டடங்கள் ஆகியவற்றைக் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

ஒன்றிய அரசின் நிர்பயா திட்டத்தின்கீழ், பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்படும், நிராதரவாகக் கைவிடப்படும் பெண்கள், குழந்தைத் திருமணங்கள் மற்றும் குடும்ப வன்முறைகளால் பாதிக்கப்படும் பெண்களுக்குத் தற்காலிக தங்கும் வசதி, மருத்துவ உதவி, சட்ட உதவி, உளவியல் ஆலோசனை மற்றும் ஆற்றுப்படுத்துதல் உள்ளிட்ட ஒருங்கிணைந்த சேவைகளை ஓரிடத்தில் வழங்கும் வகையில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை வாயிலாக ஒருங்கிணைந்த சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. மாவட்டத்திற்கு ஒன்று வீதம், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் இம்மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

அந்த வகையில், கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகம், கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகம், நாகப்பட்டினம் அரசு தலைமை மருத்துவமனை வளாகம், திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகம் ஆகிய இடங்களில் தலா ரூ.48 இலட்சம் மதிப்பீட்டிலும், நீலகிரி மாவட்டம், உதகைமண்டலம் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகத்தில் ரூ.86 இலட்சம் மதிப்பீட்டிலும் என மொத்தம் ரூ.2.78 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 5 ஒருங்கிணைந்த சேவை மையங்கள்;

உழைக்கும் பெண்கள் பணி நிமித்தம் நகரங்களுக்கு இடம் பெயர்ந்து வருவதால், அப்பெண்களின் நலனைப் பாதுகாத்திடும் வகையிலும், பணிபுரியும் பெண்களின் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டும், மாநிலம் முழுவதும் பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில், தஞ்சாவூர் மாவட்டம், நாஞ்சிக் கோட்டையில் ரூ.1.47 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசுப் பணிபுரியும் மகளிர் விடுதி;

சமூகப் பாதுகாப்புத்துறை இயக்குநரகம் சார்பில் சென்னை, கெல்லீஸில் இயங்கி வரும் அரசினர் கூர்நோக்கு இல்லத்திற்கு இரண்டாம் கட்டமாக 17,567 சதுர அடி பரப்பளவில் ரூ.4.53 கோடி செலவில், சிறார்களைப் பாதுகாப்புடன் பராமரித்து அவர்களின் மறுவாழ்விற்குரிய பயிற்சிகள் வழங்கிடத் தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டடம்;

சென்னை, கெல்லீஸில் இயங்கி வரும் சமூகப் பாதுகாப்புத்துறை இயக்குநரக அலுவலகத்திற்குக் கூடுதல் இடவசதி ஏற்படுத்தும் பொருட்டு ரூ.1 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரண்டாம் தளம்;

இராயபுரம், அரசினர் குழந்தைகள் இல்ல வளாகத்தில் ஏற்கெனவே உள்ள வரவேற்புப் பிரிவுக் கட்டடத்தில் ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மருத்துவச் சிகிச்சை அறை, ஆற்றுப்படுத்துதல் அறை, பொழுதுபோக்கு அறை, அலுவலக அறை, துயிற்கூடம் உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகள் கொண்ட முதல் தளம்;

தஞ்சாவூரில் இயங்கி வரும் அரசினர் குழந்தைகள் இல்ல வளாகத்தில் ரூ.48.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பல்நோக்குக் கூடம்;

என மொத்தம், ரூ.11.36 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறைக்கானக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

ரூ.15.11 கோடியில்

கருவூல அலுவலகக் கட்டடங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 25.10.2021 அன்று தலைமைச் செயலகத்தில், நிதித்துறையின்கீழ்ச் செயல்படும் கருவூலக் கணக்குத்துறை சார்பில் ரூ.15.11 கோடி மதிப்பீட்டில் திருநெல்வேலி, காஞ்சிபுரம் மற்றும் திண்டுக்கல்லில் கட்டப்பட்டுள்ள 3 மாவட்டக் கருவூல அலுவலகக் கட்டடங்களையும், மணச்சநல்லூர், பூவிருந்தவல்லி, மயிலாடுதுறை, திண்டிவனம் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள 4 சார் கருவூல அலுவலகக் கட்டடங்களையும் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

மேம்பட்ட நிருவாக வசதிக்காகவும், அரசுக்கு ஏற்படும் தொடர் வாடகை செலவினத்தைக் குறைக்கவும், மின் ஆளுமை (e-Governance) திட்டங்களைத் துரிதமாகச் செயல்படுத்தவும், விலை மதிப்புமிக்க முத்திரைத்தாள்கள் மற்றும் சேம பாதுகாப்புப் பொருட்களைப் பாதுகாக்கவும், ஓய்வூதியர்களுக்கான வசதிகள் செய்து கொடுக்கவும், பணம் பெற்று வழங்கும் அலுவலர்களின் பட்டியல்களைத் துரிதமாக ஏற்பளிக்கவும், போதிய இடவசதியின்றி வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் மாவட்டக் கருவூல அலுவலகங்கள், சார் கருவூல அலுவலகங்களுக்குத் தமிழ்நாடு அரசால் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதன்மூலம் பொதுமக்களுக்கும், பணம் பெற்று வழங்கும் அலுவலர்களுக்கும், ஓய்வூதியர்களுக்கும் விரைவாகச் சேவை வழங்க வழிவகை ஏற்படும்.

அந்த வகையில், திருநெல்வேலியில் 21,400 சதுர அடி பரப்பளவில் ரூ.3.52 கோடி மதிப்பீட்டிலும், காஞ்சிபுரத்தில் 21,658 சதுர அடி பரப்பளவில் ரூ.4.96 கோடி மதிப்பீட்டிலும், திண்டுக்கல்லில் 10,671 சதுர அடி பரப்பளவில் ரூ.2.76 கோடி மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள 3 மாவட்டக் கருவூல அலுவலகக் கட்டடங்களையும்,

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணச்சநல்லூரில் 2,679 சதுர அடி பரப்பளவில் ரூ.1.02 கோடி மதிப்பீட்டிலும், திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லியில் 3,591 சதுர அடி பரப்பளவில் ரூ.85.89 இலட்சம் மதிப்பீட்டிலும், மயிலாடுதுறையில் 3,068 சதுர அடி பரப்பளவில் ரூ.99.10 இலட்சம் மதிப்பீட்டிலும், விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் 3,270 சதுர அடி பரப்பளவில் ரூ.99.75 இலட்சம் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள 4 சார் கருவூல அலுவலகக் கட்டடங்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

நமது அரசு
ஏழை, எளிய மக்களுக்கான அரசு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
பொருளாதார ஆலோசனைக் குழுவினருடனான
கூட்டத்தில் ஆற்றிய உரை – 25.10.2021

பேராசிரியர் ரகுராம் ராஜன் அவர்களே, பேராசிரியர் எஸ்தர் டப்லோ அவர்களே, பேராசிரியர் ழான் த்ரேஸ் அவர்களே, முனைவர் அரவிந்த் சுப்பிரமணியன் அவர்களே, முனைவர் எஸ். நாராயண் அவர்களே, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களே, தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் அவர்களே, வணக்கம்.

தமிழ்நாடு அரசு மீதும், தமிழ்நாட்டு மக்கள் மீதும் நீங்கள் வைத்துள்ள பற்றுக்கும் பாசத்துக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொருளாதார ஆலோசனைக் குழுவின் இரண்டாவது கூட்டத்தில் கலந்துகொள்ள நேரம் ஒதுக்கிய உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஜூலை 9ஆம் தேதி இந்த ஆலோசனைக் குழுவின் முதல் கூட்டம் நடந்தது. அதில் கலந்துகொண்டு பல்வேறு ஆக்கப்பூர்வமான கருத்துக்களை நீங்கள் சொன்னீர்கள். அந்தக் கருத்துகள் அனைத்தும் எங்களுக்கு ஊக்கமளிப்பதாகவும், வழிகாட்டுவதாகவும் அமைந்திருந்தது.

2021–2022ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நீங்கள் பரிந்துரைத்த பலவும் சேர்க்கப்பட்டுள்ளன.

முதியோர் ஓய்வூதியத் திட்டத்துக்கான நிதிஒதுக்கீடு கணிசமாக உயர்த்தப்பட்டு, அத்திட்டத்தினை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வயது முதிர்ந்தோரும் பயன்பெறும் வகையில் இல்லந்தோறும் மருத்துவச் சேவை சென்றடைய "மக்களைத் தேடி மருத்துவம்" என்ற புதிய திட்டத்தைத் தொடங்கியுள்ளோம்.

தடுப்பூசி குறித்த தயக்கத்தை மக்களிடம் இருந்து போக்கினோம். தடுப்பூசி செலுத்திக்கொள்ளத் தகுதியுடைய மக்களில் 72 விழுக்காட்டினருக்குக் குறைந்தபட்சம் ஒரு டோஸ் தடுப்பூசியாவது செலுத்தப்பட்டுள்ளது. மூன்று மாதங்களுக்கு முன்பு இருந்த நிலையை ஒப்பிடுகையில் இது மிகப்பெரிய முன்னேற்றமாகும்.

இந்தப் பெருந்தொற்றுக் காலத்தில் பள்ளிக் குழந்தைகளுக்கு ஏற்பட்டுள்ள கற்றல் இழப்புக் குறித்து நீங்கள் வழங்கிய கருத்துகள் மற்றும் பொதுமக்களிடம் இருந்து பெறப்பட்ட கருத்துகளின் அடிப்படையில், ரூ.200 கோடி மதிப்பீட்டில் "இல்லம் தேடிக் கல்வி" என்ற திட்டம் பள்ளிக்கல்வித்துறையால் வகுக்கப்பட்டுள்ளது. அடுத்த 6 மாதங்களில் தன்னார்வலர்களைக் கொண்டு, பள்ளி நேரத்திற்குப் பிறகும் பள்ளி வளாகங்களுக்கு வெளியையும் இழந்த கல்வியை ஈடுசெய்வதற்கான கல்வி வழங்கப்படும். இத்திட்டத்தினை முறைப்படி தொடங்கி வைக்கிறேன்.

புள்ளிவிவரங்களின் அடிப்படையில் முடிவு எடுக்க வேண்டும் என்பதை நீங்கள் இன்னொரு முக்கிய முன்னெடுப்பாகச் சுட்டிக்காட்டினீர்கள். இதுதொடர்பான முக்கிய அறிவிப்புகளை நிதிநிலை அறிக்கையில் வெளியிட்டுள்ளோம். இதற்கு ஒரு எடுத்துக்காட்டுச் சொல்ல வேண்டுமானால் நகைக்கடன்கள் ரத்து என்ற முடிவாகும். தேர்தல் அறிக்கையில் கூட்டுறவு வங்கிகளில் 5 சவரனுக்குக் குறைவாக வைத்துக் கடன் வாங்கியவர்களது கடன் ரத்து செய்யப்படும் என்று சொல்லி இருந்தோம். ஆனால், இதில் கடந்த ஆட்சியில் பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளதை அறிந்தோம். அப்போதுதான் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் முடிவுகள் எடுத்தோம்.

அந்தப் பயனைப் பெறுவதற்கான தகுதி வாய்ந்தவர்களைக் கவனமுடன் கண்டறிந்து அது நடைமுறைப்படுத்தப்படும் என்று முடிவெடுத்தோம். இந்த அணுகுமுறையின் மூலம் இத்திட்டத்திற்காக முதலில் உத்தேசிக்கப்பட்ட தொகையில் மூன்றில் ஒரு பங்காகக் குறைந்துள்ளது. மற்ற முன்னெடுப்புகளிலும் அதேபோலான தரவு அடிப்படையிலான அணுகுமுறை மேற்கொள்ளப்படும்.

''பயனுள்ள முடிவினை எடுக்கத் தரவினைப் பயன்படுத்துதல்'' என்ற மிக முக்கியமான ஆலோசனையைப் பேராசிரியர் எஸ்தர் டப்லோ அவர்கள் சொன்னார்கள். இதனை மனப்பூர்வமாக நான் வரவேற்கிறேன். ''தரவு அடிப்படையிலான முடிவெடுக்கும் ஆதார அமைப்பு'' குறித்து ஏற்கெனவே அரசு விரிவான அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது. அரசின் பல்வேறு திட்டங்களுக்கு உதவ, திட்டமிட, செயல்படுத்தத் தமிழ்நாடு இ–கவர்னன்ஸ் முகமைக்குப் பல்வேறு துறைகள் தரவுகளைப் பகிர்வதை இது உறுதிப்படுத்தியுள்ளது.

அதேபோல், குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் நிலுவைத் தொகைகளை மாற்றியமைப்பதன் மூலம் அவர்களுக்கு உதவும் வகையிலான சிறப்புத் திட்டத்துக்கு ரிசர்வ் வங்கியின் உதவியையும் நாங்கள் நாடியிருக்கிறோம். இதனை இங்கு உங்களிடையே எடுத்துக்கூறுவதன் காரணம் என்னவென்றால், நீங்கள் அளிக்கும் ஆலோசனைகள் மற்றும்பரிந்துரைகளைநாங்கள்மிகவும்முக்கியமானதாகக் கருதி, அவற்றை எங்களால் இயன்றவரை விரைவாகச் செயல்படுத்துவோம் என்ற நம்பிக்கையை உங்களுக்கு அளிப்பதற்காகத்தான்.

அந்த உணர்வோடுதான், மேலும் உங்கள் யோசனைகளை இன்றைய கூட்டத்தில் நாங்கள் கேட்கிறோம்.

முனைவர் அரவிந்த் சுப்பிரமணியன் அவர்கள் இந்திய அரசின் தலைமைப் பொருளாதார ஆலோசகராக இருந்தபோது வெளியான 2016–2017ஆம் ஆண்டின் பொருளாதார ஆய்வறிக்கையில், 'அனைவருக்கும் அடிப்படை வருமானம்' பற்றி ஒரு அத்தியாயமே உள்ளது. நிதிநிலை பாதிக்காமல் அத்தகைய திட்டத்தைத் தமிழ்நாட்டில் செயல்படுத்துவதற்கான சிறந்த வழிமுறைகள் பற்றி உங்கள் கருத்துகளைத் தெரிந்துகொள்ள ஆர்வமாக உள்ளேன்.

கொரோனாவுக்குப் பிந்தைய நிலைக்கேற்பத் தற்போது நாம் திட்டமிட்டாக வேண்டியுள்ளது. விளிம்பு நிலையில் உள்ளோரைத் தொடர்ந்து பாதுகாப்பதுடன் இணைந்து; வளர்ச்சியையும் முதலீட்டையும் தமிழ்நாட்டில் எப்படி நாம் மீட்டெடுக்கப் போகிறோம் என்பதே எனது முதன்மையான கவலை. அதுபற்றி உங்கள் கருத்துகளைக் கேட்க ஆவலாக உள்ளேன்.

முதலீட்டை ஊக்குவிக்கத் தமிழ்நாடு அரசு கவனம் செலுத்த வேண்டிய துறைகள் எவை ? என்ற கேள்விக்கும் விரிவான விடையை எதிர்பார்க்கிறேன்.

தமிழ்நாட்டுக்கு என்று உள்ள தனிச் சிறப்பான வலிமைகளைப் பயன்படுத்துவது குறித்தும் உங்களது ஆலோசனைகள் தேவை! மாநிலத்தில் உள்ள படித்த இளைஞர்களுக்கு நல்ல வருமானத்தைப் பெற்றுத்தரும் வேலைவாய்ப்புகளை அளிப்பவையாக இத்துறைகள் அமைய வேண்டும்.

மாநிலத்தின் கடன் சுமையைக் குறைப்பது எனது முக்கியக் கவலை என்று நமது முதல் கூட்டத்திலேயே கூறியிருந்தேன்.

இன்றைய சூழலில், எந்த அளவுக்குக் கடன் சுமை இருக்கலாம். கடன் அளவுகளை எப்படிக் குறைப்பது ? என்பது குறித்து ஆலோசனைகளைக் கூறக் கேட்டுக் கொள்கிறேன்.

நமது அரசு மக்களுக்காக உள்ள அரசு; ஏழை எளியவருக்கான அரசு. நாம் எது செய்தாலும் அது அவர்களுக்குப் பயனளிப்பதாக இருக்க வேண்டும். இவை பற்றி மேலும் கருத்துகளைக் கூறுங்கள், குறிப்பாக, திட்டங்களின் பயன் உரிய பயனாளிகளுக்குச் சென்று சேர்வதை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளைக் கூறுங்கள் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை – 26.10.2021

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களே, தலைமைச் செயலாளர் அவர்களே, காவல்துறைத் தலைவர் அவர்களே, அரசினுடைய பல்வேறு துறைகளைச் சார்ந்திருக்கக் கூடிய செயலாளர்களே, காணொலிக் காட்சி வாயிலாக இக்கூட்டத்தில் பங்கேற்றுள்ளப் பல்வேறு மாவட்ட ஆட்சித் தலைவர்களே, காவல் ஆணையர்கள் மற்றும் காவல் கண்காணிப்பாளர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

இத்தகைய ஒரு அவசரக் கூட்டத்தை நமது அரசு ஏற்பாடு செய்திருக்கிறது என்று சொல்வதைவிட, இயற்கை ஏற்பாடு செய்திருக்கிறது என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

இயற்கையோட அழைப்பை ஏற்று நாம் இங்கே கூடி இருக்கிறோம். இயற்கையை முறையாகக் கையாண்டால் அது கொடை! முறையாகக் கையாளவில்லை என்றுச் சொன்னால், அதுவே பேரிடராக மாறிவிடும்.

இயற்கையை முறையாக எதிர்கொள்வதற்கு நாம் தவறும்போது, அது, தான் யார் என்பதை நமக்குச் சுட்டிக்காட்டி விட்டுச் சென்று விடுகிறது. எனவே, இயற்கையைக் கொடையாக எதிர்கொள்ளப் போகிறோமா அல்லது பேரிடராக மாற்றப் போகிறோமா என்பது நம்முடைய கையில்தான் இருக்கிறது.

இயற்கையின் சூழலானது காலந்தோறும் மாறிக் கொண்டே இருக்கிறது. சமீபகாலமாக அதன் மாறுதல் புதிராக இருக்கின்றது. குறிப்பிட்ட காலம் மழைக்காலம், குறிப்பிட்ட காலம் கோடைக்காலம் என்று வரையறுக்க முடியாத அளவுக்குக் காலமாற்றம் இப்போது கடுமையாகி வருவதை அதிகாரிகள் அனைவரும் முதலில் உணர்ந்து செயல்பட வேண்டும்.

இயற்கையின் சீற்றம் அதிகமாக இருக்கும் காலத்தில் மக்களைக் காக்க வேண்டிய பெரும் கடமை அரசுக்கும், அரசு அதிகாரிகளாகிய உங்களுக்கும்தான் இருக்கிறது. முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை விரைவாக எடுப்பது மட்டுமல்ல, எத்தகையப் பேரிடரையும் தாங்கும் வல்லமை கொண்டவர்களாக நம்மை நாமே தயார்ப்படுத்திக் கொள்ளவும் வேண்டும்.

ஒரு அரசாங்கத்தின் முதல் கடமை, மக்களுடைய உயிர் காத்தல். அந்தக் கடமையைச் சரிவரச் செய்வதற்காகத்தான் நாம் இங்கே கூடி இருக்கிறோம்.

தமிழ்நாட்டில் இன்றுமுதல், வடகிழக்குப் பருவமழை துவங்கப் போகிறது என்றும், இந்த வடகிழக்குப் பருவமழைக் காலத்தில், தமிழ்நாட்டிற்கு இயல்பான மழைப்பொழிவு கிடைக்கப்பெறும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளதை உங்கள் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

இந்த அக்டோபர் மாதத்திலேயே கன்னியாகுமரி, நீலகிரி, ஈரோடு உள்ளிட்ட ஒன்பது மாவட்டங்களில் மிக அதிக மழை பெய்துள்ளது. மேலும், 17 மாவட்டங்களிலும் அதிக மழை பெய்துள்ளது. எனவே, நாம் கவனத்துடன் பணியாற்ற வேண்டிய காலகட்டத்தில் உள்ளோம்.

கடந்த 24.09.2021 அன்று, 'வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆயத்தப் பணிகள்' குறித்து அனைத்துத் துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தி, விரிவான அறிவுரைகளை நான் வழங்கியிருக்கின்றேன்.

நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் 11.09.2021 அன்று முப்படையினைச் சார்ந்த அலுவலர்கள் உட்பட ஒன்றிய மற்றும் மாநில அரசு அலுவலர்களுடன் கூட்டம் நடத்தப்பட்டு, நீங்கள் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விரிவாக விவாதித்து, பல முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. அதில் சொல்லப்பட்ட கருத்துகளை நான் உங்களுக்கு நினைவூட்டத் தேவையில்லை.

அரசுத் துறையின் செயல்பாடும், பொதுமக்களின் எண்ணமும் ஒன்றிணைய வேண்டும். இயற்கையை எதிர்கொள்ளும் மனநிலையை மக்களுக்கு முதலில் உருவாக்க வேண்டும். அதற்காக, முன்னெச்சரிக்கை முயற்சிகளாக அரசு எதையெல்லாம் செய்யவிருக்கிறது என்பதையும் மக்களுக்கு நீங்கள் தெளிவுபடுத்த வேண்டும். உங்கள் செயல்பாடுகள் அனைத்தும் மக்களோடு இணைந்தே இருக்கும்படி நீங்கள் திட்டமிட வேண்டும்.

இந்திய வானிலை ஆய்வு மையம் உள்ளிட்ட அரசு அமைப்புகளிலிருந்து வரப்பெறும் முன்னெச்சரிக்கை செய்திகள், சமூக ஊடகங்கள், அச்சு மற்றும் மின்னணு ஊடகங்கள் வாயிலாகவும், பொதுமக்களுக்கும், மீனவர்களுக்கும் உடனுக்குடன் நீங்கள் தெரிவிக்க வேண்டும்.

பேரிடர் காலங்களில் நன்கு சேவையாற்றக்கூடிய தன்னார்வத் தொண்டு அமைப்புகளை நீங்கள் தயவு செய்து ஊக்கப்படுத்த வேண்டும்.

சென்னையில் மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையமும், 38 மாவட்டங்களில் உள்ள மாவட்ட அவசரக் கட்டுப்பாட்டு மையங்களும், 24 மணி நேரமும் உரியத் துறை அலுவலர்களோடு செயல்படவேண்டும்.

இந்த மையங்களைப் பொதுமக்கள் **1070** மற்றும் **1077** என்ற கட்டணமில்லாத் தொலைப்பேசி எண்கள் மூலம் தொடர்புகொள்ளலாம். இந்தத் தகவல் அனைத்துப் பொதுமக்களுக்கும் தெரிந்திருக்க வேண்டும். 100 என்று சொன்னால், அது காவல்துறை. 108 என்று சொன்னால், அது அவசர ஆம்புலென்ஸ் என்று மக்கள் மனதிலே பதிந்திருக்கிறது. அதைப்போல, இந்த எண்களும் மக்கள் எளிதில் பயன்படுத்தும் சொற்களாக மாற வேண்டும்.

இந்த நேரத்தில் மீனவர்கள் குறித்துச் சிறப்புக் கவனம் செலுத்தியாக வேண்டும். ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்றுள்ள மீனவர்களுக்கும், கரையில் உள்ள மீனவர்களுக்கும், வானிலை முன்னறிவிப்புக் குறித்து, நவீனத் தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலமாகவும், மீன்வளத்துறை மூலமாகவும் தொடர்ந்து தகவல் தெரிவிக்க வேண்டும். இந்த மழைக்காலத்தில், அவர்களுடன் எப்போதும் தொடர்பிலிருந்து கொண்டேயிருக்க மீன்வளத்துறை தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அனைத்து மீனவர்களது உயிரும் நமக்கு முக்கியம் என்பதைக் கடலோர மாவட்டங்களைச் சார்ந்த ஆட்சியாளர்களும், காவல்துறை கண்காணிப்பாளர்களும் நினைவில் பதிய வைத்துக்கொள்ள வேண்டும்.

பருவமழைக் காலத்தின்போது மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அளிக்கப்பட்டுள்ள நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை நீங்கள் தவறாது பின்பற்ற வேண்டும்.

பாதிப்பிற்குள்ளாகும் பகுதிக்கெனத் தனித்தனியே பல்துறை மண்டலக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்.

குறிப்பாக, ஏழை எளிய மக்கள் வசிக்கும் குடிசைப் பகுதிகள், கடலோர மீனவக் குடியிருப்புகள் ஆகிய இடங்களின் நிலைமையை இந்தக் குழுக்கள் மூலம் தொடர்ந்து கண்காணித்து, உரிய நடவடிக்கைகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டும். தூர்வாரப்பட்டுள்ள மழைநீர் வடிகால்கள், வரத்துக் கால்வாய்கள், நீர்வழிப் பாதைகள் உள்ளிட்டவை சரியாக உள்ளனவா என்பதை நீங்கள் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

அவசரக்கால பணிகளை மாவட்டங்களில் மேற்கொள்ள பல்வேறு மாவட்டங்களுக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள செய்தியை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

அனைத்து மாவட்டங்களுக்கும், பெருநகரச் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 15 மண்டலங்களுக்கும், கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கண்காணிப்பு அலுவலர்கள், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் பல்துறை அலுவலர்கள், மாவட்டத்தில் பாதிப்பிற்குள்ளாகும் அனைத்துப் பகுதிகளையும் ஆய்வுசெய்து உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கடந்த 25ஆம் தேதியன்று சென்னையின் பல்வேறு இடங்களுக்கு நானே சென்று, நேரிடையாகப் பார்வையிட்டது உங்கள் அனைவருக்கும் தெரியும். காந்தி மண்டபம் சாலை மற்றும் இதரப் பகுதிகளில், வடிகால்கள் தூர்வாரக்கூடிய பணியினையும், வண்டல் வடிகட்டும் தொட்டிகளைத் (Silt Catch Pit) தூய்மைப்படுத்தும் பணியினையும், மழை / வெள்ளநீர் தங்குதடையின்றிச் செல்லக்கூடிய வகையில் வேளச்சேரி ஏரி மற்றும் பக்கிங்ஹாம் கால்வாயில் ஆகாயத் தாமரையினை அகற்றும் பணியினையும், பள்ளிக்கரணைச் சதுப்பு நிலத்தில் கழிவுகளை அகற்றும் பணியினையும், நாராயணபுரம் ஏரியில் அமைக்கப்பட்டு வரும் பெரும் வடிகால் பணியினையும் அன்று நேரிடையாக நான் சென்று பார்வையிட்டுப் பணிகளை விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன். இதேபோல் நீங்கள் அனைவரும் பணிகளை முடுக்கிவிட வேண்டும்.

செம்பரம்பாக்கம் மற்றும் புழல் ஏரிகளைக் கடந்த 20ஆம் தேதியன்று பார்வையிட்டு, உரிய பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு நான் அறிவுறுத்தியிருக்கிறேன்.

தற்போது தமிழ்நாட்டில் பரவலாக மழைபெய்து வரும் நிலையில், பெரும்பாலான அணைகள், நீர்த்தேக்கங்கள், ஏரிகள் முழு கொள்ளளவை எட்டியுள்ளன. எனவே, முழு கொள்ளளவை எட்டியுள்ள அணைகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் ஏரிகளைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

அணைகளில் உடைப்பு ஏற்படாமல் இருக்க அவ்வப்போது உபரி நீரை வெளியேற்றி, அணைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். வெள்ள அபாயம் ஏற்படுவதைத் தவிர்க்க அனைத்து நடவடிக்கைகளையும் நீங்கள் மேற்கொள்ள வேண்டும்.

நீர்வரத்துக் கால்வாய்களைத் தூர்வாரி, ஆக்கிரமிப்புகளை அகற்றி, நிலத்தடி நீரைச் செறிவூட்டவும், வெள்ள பாதிப்புகளைத் தவிர்க்கவும் உரிய நடவடிக்கைகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டும்.

அணைப் பாதுகாப்பு, அணைகள், நீர்த்தேக்கங்களிலிருந்து உபரி நீர் வெளியேற்றுவது தொடர்பான விதிமுறைகளைத் தவறாது பின்பற்றி,

உபரி நீர்த் திறப்புக் குறித்துப் பொதுமக்களுக்கு உரிய முன்னெச்சரிக்கைகளை வழங்கி உபரி நீரைத் திறந்து விட வேண்டும்.

பருவமழைக் காலத்தில் பொதுமக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை இருப்பில் வைப்பதற்கும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

பழுதடைந்த மின்கம்பங்களை மாற்றவும், தாழ்வாகச் செல்லக்கூடிய மின் கடத்திகளைச் சரிசெய்திடவும், Pillar Box-களை உயர்வான இடங்களில் வைக்கவும் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மழைநீர்த் தேங்குவதால் பயிர்கள் மூழ்கி சேதமாகும் சூழல் ஏற்பட்டு விடக்கூடாது. எனவே, வடிகால்களைத் தூர்வார வேண்டும். அறுவடை செய்த நெல்மணிகளும் பாதுகாக்கப்பட வேண்டும்.

மழைக் காலங்களில் நோய்கள் அதிகம் உருவாகி, பரவிடக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதனைத் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நீங்கள் எடுக்க வேண்டும்.

உயிர்காக்கும் மருந்துகள், மருந்து உபகரணங்கள், பாம்புக் கடிக்கான மாற்று மருந்து, ஆக்சிஜன் உருளைகள், மேம்படுத்தப்பட்ட மருத்துவ வசதிகள் போன்றவற்றைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

பாதிப்பிற்குள்ளாகும் மக்களை மீட்கும்போது, மாற்றுத் திறனாளிகள், குழந்தைகள், வயதானவர்களுக்கு முன்னுரிமை அளித்து மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான நிவாரண உதவிகளை மாவட்ட ஆட்சியர்கள் தாமதமின்றி வழங்க வேண்டும்.

இதற்கு அனைத்துத் துறையினரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். அனைத்துத் துறைகளுடைய ஒருங்கிணைப்புதான், அனைத்துப் பகுதிகளிலும் ஏற்படக்கூடிய அனைத்துப் பாதிப்புகளையும் தடுக்கும் என்பதை நீங்கள் அனைவரும் நன்றாக உணர்வீர்கள்.

'இயற்கையை இயைந்து வெல்வோம்!' என்ற அந்த உறுதியை நாம் எடுத்துக் கொள்வோம் என்று உங்களை மீண்டும் ஒருமுறை நான் கேட்டுக் கொண்டு, இத்துடன் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

"இல்லம் தேடிக் கல்வி" திட்டம் துவக்கம்

"இல்லம் தேடிக் கல்வி" திட்டத்தை விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டம், முதலியார் குப்பம் கிராமத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 27.10.2021 அன்று துவக்கிவைத்தார்.

"இல்லம் தேடிக் கல்வி" திட்டத்தின் அடிப்படையில், இக்கல்வியாண்டில் 6 மாத காலத்திற்கு, வாரத்திற்கு 6 மணி நேரம் தன்னார்வலர்களின் மூலம் மாணவர்களை அன்றாட கற்றல் செயல்பாடுகளில் எளிய முறையில் படிப்படியாகப் பங்கேற்கச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

"இல்லம் தேடிக் கல்வி" திட்டமானது தெரிவு செய்யப்பட்ட விழுப்புரம், கடலூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், மதுரை, திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி மற்றும் நீலகிரி ஆகிய 12 மாவட்டங்களில் 2 வாரக் காலத்திற்கு முன்னோட்ட அடிப்படையில் செயல்படுத்தப்படும். நவம்பர் 15ஆம் தேதிக்குப் பின்னர் அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் படிப்படியாகவும், தொடர் பணியாகவும் நடைபெறும்.

"இல்லம் தேடிக் கல்வி" திட்டத்தை அனைவருக்கும் கொண்டு செல்ல கலைக் குழுவினர் உதவியுடன் மிதிவண்டிப் பேரணி, வீதி நாடகம், பொம்மலாட்டம், கதை சொல்லுதல், திறன் மேம்பாட்டுச் செயல்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "இல்லம் தேடிக் கல்வி" திட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திட மாணவ, மாணவியரின் மிதிவண்டிப் பேரணியைக் கொடியசைத்துத் துவக்கிவைத்தார். மேலும், திட்டக் கையேட்டினையும், திட்டக் கருப்பொருள் பாடல் மற்றும் காணொலியையும் வெளியிட்டு, தன்னார்வலர்களுக்கான செயலியையும் தொடங்கிவைத்தார். அதனைத் தொடர்ந்து, பயிற்சி வகுப்புகள் நடைபெறும் இடத்திற்குச் சென்று மாணவ, மாணவியர்களுக்குக் கல்வி கற்பிக்கப்படுவதை பார்வையிட்டு, அவர்களுக்கு இனிப்புகள் மற்றும் கல்வி உபகரணங்களை வழங்கி, அவர்களுடன் உரையாடினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ''இல்லம் தேடிக் கல்வி'' திட்டத்தைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை :

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்களே, மாண்புமிகு அமைச்சர் செஞ்சி மஸ்தான் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களே, பள்ளிக்கல்வித் துறையின் முதன்மைச் செயலாளர் காக்கர்லா உஷா அவர்களே, 'இல்லம் தேடிக் கல்வி' என்கிற இனிய திட்டத்தைத் தொடங்கி வைக்கக்கூடிய இந்தச் சிறப்பான நிகழ்ச்சிக்கு அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மோகன் அவர்களே, நாடாளுமன்ற உறுப்பினர் அன்பிற்குரிய சகோதரர் திரு.ரவிகுமார் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.லட்சுமணன் அவர்களே, திரு. புகழேந்தி அவர்களே, திரு.சிவகுமார் அவர்களே, தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவர் மதிப்பிற்குரிய லியோனி அவர்களே, பள்ளிக் கல்வித் துறையைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகளே, அலுவலர்களே, அன்பிற்குரிய ஆசிரியப் பெருமக்களே, பாசத்திற்குரிய மாணவச் செல்வங்களே, தன்னார்வலர்களே, தொண்டு நிறுவனங்களின் பொறுப்பாளர்களே, தொலைக்காட்சி, பத்திரிகை, ஊடக நண்பர்களே, அன்பர்களே, உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

இல்லம் தேடிக் கல்வி என்ற சிறப்பான திட்டத்தை உருவாக்கி, இன்றைய நாள் செயல்படுத்தத் தொடங்கி இருக்கக்கூடிய பள்ளிக்கல்வித் துறை அமைச்சருக்கும், கல்வித் துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகளுக்கும் எனது மனப்பூர்வமான பாராட்டுதலை, வாழ்த்துதலை, நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

''கல்வியின் மிக்கதாம் செல்வமொன்று இல்லையே
கண்மணி கேளடா நீ என்றன் சொல்லையே!
செல்வம் பிறக்கும்; நாம் தந்திடில் தீர்ந்திடும்!
கல்வி தருந்தொறும் மிகச் சேர்ந்திடும்!'' – என்று பாடினார் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள்.

அவரது பாடலுக்கேற்ற செயலை இன்றைய நாள் இந்தப் பள்ளிக்கல்வித் துறை செய்துள்ளது. உள்ளபடியே நான் இன்றைக்கு ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கிறேன். எப்போதும் மகிழ்ச்சியாகத்தான் இருப்பேன், இப்போது அதிகமாக மகிழ்ச்சியாக இருக்கிறேன். குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்றால், என்னுடைய மகிழ்ச்சிக்குக் கூடுதலான ஒரு காரணம் இருக்கிறது. என்னுடைய ஆருயிர் நண்பர் என்னுடைய வாழ்க்கையில் ஏற்படக்கூடிய சுக, துக்க நிகழ்ச்சிகளில் ஒரு உடன்பிறப்பாக, ஒரு தம்பியாக, ஒரு சகோதரனாக, ஏன், ஒரு தொண்டனாக இருந்து எனக்குத் துணைநின்றவர் மறைந்த அன்பில் பொய்யாமொழி அவர்கள். இந்த நிகழ்ச்சியில் அவரை நினைத்து நான் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறேன். காரணம், தன்னுடைய மகன் இன்றைக்குப் பள்ளிக் கல்வித் துறையின் அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டு, அந்தக் கல்வித்துறை மூலமாகச் செய்து வரக்கூடிய செயல்களையெல்லாம் பார்த்தால், அவருடைய தந்தை பொய்யாமொழி எந்த அளவுக்குச் சந்தோஷப்பட்டிருப்பாரோ, அத்தகைய பெருமையை நான் இன்றைக்கு அடைந்து கொண்டிருக்கிறேன்.

இல்லம் தேடிக் கல்வி என்பது சாதாரணத் திட்டமல்ல, எல்லாத் திட்டங்களையும் போல இதுவும் ஒரு திட்டம் என்று சொல்லிவிட முடியாது. இந்தத் திட்டம்தான் இலட்சக்கணக்கான மாணவ, மாணவியருடைய

வாழ்விலே ஒளியேற்றப் போகிறது. அதன் மூலமாக, நூற்றாண்டு காலத்திற்கு அறிவினுடைய வெளிச்சம் பரவ இருக்கிறது. மிகப்பெரிய கல்விப் புரட்சிக்கு, மறுமலர்ச்சிக்கு இந்த இடத்தில் அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. மிகப்பெரிய விஷயங்கள் எல்லாம் இப்படி சிறுசிறு அளவில்தான் தொடங்கப்பட்டது. நூற்றாண்டு காலமாக மறுக்கப்பட்ட கல்வியைத் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் வழியாகக் கொண்டு சேர்த்தது ஆரம்பக்கால திராவிட இயக்கம். திராவிடம் என்றால் என்ன என்று, சில கோமாளிகளும், அதைப்பற்றி அறியாதவர்களும் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறார்களே, இதுதான் திராவிடத்தின் கொள்கை மறந்துவிடக்கூடாது.

நீதிக்கட்சி தோன்றிய பிறகு சென்னை மாகாணத்தில் உள்ள மாநகராட்சிப் பள்ளிகளில் மாணவர்களுக்கு உணவளிக்கும் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அதைத் தொடர்ந்து, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் மறைந்த மதிப்பிற்குரிய எம்.ஜி.ஆர். அவர்கள் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுச் செழுமைப்படுத்தப்பட்டது.

இதுபோன்ற சிறப்புப் பெறப்போகக்கூடிய திட்டம்தான் இந்த ‘இல்லம் தேடிக் கல்வி’என்கிற திட்டமாகும்.

கொரோனா என்ற பெருந்தொற்றுக் காலத்தில் அனைத்துத் தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டார்கள் என்று சொன்னாலும், அதிகமாகப் பாதிக்கப்பட்டது யார் என்று கேட்டால் நம்முடைய மாணவர்கள்தான். பள்ளிக்கு வந்து கல்வி கற்று வந்த அவர்களை வீட்டுக்குள் முடக்கி விட்டது கொரோனா என்ற பெருந்தொற்றுக் காலம். பள்ளிக்கூடம் என்ற பரந்த வெளியைப் பயன்படுத்த முடியாமல் வீட்டுக்குள் இருந்ததே குழந்தைகளின் மனதைப் பாதித்துவிட்டது. அது அவர்களது படிப்பைப் படிக்கும் முறையைப் படிப்பில் இருக்கக்கூடிய ஆர்வத்தைக் குறைத்துவிட்டது என்றே சொல்லலாம்.

இந்தப் பாதிப்பை எப்படிச் சரிசெய்வது என்று பள்ளிக் கல்வித்துறை அதிகாரிகள் சிந்தித்தார்கள். பள்ளிக்கு வந்து படிக்கக்கூடிய மாணவர்களுக்கு மேலும் கூடுதல் நேரத்தைப் பள்ளி நேரம் போலவே படிப்பில் பயன்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டதுதான் இந்த ‘இல்லம் தேடிக் கல்வி’!

உங்கள் வீட்டுக்கு அருகிலேயே இதற்காகத் தனியாக இடங்கள் தேர்வு செய்யப்படும். நாள்தோறும், ஒவ்வொரு நாளும் மாலையில் ஒரு மணி நேரமோ இரண்டு மணி நேரமோ வசதிக்கேற்ப, சூழ்நிலைக்கேற்ப ஆசிரியர்கள் வந்து உங்களைப் படிக்க வைப்பார்கள். உங்கள் வீட்டிற்கு அருகிலேயே இதற்காகத் தனியாக இடங்கள் தேர்வு செய்யப்படும். நாள்தோறும் மாலையில் ஒரு மணி நேரமோ, இரண்டு மணி நேரமோ தலைமை ஆசிரியர்களின் மேற்பார்வையில் – தன்னார்வலர்களின் ஒத்துழைப்போடு இந்தத் திட்டம் தொடங்கப் போகிறது.

பள்ளியோடு எங்கள் கடமை முடிந்துவிட்டது என்று கருதாமல்; வீட்டுக்கும் வந்து உங்களுக்குக் கற்றுத் தரக்கூடிய கடமையின் தொடர்ச்சிதான் ‘இல்லம் தேடிக் கல்வி’ என்கிற திட்டமாகும்.

எப்போதுமே ஏதாவது ஒரு நெருக்கடி ஏற்பட்டால்தான் புதிய பாதை அதன் மூலமாகத் திறக்கும். அப்படி கொரோனா என்ற நெருக்கடியில் உதயமானதுதான் இந்த ‘இல்லம் தேடிக் கல்வி’ என்ற திட்டமாகும்.

கொரோனா என்ற பெருந்தொற்றுக் குறைந்ததன் காரணமாக பல்வேறு தளர்வுகளை நாம் தொடர்ந்து அறிவித்துக் கொண்டிருக்கிறோம். அதில் முதலாவது, கல்வி நிலையங்களைத் திறந்தது ஆகும். முதலில் கல்லூரிகள் திறக்கப்பட்டன. அதைத் தொடர்ந்து 9, 10, 11, 12 ஆகிய வகுப்புகள் திறக்கப்பட்டன. அடுத்ததாக வருகிற நவம்பர் 1 முதல் ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை திறக்கப்பட இருக்கிறது.

இந்த ஊரடங்குக் காலத்தில் பள்ளிக்கு வந்து பயிலக்கூடிய சூழல் இல்லாவிட்டாலும் ஆன்லைன் வகுப்புகளை நடத்தி வந்தோம். ஆனால், நேரடிக் கல்வி தரும் பயனை ஆன்லைன் வகுப்புகளால் தரமுடியாது என்பதுதான் உண்மை. அதனால்தான் கற்றல் இடைவெளி ஏற்பட்டது. இப்படிக் கற்றல் இடைவெளி ஏற்படுவதற்கு மாணவர்களோ, பள்ளியோ, ஆசிரியர்களோ காரணம் அல்ல. கொரோனா காலச் சூழ்நிலை அதற்குக் காரணமாக அமைந்துவிட்டது. நடந்தது நடந்ததாக இருக்கட்டும். இனி நடப்பவை நல்லதாக இருக்கவேண்டும், அதை நடத்திக் காட்ட வேண்டும்.

மீண்டும் பள்ளியை நோக்கி வரும் மாணவர்களை, ஆசிரியர்கள் இனிமையாக நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பாடம் நடத்துவதோடு, மாணவர்களைப் பண்போடும் நடத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். கடந்தகாலக்

கசப்பை மறப்பதாக உங்களது கனிவு இருக்க வேண்டும். அதேபோல், மாணவ, மாணவியரும் படிப்பில் அதிக ஆர்வத்தைக் காட்ட வேண்டும், செலுத்த வேண்டும், கவனச் சிதைவுகள் இருக்கக் கூடாது. கொரோனாவால் இழந்த காலத்தை ஈடுகட்ட அதிகப்படியான முயற்சிகளை மாணவர்கள் செய்தாக வேண்டும்.

பள்ளி நேரத்தில் மட்டுமே மாணவர்களைப் பழைய நிலைக்கு மடைமாற்றம் செய்துவிட முடியாது. அதனால்தான் பள்ளி நேரம் முடிந்த பிறகும் சில மணிநேரங்கள் மாணவர்களுக்குப் பயிற்சிகள் தரப் போகிறோம். இதனை ஆசிரியர்களோடு சேர்ந்து தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் செயல்பட முன்வந்திருக்கிறார்கள். இந்த தன்னார்வலர்களையும், தொண்டு நிறுவனங்களையும் நான் மனதார வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற முறையில் அவர்களுக்கு நன்றி செலுத்தவும் நான் விரும்புகிறேன்.

தனித்துவம் கொண்ட இந்தத் திட்டம், வகுப்பறையைப் பள்ளிகளுக்கு வெளியையும் நீட்டிக்கச் செய்யும் மகத்தான முயற்சி. இத்திட்டம் மற்ற மாநிலங்களுக்கும் முன்னோடியாக இருக்கப் போகிறது.

தமிழ்நாடு சிறந்த கல்வித்துறை அலுவலர்களைக் கொண்ட மாநிலம். நம் கல்வித்துறை வலுவான கட்டமைப்பைக் கொண்டது. முதன்மைக் கல்வி அலுவலர்களும், மாவட்டக் கல்வி அலுவலர்களும், வட்டாரக் கல்வி அலுவலர்களும் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் அயராமல் பணியாற்றக்கூடிய வல்லமை பெற்றவர்கள்.

பெற்றோரும், ஆசிரியர்களும், அதிகாரிகளும், கற்ற இளைஞர்களும், பரந்த உள்ளம் பெற்றவர்கள். ஆகவே, நீங்களெல்லாம் ஒருங்கிணைந்து செயல்படுத்த வேண்டிய திட்டம் இந்தத் திட்டமாகும். இந்தத் திட்டம் மாலை நேரத்தையும் பள்ளியாக மாற்றப் போகிறது. வீடுகளிலிருந்து படிக்கும் சூழ்நிலை இல்லாத பிள்ளைகளுக்குப் பேருதவியாக இருக்கும். ஆசிரியர்கள் தங்கள் சேவையை மனமுவந்து ஆற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஓய்வுபெற்ற ஆசிரியர்களும் தங்கள் அறிவையும் அனுபவத்தையும் கொடையாக வழங்க விரும்பினால் அவர்களை இந்த அரசு வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறது. தன்னார்வலர்கள் அனைவரையும் நான் வரவேற்கிறேன். படித்த இளைஞர்கள் தங்களது ஓய்வு நேரத்தை இதில் பங்கெடுப்பதன் மூலமாகப் பயனுள்ளதாக மாற்றலாம்.

கல்வியைத்தான் நிரந்தரமான செல்வம் என்று சொல்கிறார் திருவள்ளுவர். யாராலும் அழிக்க முடியாத செல்வம் என்றும் சொல்கிறார். கல்வி அறிவைப் பயன்படுத்தப் பயன்படுத்த அந்தச் செல்வமானது அதிகமாகிக்கொண்டே போகும் என்றும் சொல்கிறார். அத்தகைய கல்விச் செல்வத்தை அனைத்துக் குழந்தைகளும் பெற்றாக வேண்டும். அதனால்தான் பள்ளிகள் முதல் பல்கலைக்கழகங்கள் வரையிலான கல்வியை மேம்படுத்துவதை மிக முக்கியமான நோக்கமாகத் திராவிட முன்னேற்றக் கழக அரசு அதை வகுத்து வைத்திருக்கிறது.

சமூகநீதி, சுயமரியாதை, மனிதநேயம், சமத்துவம் கொண்டவர்களாக நமது மாணவச் செல்வங்கள் வளர வேண்டும். அனைவருக்கும் கல்வி, அனைவருக்கும் வேலைவாய்ப்பு என்பது திராவிட இயக்கத்தினுடைய அடிப்படையான கொள்கைகளில் ஒன்று. அந்த அடிப்படை நோக்கங்களை அடைய இந்த இயக்கம் பெரும் புரட்சிகளை நடத்தியிருக்கிறது.

இன்னார்தான் படிக்க வேண்டும், இன்னார் படிக்கக் கூடாது என்று சொல்லக் கூடிய ஒரு காலம் இருந்தது. அதனை மாற்றிய இயக்கம்தான் நம்முடைய திராவிட இயக்கம், இது ஒரு கட்சியின் ஆட்சி அல்ல, இனத்தின் ஆட்சி என்பதை நான் முன்னரே சொல்லியிருக்கிறேன். மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்திலே சுயாட்சி என்ற மகத்தான தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கக்கூடிய இயக்கம்தான் நம்முடைய இயக்கம். ஆகவே, ஆட்சியியலின் இலக்கணம் என்று கம்பீரமாகச் சொல்லக்கூடிய ஆட்சி இந்த ஆட்சி. மாநில சுயாட்சி, மதச்சார்பின்மை, சமூக நல்லிணக்கம், சமத்துவம் ஆகிய தத்துவங்களை அரசியலில் மட்டுமல்ல, ஆட்சியியலில் முன்னெடுக்க நிலைக்கக்கூடிய ஆட்சி இந்த ஆட்சி. அந்த நெறிமுறைகளை வென்றெடுக்க எந்நாளும் உழைக்கக்கூடிய ஆட்சிதான் இந்த ஆட்சி. இந்த நெறிமுறைகள் சமூக, பொருளாதார கல்வித் திட்டங்களிலும் மின்ன வேண்டுமென்று நினைக்கக்கூடிய ஆட்சிதான் இந்த ஆட்சி. அந்த அடித்தளத்தில்தான், இதுபோன்ற திட்டங்களை நாங்கள் முன்னெடுத்து வருகிறோம். இதில் யாருக்கும் எந்தவிதமான சந்தேகமும் வேண்டாம்.

இன்றைக்கு அனைத்துச் சமுதாய மக்களும் கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் முன்னேறி அதிகாரம் செலுத்தும் இடத்துக்கு வளர்ந்து வந்திருக்கிறார்கள்

என்று சொன்னால், அதற்கு அடிப்படை, திராவிட இயக்கத்தை வலுவுடன் வழிநடத்தி; இந்த இனத்தின் அறிவையும், மானத்தையும் தட்டியெழுப்பிய தலைவர்களான தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் அவர்களும் போட்ட விதைதான்.

எல்லோருக்கும் எல்லாம் என்ற திசை நோக்கி இந்த நாட்டை வளர்க்கும் ஆட்சியாகத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி செயல்பட்டு வருகிறது. ஏழை, எளிய, விளிம்பு நிலை மக்களின் உயர்வுக்காகவும், பட்டியலின, பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுடைய மேன்மைக்காகவும் எத்தனையோ திட்டங்களை இந்த ஆட்சி செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

உயர்கல்வித் துறையாக இருந்தாலும், பள்ளிக்கல்வித் துறையாக இருந்தாலும், அனைவருக்கும் கல்வியை, உன்னதமான கல்வியை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். பார் போற்றும் பள்ளிக்கல்வித் துறையின் இந்தத் திட்டத்தின் வழியாகத் தமிழ்நாட்டை, ‘கல்வியில் சிறந்த தமிழ்நாடாக’ விரைவில் மாற்ற முடியும். பள்ளிக்கும் இல்லத்துக்குமான இடைவெளி குறையும். இல்லங்களும் பள்ளிகள் ஆகும். பள்ளிகளையும் இல்லங்களாக நினைத்து மாணவச் செல்வங்களே நீங்கள் பயனுற வேண்டும்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

மறந்து விடவில்லை, இன்றைக்கு நாம் மனதில் பதிய வைத்திருக்கின்றோம். நான் பல நிகழ்ச்சிகளில் சொல்லியிருக்கிறேன். இன்றைக்கு இந்தியாவில் இருக்கக்கூடிய மாநிலங்களையெல்லாம் ஒப்பிட்டுப்பார்த்து எத்தனையோ நிறுவனங்கள், எத்தனையோ பத்திரிகைகள் ஒரு மதிப்பெண் போட்டது. அந்த மதிப்பெண் போடுகிறபோது முதலமைச்சர் நம்பர் 1 மு.க.ஸ்டாலின் என்று போடுகிறார்கள், அதற்குப் பிறகு இரண்டாவது, மூன்றாவது, நான்காவது என்று வரிசைப்படுத்திப் போடுகிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், முதலமைச்சர் நம்பர் 1 என்று சொல்வதைவிடத் தமிழ்நாடு நம்பர் 1 என்ற நிலைக்கு வரவேண்டும், அதற்கு நீங்கள் துணை நிற்கவேண்டும் என்று அன்போடு கேட்டு விடைபெறுகிறேன்.

கடப்பாக்கம்
அரசு மேல்நிலைப்பள்ளியில் ஆய்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 27.10.2021 அன்று விழுப்புரம் மாவட்டம், முதலியார்குப்பத்தில் “இல்லம் தேடிக் கல்வி” திட்டத்தைத் தொடங்கி வைப்பதற்காகச் செல்லும் வழியில், செங்கல்பட்டு மாவட்டம், கடப்பாக்கத்தில் உள்ள பெ.கிருஷ்ணா அரசு மேல்நிலைப்பள்ளிக்கு நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வகுப்பறைகளுக்குச் சென்று ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கர்களிடம் உரையாடினார். கல்வியில் மிகுந்த கவனம் செலுத்துவதோடு, ஆசிரியர்கள், மாணாக்கர்கள் அனைவரும் கொரோனா பாதுகாப்பு நடைமுறைகளையும் தவறாமல் பின்பற்ற வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

பின்னர், பள்ளியின் அனைத்து வகுப்பறைகள், ஆய்வகம், உணவு தயாரிக்கும் கூடம் ஆகியவற்றையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டதோடு, மாணாக்கர்களுக்குத் தினசரி உணவு வழங்கும் பட்டியலில் உள்ளவாறு மதிய உணவு தயாரிக்கப்படுகிறதா என்பதையும் ஆய்வு செய்தார்.

முன்னோடித் திட்டமான “இல்லம் தேடிக் கல்வி” திட்டம் தமிழக பள்ளிக் கல்வியினை மேலும் மேப்படுத்தும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
அறிக்கை – 28.10.2021

மானுடம் இதுவரை சந்தித்திராத ஒரு பெருந்தொற்றிலிருந்து படிப்படியாக மீண்டு வருகிறோம். இந்தப் பெருந்தொற்றுக் காலத்தில் அதிக இழப்பைச் சந்தித்தவர்கள் பள்ளிக் குழந்தைகளே. பெருந்தொற்றால் பள்ளிகள் மூடப்பட்டதன் காரணமாக, மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள கற்றல் இழப்பை ஆய்வு செய்த கல்வியாளர்களும், யுனெஸ்கோ உள்ளிட்ட பன்னாட்டு அமைப்புகளும், தமிழ்நாடு அரசின் பொருளாதார ஆலோசனைக் குழுவிலுள்ள வல்லுநர்களும் அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில், தமிழ்நாடு அரசுப் பள்ளிக் கல்வித் துறை வாயிலாக, முழுவதும் மாநில அரசின் நிதியில் செயல்படுத்த இருக்கும் “இல்லம் தேடிக் கல்வி” திட்டம் 27.10.2021 அன்று தொடங்கப்பட்டுள்ளது.

இல்லம் தேடிக் கல்வித் திட்டம் மாணவர்களிடையேயும், ஆசிரியர்களிடையேயும், கல்வியாளர்களிடையேயும் சிறப்பான வரவேற்பைப் பெற்று வருகிறது. பள்ளிகள் பல மாதங்களாக மூடப்பட்டிருந்த நிலையில் ஏற்பட்டுள்ள கற்றல் பாதிப்பினைக் குறைக்கவும், சரிசெய்யவும், வேறு எந்த மாநிலமும், எந்தவொரு திட்டத்தினையும் செயல்படுத்தாத நிலையில், ஒரு முன்னோடித் திட்டமாக மாணவச் செல்வங்களும், அவர்தம் பெற்றோர்களும் எளிதில் அணுகிப் பெறும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் தங்களை இணைத்துக் கொண்டு மாணவர்களின் கல்வியினை மேம்படுத்துவதில் ஆர்வம் கொண்டவர்களைத் தன்னார்வலர்களாகத் தேர்வு செய்து, அவர்களுக்கு உரிய பயிற்சி வழங்கி இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதுவரை, 67,961 பெண்களும், 18,557 ஆண்களும், 32 திருநங்கையரும் என மொத்தம் 86,550 நபர்கள் இத்திட்டத்தில் சேவையாற்றப் பதிவு செய்துள்ளனர்.

இவ்வாறு பதிவு செய்தவர்களின் கல்வித் தகுதி, இருப்பிடம், முன்னனுபவம் போன்ற பல்வேறு அளவீடுகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட பள்ளி மேலாண்மைக் குழுக்கள் மூலம் நேரடியாகத் தேர்வு செய்யப்படுவர். இந்தப் பள்ளி மேலாண்மைக் குழுவில் பள்ளித் தலைமையாசிரியர், ஆசிரியர்கள், பெற்றோர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் இடம்பெறுவர். தேர்ந்தெடுக்கப்படும் தன்னார்வலர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

மாணவர்களின் எதிர்கால நலன் கருதி, கொரோனா பெருந்தொற்றால், கடந்த 19 மாத காலத்தில், கற்றலில் ஏற்பட்ட இழப்பைச் சரிசெய்யும் பெரும்பணியில் ஈடுபடவிருக்கும் ஆசிரியர்களுக்கு உறுதுணையாக விளங்கும் வகையிலேயே இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஆனால், இத்திட்டம் குறித்து ஊடகங்கள் வாயிலாகச் சில மாற்றுக் கருத்துகள் அரசின் கவனத்திற்குத் தெரிய வந்துள்ளது. அவற்றை அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டுள்ளது. தன்னார்வலர்களைத் தேர்வு செய்யும் முறை, அவர்களுடைய பங்களிப்பு, அவர்களால் கற்பிக்கப்படும் மாணவ, மாணவியரின் கற்றல் மேம்பாடு ஆகியவை தொடர்ந்து கல்வியாளர்கள் கொண்ட குழுவால் கண்காணிக்கப்படும். அரசின் வழிகாட்டுதல்களை முறையாகக் கடைப்பிடிப்பவர்கள் மட்டுமே தன்னார்வலர்களாகத் தொடர அனுமதிக்கப்படுவர்.

இதுமட்டுமல்ல; இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தின் வாயிலாகத் தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு இல்லத்திற்கும் நேரடியாகச் சென்று பள்ளி செல்லும் வயதுள்ள குழந்தைகள் அனைவரும் தொடர்ந்து பள்ளிக்கு வருவது உறுதி செய்யப்படும். மேலும், வருகிற கல்வியாண்டில் குறைந்தபட்சம் ஒரு இலட்சம் மாணவர்கள் அரசுப் பள்ளிகளில் கூடுதலாகச் சேர்க்கப்பட வேண்டும் என்பதையும் இலக்காகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

ஒன்றிய அரசு அறிமுகப்படுத்தியிருக்கும் புதிய கல்விக் கொள்கையைத் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப் போவதில்லை என்பது ஏற்கெனவே பலமுறை தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. மேலும், மாநில அளவிலான கல்விக் கொள்கையினை வகுத்திடக் கல்வியாளர் அடங்கிய குழு ஒன்று விரைவில் அமைக்கப்படும்.

மாணவர்களின் கல்வி நலனைக் கருத்தில் கொண்டு, தன்னார்வலர்கள் அரசுப் பள்ளிகளின் நல்லெண்ணத் தூதுவர்களாக, ஆசிரியர்களுக்கும், பள்ளிகளுக்கும், சமூகத்திற்கும் இணைப்புப் பாலமாகச் செயல்படுவர். எனவே, இத்திட்டத்தின் நோக்கத்தினைப் புரிந்துகொண்டு, அனைத்துத் தரப்பு மக்களும், இத்திட்டத்தினை ஆதரித்து, நம் மாணவச் செல்வங்களின் எதிர்காலத்திற்கு உதவிடும் வகையில், அரசுப் பள்ளிகளை வலுப்படுத்திடக் கைகோர்த்திட வேண்டும்.

ரூ.102.95 கோடியில் உயர்கல்வித்துறைக் கட்டடங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 28.10.2021 அன்று தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித்துறை சார்பில் செங்கல்பட்டு மாவட்டம், பெரும்பாக்கம், அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், அரசுக் கலைக் கல்லூரிகள், அரசு தொழில்நுட்பக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், அறிவியல் மையம் ஆகியவற்றில் ரூ.102.95 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகங்கள், பல்நோக்குக் கூடம், கூட்டரங்கம், கழிவறைகள், விடுதிகள், பணியாளர் அறைகள், புத்தாக்க மையம் ஆகியவற்றைக் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

செங்கல்பட்டு மாவட்டம், பெரும்பாக்கம், அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூ.3.42 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 12 கூடுதல் வகுப்பறைகள், 2 ஆய்வகக் கட்டடங்கள் மற்றும் இதரக் கட்டடங்கள்; இராஜேஸ்வரி வேதாசலம் அரசுக் கலைக் கல்லூரியில் ரூ.55 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 கூடுதல் வகுப்பறைகள்;

சென்னை மாவட்டம், வியாசர்பாடி, டாக்டர் அம்பேத்கர் அரசுக் கலைக் கல்லூரியில் ரூ.90 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பல்நோக்குக் கூடம்;

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூ.1.87 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 6 கூடுதல் வகுப்பறைகள், 2 ஆய்வகக் கட்டடங்கள் மற்றும் 2 கழிவறைத் தொகுதிகள்;

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர், அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 5 கூடுதல் வகுப்பறைகள் மற்றும் பணியாளர் அறை; கிருஷ்ணகிரி, அரசு மகளிர் கலைக் கல்லூரியில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 5 கூடுதல் வகுப்பறைகள்;

விழுப்புரம் மாவட்டம், டாக்டர் எம்.ஜி.ஆர் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூ.2.96 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 16 கூடுதல் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள்; விழுப்புரம், அறிஞர் அண்ணா அரசுக் கலைக் கல்லூரியில் ரூ.1.90 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 8 கூடுதல் வகுப்பறைகள் மற்றும் 1 ஆய்வகக் கட்டடம்; திண்டிவனம், திரு.ஆ.கோவிந்தசாமி அரசுக் கலைக் கல்லூரியில் ரூ.1.18 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 6 கூடுதல் வகுப்பறைகள்;

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு, பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூ.3.82 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 12 கூடுதல் வகுப்பறைகள், 4 ஆய்வகக் கட்டடங்கள்;

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு, அறிஞர் அண்ணா அரசுக் கலைக் கல்லூரியில் ரூ.61 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 கூடுதல் வகுப்பறைகள்;

மதுரை மாவட்டம், அன்னைத் தெரசா மகளிர் பல்கலைக்கழக ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையத்தில் ரூ.1.38 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 7 வகுப்பறைகள், 1 ஆய்வகம், 3 பணியாளர் அறைகள்; ஸ்ரீ மீனாட்சி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் ரூ.3.96 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 5 கூடுதல் வகுப்பறைகள், 1 ஆய்வகம் மற்றும் விடுதிக் கட்டடம்; கீழக்குயில்குடி, அண்ணா பல்கலைக்கழக மண்டல வளாகத்தில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாணவியர் விடுதி;

திண்டுக்கல் மாவட்டம், எம்.வி.எம் அரசு மகளிர் கலைக் கல்லூரியில் ரூ.1.76 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 7 வகுப்பறைகள், 1 ஆய்வகம்; நிலக்கோட்டை, அரசு மகளிர் கலைக் கல்லூரியில் ரூ.1.56 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 9 கூடுதல் வகுப்பறைகள் மற்றும் 1 ஆய்வகம்;

தேனி மாவட்டம், வீரபாண்டி, அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூ.86.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 7 கூடுதல் வகுப்பறைகள்;

விருதுநகர் மாவட்டம், சிவகாசி, அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூ.2.19 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 9 கூடுதல் வகுப்பறைகள், 1 ஆய்வகம் மற்றும் 3 கழிவறைத் தொகுதிகள்;

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி, அழகப்பா அரசுக் கலைக் கல்லூரியில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 6 கூடுதல் வகுப்பறைகள் மற்றும் பணியாளர் அறை;

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம், அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூ.1.70 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 6 கூடுதல் வகுப்பறைகள் மற்றும் 2 கழிவறைத் தொகுதிகள்; தொண்டாமுத்தூர், அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூ.7.97 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கல்விசார் மற்றும் நிருவாகக் கட்டடங்கள்; கோயம்புத்தூர் – கொடிசியா சாலையில் அமைந்துள்ள மண்டல அறிவியல் மைய வளாகத்தில் ரூ.1.80 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பள்ளி மாணவர்களின் புத்தாக்கத்திறனை மேம்படுத்தத் தொழில்நுட்பக் கருவிகள் மற்றும் ஆய்வக வசதிகளுடன் கூடிய புத்தாக்க மையம்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை நெடுஞ்சாலையில் அமைந்துள்ள அண்ணா அறிவியல் மைய வளாகத்தில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பள்ளி மாணவர்களின் புத்தாக்கத்திறனை மேம்படுத்தத் தொழில்நுட்பக் கருவிகள் மற்றும் ஆய்வக வசதிகளுடன் கூடிய புத்தாக்க மையம்;

திருப்பூர் மாவட்டம், பல்லடம், அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூ.2.55 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 9 கூடுதல் வகுப்பறைகள், 2 ஆய்வகங்கள் மற்றும் 4 கழிவறைகள்; திருப்பூர், சிக்கண்ணா அரசுக் கலைக் கல்லூரியில் ரூ.1.35 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 7 கூடுதல் வகுப்பறைகள், பணியாளர் அறைகள்; திருப்பூர், எல்.ஆர்.ஜி அரசு மகளிர் கலைக் கல்லூரியில் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 4 கூடுதல் வகுப்பறைகள், பணியாளர் அறை;

சேலம் மாவட்டம், எடப்பாடி, அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூ.5.21 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 15 கூடுதல் வகுப்பறைகள், 3 ஆய்வகங்கள் மற்றும் இதரக் கட்டடங்கள்;

நீலகிரி மாவட்டம், கூடலூர், அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 20 வகுப்பறைகள்;

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை, அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூ.2.74 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 10 வகுப்பறைகள் மற்றும் 3 ஆய்வகங்கள்;

கடலூர் மாவட்டம், திரு.கொளஞ்சியப்பர் அரசுக் கலைக் கல்லூரியில் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 5 வகுப்பறைகள்; கூடுவெளி, அரசுப் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிக்கு ரூ.23 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கல்விசார் மற்றும் நிருவாகக் கட்டடங்கள்;

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம், அரசு மகளிர் கலைக் கல்லூரியில் ரூ.89 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 கூடுதல் வகுப்பறைகள் மற்றும் 1 ஆய்வகம்; கும்பகோணம், அரசுக் கலைக் கல்லூரியில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 7 கூடுதல் வகுப்பறைகள் மற்றும் கூட்டரங்கம்;

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூ.2.68 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 13 கூடுதல் வகுப்பறைகள், 1 ஆய்வகம் மற்றும் 4 கழிவறைத் தொகுதிகள்;

திருநெல்வேலி மாவட்டம், இராணி அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரியில் ரூ.3.57 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 5 வகுப்பறைகள், கழிவறை மற்றும் மகளிர் விடுதிக் கட்டடம்; திருநெல்வேலி, கோவிந்தபேரி, அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூ.3.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 12 கூடுதல் வகுப்பறைகள், 1 ஆய்வகம் மற்றும் இதரக் கட்டடங்கள்;

தென்காசி மாவட்டம், காமராஜர் அரசுக் கலைக் கல்லூரியில் ரூ.1.93 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 6 கூடுதல் வகுப்பறைகள், 2 ஆய்வகங்கள் மற்றும் இதரக் கட்டடங்கள்;

என மொத்தம், ரூ.102.95 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்கல்வித்துறைக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக்காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்.

மதுரையில் திட்டப்பணிகள் ஆய்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 29.10.2021 அன்று மதுரை, தொண்டி சாலையில் கட்டப்பட்டு வரும் பல்வழிச்சாலை மேம்பாலப் பணிகள், ஓபுளாபடித்துறை மற்றும் குருவிக்காரன் சாலை சந்திப்புப் பகுதிகளில் தரைப்பாலத்தினை உயர்மட்டப் பாலமாக மாற்றியமைக்கும் பணிகள், வைகை ஆற்றங்கரையினை மேம்படுத்தும் பணிகள், கலைஞர் நினைவு நூலகம் அமையவுள்ள இடம் ஆகியவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மதுரை, தொண்டி சாலை மற்றும் மதுரை சுற்றுச் சாலை சந்திப்பில் ரூ.53.12 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பல்வழிச்சாலை மேம்பாலப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இப்பாலத்தின் மொத்த நீளம் 760 மீட்டர் நான்கு வழிப்பாதைக்கு ஏற்றவாறு சாலை ஓடுதளம் 22 மீட்டர் அகலத்திற்கு இரட்டைப் பாலமாகக் கட்டப்பட்டு வருகிறது. மொத்தமுள்ள 28 மேல்தளங்களில் 26 முடிவுற்றுள்ளன. திருச்சிராப்பள்ளி பக்கம் அணுகுசாலை அமைக்கும் பணியும் முடிவுற்றுள்ளது. தூத்துக்குடி பக்கம் அணுகுசாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பாலப் பணிகள் அனைத்தையும் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்க அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, குருவிக்காரன் சாலை சந்திப்புப் பகுதியில் ஆற்றின் குறுக்கே செல்லும் தரைப்பாலத்தினை ரூ.23.17 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலமாக மாற்றியமைக்கும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த உயர்மட்டப் பாலத்தின் நீளம் 200 மீட்டர், மொத்த அகலம் 17.70 மீட்டர் ஆகும். இப்பாலப் பணிகளை விரைந்து முடித்திடவும் உத்தரவிட்டார்.

பின்னர், ஓபுளாபடித்துறை பகுதியில் உள்ள தரைப்பாலத்தினை ரூ.23 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலமாக மாற்றியமைக்கும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மதுரை மாநகரில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் பொருட்டும், நகரின் மையப்



பகுதிக்குள் வெளியூர் செல்லும் பேருந்துகள் அதிக அளவில் வந்து செல்வதால் ஏற்படும் இடையூறுகளைத் தவிர்க்கும் வகையிலும் இந்தத் தரைப்பாலத்தினை உயர்மட்டப் பாலமாக மாற்றியமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்த உயர்மட்டப் பாலத்தின் நீளம் 223 மீட்டர், மொத்த அகலம் 17.50 மீட்டர் ஆகும். இப்பாலப் பணிகள் அனைத்தும் அடுத்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்குள் முடித்து, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர அறிவுறுத்தினார்.

சீர்மிகு நகரத் திட்டத்தின்கீழ், ரூ.84.12 கோடி செலவில் வைகை ஆற்றங்கரையினை மேம்படுத்தும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, ஆய்வு செய்து, அங்கு அமைக்கப்பட்டு வரும் பூங்காவில் மரக்கன்றினை நட்டுவைத்துச் சிறப்பித்தார்.

மதுரை மாநகர் பகுதியில் ராஜா மில் சாலை முதல் குருவிக்காரன் சாலை வரை வைகை ஆற்றுக் கரையின் இரு புறங்களிலும், கரையோரப் பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, அழகான நடைபாதை மற்றும் சாலை, இரண்டு இடங்களில் பூங்காக்கள், கழிப்பறை, அலங்கார விளக்குகள் ஆகியவை அமைக்கப்படவுள்ளன. மேலும், பல்பாலம் பகுதி மேம்படுத்தப்பட்டு சங்கத்தமிழ்ப் பாடல்களை நினைவூட்டும் வகையிலான ஓவியங்கள், கல்பாலம் முதல் ஓபுளாபாலம் வரை உள்ள பகுதிகளில் பொதுமக்கள் நடைப்பயிற்சி செய்யவும் மிதிவண்டிகளுக்கும் பாதை அமைக்கப்படவுள்ளது. வைகையாற்றின் கரையோரப் பகுதிகளில் 5.80 கி.மீ. நீளத்திற்குத் தடுப்புச்சுவர் அமைக்கும் பணி முடிவடைந்து, சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் ஜனவரி 2022க்குள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 97ஆவது பிறந்த நாளை முன்னிட்டுத் தமிழ்நாடு அரசின் சார்பில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளில், சங்கத் தமிழ் வளர்த்த மதுரையில் ரூ.70 கோடி செலவில் நவீன வசதிகளுடன் கலைஞர் நினைவு நூலகம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, மதுரை, புதுநத்தம் சாலையில் பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான 2.61 ஏக்கர் நிலத்தில், 2,22,815 சதுர அடி பரப்பளவில் நவீன வசதிகளுடன் கலைஞர் நினைவு நூலகம் அமைக்கப்படவுள்ள இடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மதநல்லிணக்க மாமனிதர்

"நான் பேசுவது, எழுதுவது, சிந்திப்பது, சேவை செய்வது எல்லாமே என் தேசத்துக்காகவே தவிர எனக்காக அல்ல" என்று வாழ்ந்தவர் பசும்பொன் தேவர் திருமகனார். தனது தேகத்தையே தேசத்துக்காக ஒப்படைத்தவர் அவர்!

"மனிதனை உயர்ந்தவர் தாழ்ந்தவர் என ஒழுக்கத்தின் பெயரால் மட்டுமே மரியாதை கொடுக்க வேண்டுமே தவிரச் சாதியால் அல்ல" என்று சாதி ஏற்றத் தாழ்வுகளுக்கு எதிராக முழங்கியவர் பசும்பொன் தேவர் திருமகனார். அனைவருக்குமான தலைவர் அவர்!

"பக்குவப்பட்ட ஒருவன், இந்து கோவிலில் காட்டுகின்ற தீப வெளிச்சத்தையும் – கிறித்துவ வளாகத்தில் வைக்கிற மெழுகுவத்தி ஒளியையும் – முகமதியர் ஊதுபத்தியில் காணுகின்ற சுடரையும் தன் உடலின் இருட்டைப் போக்க எழுப்ப வேண்டிய ஞான விளக்கின் வடிவமாகக் காண்பான்" என்று சொன்ன மதநல்லிணக்க மாமனிதர்!

"தனியாக இருக்கும்போது சிந்தனை செய்வதில் கவனம் செலுத்துங்கள். கூட்டத்தோடு இருக்கும்போது வார்த்தைகளில் கவனமாக இருங்கள்" என்று சொன்ன தத்துவஞானி!

"நேரம் வரும்போது யானையை எதிர்க்கும் வீரமும் தீரமும் – அதேநேரத்தில் எறும்பு கடிக்கும் போது கோபம் வராமல் வருடிக் கொடுக்கும் பொறுமைக் குணமும் அரசுக்கு அமைந்திருக்க வேண்டும்" என்று ஆட்சியாளர்களுக்கு இலக்கணம் வகுத்த அரசியல் மேதை! முழு இந்தியாவிலும் வாழ்க தமிழ்" என்று முழங்கிய தமிழ் ஆளுமை!

பசும்பொன் உ.முத்துராமலிங்கத் தேவர் முன்மொழிந்த இந்த முத்துமொழிகளைப் பின்பற்றி நடப்பதுதான் அவருக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலி!

வாழ்க அவரது புகழ்! வெல்க அவரது சிந்தனைகள்!

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள்

"தேசியமும் தெய்வீகமும் எனது இரு கண்கள்"

என வீரமுழக்கமிட்ட சுதந்திரப் போராட்டவீரர் தெய்வத் திருமகனார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 30.10.2021 அன்று, இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் நினைவிடத்தில் மரியாதை செலுத்தினார்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 114ஆவது பிறந்தநாள் விழா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் மதுரை, கோரிப்பாளையத்தில் உள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு மரியாதை செலுத்தினார்.

மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர், மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர், மாண்புமிகு ஊரகத் தொழிற்துறை அமைச்சர், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் ஆகியோர் சென்னை, நந்தனத்தில் உள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு மரியாதை செலுத்தினர்.

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் ஆகியோர் திருப்பூர், ஆறத்தொழுவு ஊராட்சி மன்ற அலுவலகத்தில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மரியாதை செலுத்தினர்.

> “மனிதனுக்கு இரண்டு கைகள் உள்ளன. ஒரு கை உணவு உண்பதற்கும், மற்றொன்று மனித உடலின் அசுத்தத்தை சுத்தம் செய்வதற்கும் பயன்படுத்துகிறது. ஆனால் எந்தவித ஏற்றத்தாழ்வும் காணாமல் கடவுளை வணங்கும்போது ஒரு கைகளையும் சமமாக வைத்துதான் வணங்குகிறோம். அதுபோல் அனைத்து மக்களும் சாதியால் பிளவுபடாமல் சமமாக இருக்கவேண்டும்.”
>
> - தெய்வத்திருமகனார்

கீழடி அகழாய்வுப் பணிகள் ஆய்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 29.10.2021 அன்று, சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், கீழடியில் பள்ளிச்சந்தைத் திடலில் 110 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள தொல்லியல் மேட்டில் நடைபெற்று வரும் அகழாய்வுப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

செம்மொழியாம் தமிழ்மொழியின் பெருமையையும், நாகரிகத்தையும், பண்பாட்டையும் உலகிற்கு எடுத்துரைக்கும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு, பண்டைய தமிழர்களின் செழுமையான பண்பாடு, கடல்வழி வணிகம், நீர் மேலாண்மை, இரும்பு உருக்குதல், அரிய மணிகள் தயாரித்தல், முத்துக் குளித்தல் போன்ற தொழில்நுட்பங்களை உலகம் அறிந்துகொள்ளத் தேவையான சான்றுகளைச் சேகரிக்கும் வகையில், அகழ்வாராய்ச்சிப் பணிக்காகவும், ஆழ்கடல் அகழாய்வுக்காகவும் ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு, ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை உள்ளிட்டப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வின்போது கிடைத்த அரிய பொருட்களை அழகுறக் காட்சிப்படுத்தும் விதமாக, திருநெல்வேலி நகரில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கூடிய அருங்காட்சியகம் அமைக்கும் திட்டம், தமிழ்ப் பண்பாட்டின் வேர்களைத் தேடி, இந்தியத் துணைக்கண்டமெங்கும், கடல்கடந்து பயணம் செய்து தமிழர்கள் வெற்றித்தடம் பதித்த வெளிநாடுகளிலும், தமிழ்நாடு தொல்லியல் துறை ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளும் திட்டங்களை அறிவித்து, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உலக அரங்கில் அனைவரது கவனத்தையும் பெற்று, தமிழரின் பண்பாட்டு அடையாளங்களை அள்ளிக் கொடுக்கும் கீழடிக்குக் கடந்த 2019ஆம் ஆண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது நேரடியாகச் சென்று, அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த அகழாய்வுப் பணிகளைப் பார்வையிட்டு, வியக்கவைக்கும் செங்கல் கட்டுமானங்கள், கருப்பு மற்றும் சிவப்பு வண்ணம் தாங்கிய பானை ஓடுகள், அரிய கல்மணிகள், தங்க அணிகலன்கள், சிந்துவெளி நாகரிகக் காலத்தில் காணப்பட்ட அதே திமில் கொண்ட காளையின் எலும்புகள், விளையாட்டுப் பொருட்கள், தொழிற்பகுதிகள் என செழுமைமிக்க சமூகமாக, சங்ககாலத் தமிழர்கள் வாழ்ந்த வரலாற்றைக் கண்டு பெருமிதமடைந்தார்.

கீழடி நாகரிகத்தின் தொன்மையையும், பண்பாட்டினையும் முழுமையாக உலகிற்கு எடுத்துரைக்கும் வகையில், தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை மூலமாக அகழாய்வுப் பணிகள் நடைபெற்று வரும் கீழடி அகழாய்வுத் தளத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 29.10.2021 அன்று, நேரில் சென்று அங்கு வைக்கப்பட்டுள்ள கீழடி அகழாய்வுகள் விளக்கக் காட்சியினைப் பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையால் கீழடி அகழாய்வுகளில் இதுவரை வெளிக்கொணரப்பட்டுள்ள 11,470 தொல்பொருட்களில், முக்கியத்துவம் நிறைந்த தொல்பொருட்களைக் காட்சிப்படுத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ள காட்சிக் கூடத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். பின்னர், கீழடியில் தற்போது அமைக்கப்பட்டுள்ள 8 அகழாய்வுக் குழிகளைப் பார்வையிட்டு, அகழாய்வுப் பணிகள் குறித்த விவரங்களைத் தொல்லியல் துறை அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

மேலும், சிவகங்கை மாவட்டம், கொந்தகை கிராமத்தில் கீழடி தொல்பொருட்களைக் காட்சிப்படுத்திட ரூ.12.21 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் உலகத் தரம் வாய்ந்த புதிய அகழ்வைப்பகத்தின் கட்டுமானப் பணிகள் குறித்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

“விடுதலைப் போரில் தமிழகம்” புகைப்படக் கண்காட்சி



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 01.11.2021 அன்று சென்னை, கோயம்பேடு புறநகரப் பேருந்து நிலைய வளாகத்தில் **75ஆவது சுதந்திரத் திருநாள் கொண்டாட்டத்தின்** தொடர்ச்சியாக, தமிழ்நாடு அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில், இந்திய விடுதலைப் போரில் இன்னுயிர் ஈந்தும், இடுக்கண்கள் ஏற்றும் சொல்லொணாத் தொல்லைகட்கு ஆட்பட்ட தீரத் தியாகிகளின் வீரப் பெருமிதங்களை நினைவுகூர்ந்து போற்றும் வகையில் **“விடுதலைப் போரில் தமிழகம்”** என்ற மாபெரும் புகைப்படக் கண்காட்சியைத் திறந்து வைத்தார்.

சுதந்திரத் தினத்தின் 75ஆம் ஆண்டு விழா மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபின் முதன்முறையாகக் கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்திட, தமிழ்நாடு அரசு சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அத்துடன், காமராஜர் சாலையில் காண்போரைக் கவரும் வகையில் கம்பீரமாக நிறுவப்பட்டுள்ள 75ஆம் ஆண்டு சுதந்திரத் தின நினைவுத் தூணையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றையதினம் திறந்து வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு, நாட்டின் விடுதலைக்கு அரும்பாடுபட்ட தலைவர்களைப் போற்றும் வகையிலும், குறிப்பாக, தமிழ்நாட்டைச் சார்ந்த தலைவர்களின் தியாகங்களை வருங்காலச் சந்ததியினரும் அறிந்துணர்ந்து பயன்பெறும் வகையிலும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அண்ணல் காந்தியடிகள், பண்டித ஜவஹர்லால் நேரு, மகாகவி பாரதியார், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார், வீரமங்கை வேலுநாச்சியார் ஆகியோரின் சிலைகள் இடம்பெற்று இக்கண்காட்சியைச் சிறப்பிக்கின்றன. ஏறத்தாழ இருபது முறை தமிழகத்திற்கு வருகைதந்து தமிழர்களை, தமிழகத்தை, தமிழ்மொழியை நேசித்த அண்ணல் காந்தியடிகளுக்கு விடுதலைப் போராட்ட வியூகங்களை வகுப்பதில் தமிழ்நாடு ஒரு முக்கிய களமாக விளங்கியதை வரலாறு போற்றிக் கொண்டுள்ளது. சீரிய அவ்வரலாற்று நிகழ்வுகள் பலவற்றை எடுத்துக் கூறும் அரிய புகைப்படங்கள், இந்திய விடுதலைப் போராட்டங்களின் பல்வேறு வரலாற்றுத் தொகுப்புகள், குறிப்பாக, உப்பு சத்தியாகிரகப் போராட்டம் சுதந்திரப் போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பு போன்றவை குறித்த புகைப்படங்கள், சுதந்திரப் போராட்டத்தில் பங்குபெற்றும் மக்களால் இதுவரை அறியப்படாத தியாகிகளின் புகைப்படங்கள் எனப் பலவும் இதில் இடம்பெற்றுள்ளன.

இவைமட்டுமல்லாமல், செய்தி மக்கள் தொடர்புத் துறையால் பராமரிக்கப்படும் நினைவகங்கள் மற்றும் தலைவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றிய புகைப்படங்கள், “தி இந்து” பத்திரிகை சுதந்திரப் போராட்டக் காலத்தில் வெளியிட்ட தியாக மாமணிகளின் அரிய புகைப்படங்கள், சுதந்திரப் போராட்ட வீரர்களின் உருவம் பொறித்த பழைய நாணயங்கள், அஞ்சல் தலைகள், பட்டயங்கள் ஆகியவையும் இடம்பெற்றுள்ளன.

அந்த வகையில், சென்னை, கோயம்பேடு புறநகர பேருந்து நிலைய வளாகத்தில் 75ஆவது சுதந்திரத் திருநாள் கொண்டாட்டத்தின் தொடர்ச்சியாக இந்திய விடுதலைப் போராட்டத் தியாகிகளின் வீரப் பெருமிதங்களை நினைவுகூர்ந்து போற்றும் வகையில் “விடுதலைப் போரில் தமிழகம்” என்ற மாபெரும் புகைப்படக் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், பத்திரிகைத் தகவல் அலுவலகம் (PIB) புத்தக நிலையம், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், பரிசல் புத்தக நிலையம் ஆகிய நிறுவனங்களின் பங்களிப்புகளும், தட்சிண சித்ரா குழுவினரால் அமைக்கப்பட்டுள்ள விடுதலைப் போராட்டம் பற்றிய அருமையான பழைய மண் பொம்மைகள், ஒலியோகிராப் படங்கள், மரத்திலான இராட்டை போன்றவை தமிழ்நாடு அரசு ஆவணக் காப்பகத்தின் மூலம் கட்டபொம்மன் தூக்கிலிட்டது குறித்து கிழக்கிந்திய கம்பெனிக்கு பானர்மேன் கொடுத்த அறிக்கை, மருது பாண்டியர்கள் தூக்கிலிடப்பட்ட விசாரணை ஆவணங்கள், ஆஷ்துரை கொலை வழக்கு பற்றிய ஆவணம், நீல் சிலை உடைப்பு குறித்த ஆவணம், வ.உ.சி. வழக்கு (திருநெல்வேலி சதி வழக்கு) ஆவணங்கள், செஞ்சிக் கோட்டை மற்றும் இதர கோட்டையின் நிலவரைகள், வேலூர் சிப்பாய் கலகம் பற்றிய வரலாற்று ஆவணங்கள் குறித்த புகைப்படங்களும் பார்வையாளர்களின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், நாட்டின் விடுதலைக்கு அரும்பாடுபட்ட தமிழ்நாட்டைச் சார்ந்த தலைவர்களின் தியாகங்களை வருங்காலச் சந்ததியினரும் அறிந்துணர்ந்து பயன்பெறும் வகையில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில், சென்னை, கோயம்பேடு புறநகர் பேருந்து நிலைய வளாகத்தில் “விடுதலைப் போரில் தமிழகம்” என்ற மாபெரும் புகைப்படக் கண்காட்சியை நவம்பர் 1ஆம் தேதி திறந்துவைத்தார்கள். பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க நவம்பர் 14ஆம் தேதி வரை இக்கண்காட்சி நடைபெற்றது.

இக்கண்காட்சியினை தினந்தோறும் ஆயிரக் கணக்கான பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் பார்வையிட்டுப் பயனடைந்தனர். இக்கண்காட்சியைப் பார்வையிட்ட திருப்பத்தூர் வாணியம்பாடியைச் சார்ந்த இசைவாணி அவர்கள் தெரிவித்ததாவது, “செய்தி மக்கள் தொடர்புத்துறையால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் புகைப்படக் கண்காட்சி மிகவும் அருமையாக உள்ளது. இந்திய விடுதலைக்காகப் பாடுபட்ட தமிழக வீரர், வீராங்கனைகள் அனைவருடைய வரலாறும் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. பள்ளி, கல்லூரி மாணவர்கள் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டிய அனைத்துத் தலைவர்களின் வரலாறும் இக்கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன. இக்கண்காட்சியை மிக அழகாக ஏற்பாடு செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்”.

சென்னை பெரம்பூர், ராஜலட்சுமி அவர்கள் தெரிவித்ததாவது, “இக்கண்காட்சியில் காணக் கிடைக்காத பல அரியப் புகைப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன. இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காகப் போராடிய தலைவர்களையும், தியாகிகளையும் நினைவுகூரும் வகையில் அமைந்துள்ளது. இக்கால இளைய சமுதாயத்தினருக்கு மிகவும் பயனுள்ளதாகவும் அமைந்துள்ளது. இக்கண்காட்சியை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்த தமிழக அரசுக்கு மனமார்ந்த பாராட்டுக்கள்”.

திருச்சி, கௌசல்யா அவர்கள் தெரிவித்ததாவது, “கண்காட்சி மிகவும் அருமையாகவும், பயனுள்ளதாகவும் அமைந்திருக்கிறது. மேலும், விடுதலைப் போரில் பங்கேற்ற பல தலைவர்களைப் பற்றி இன்று அறிந்துகொண்டேன். இக்கண்காட்சியைச் சிறப்பாக ஏற்பாடு செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், இக்கண்காட்சியை ஏற்பாடு செய்த செய்தி மக்கள் தொடர்புத்துறைக்கும் நன்றி”.

மணிகண்டன் அவர்கள் தெரிவித்ததாவது, “இக்கண்காட்சி பெரியோர்கள், சிறியோர்கள் அனைவருக்கும் சுவாரஸ்யமாக இருந்தது. இதுபோல் தொடர்ந்து கண்காட்சி நடத்தத் தமிழக அரசுக்கு வாழ்த்துக்களும் மற்றும் நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்”.

சோளிங்கர், சிவசைலம் அவர்கள் தெரிவித்ததாவது, “இக்கண்காட்சி மூலம் உண்மையாகவே விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவரையும் நினைவுக்கூர முடிந்தது. அனைத்து இந்தியர்களும், விடுதலைக்காகப் போராடி சுதந்திரம் பெற்ற போராட்ட வீரர்களின் வரலாற்றை அறிந்துகொள்ளும் வகையில் கண்காட்சி அமைந்துள்ளது. அனைவரும் விடுதலைப் போராட்ட வீரர்களை வணங்குவது ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் கடமை, அந்த வகையில் இக்கண்காட்சி மிக பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டுள்ளது”.

காஞ்சிபுரம், யுவராஜ் அவர்கள் தெரிவித்ததாவது, “கண்காட்சியில் காந்தி, நேரு போன்ற பல வரலாற்றுத் தலைவர்களின் புகைப்படங்கள், வரலாறுகள் மிக அருமையாகவும், வியக்கத்தக்கதாகவும் இடம் பெற்றுள்ளன. தமிழக அரசின் செயல்பாடுகள் மிகப் பாராட்டத்தக்கதாக உள்ளது”.

250 ஆண்டுகால இந்திய விடுதலைப் போராட்டத்தில் தமிழகத்தின் இடைவிடாத பங்களிப்பு

1751 – செப்டம்பர் 23 முதல் 1751 நவம்பர் 14 வரை ஆற்காடு கோட்டை, கிழக்கிந்தியக் கம்பெனியின் ராபர்ட் கிளைவ் என்பவரின் தலைமையில் முற்றுகை இடப்பட்ட நேரத்தில், சாந்தா சாஹேப் பிரெஞ்சுப் படையுடன் திருச்சியில் முற்றுகையில் ஈடுபட்டிருந்தார். ஆற்காட்டு நவாப் ஊரில் இல்லாத சமயத்தில், கோட்டையை நவாபின் சிறிய படையும், பிரான்ஸ் நாட்டின் கிழக்கிந்தியக் கம்பெனி படை வீரர்கள் சிலரும், சாந்தா சாஹேபின் சார்பில் கோட்டையைப் பாதுகாப்பதற்காக ஆற்காட்டில் தங்கி இருந்தனர். அப்போது நடந்த இரண்டாம் கருநாடக யுத்தத்தின் மூலம் கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவில் காலூன்றியது.

1755 – நெல்லையின் நெற்கட்டும்செவல் கோட்டையை முற்றுகையிட்டு வரிவசூல் செய்த கர்னல் ஹெரோனையும், அவனது படைகளையும் விரட்டியடித்து விடுதலைக்கு வித்திட்ட முதல் மாவீரன் பூலித்தேவன். 1750 முதல் 1767 வரை ஏறத்தாழ 17 முறை வெள்ளையர்களுக்கு எதிராகச் சண்டையிட்ட மாவீரன் பூலித்தேவன்.

1759 – வீரன் அழகுமுத்துக்கோன், ஆங்கிலேயர்களுக்குக் கப்பம் கட்டுவதைத் தடுத்தார். அவருடைய படையினர் சங்கிலியால் பிணைக்கப்பட்டு நடுக்காட்டூர் என்னும் இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர். மன்னிப்புக் கேட்டால் உயிர் மிஞ்சும் என்று கேட்டும் மன்னிப்புக் கேட்க மறுத்துவிட்டனர். பீரங்கி முன் அவரும் ஆறு தளபதிகளும் மார்பில் சுடப்பட்டு வீர மரணம் அடைந்தனர்.

1764 – மருதநாயகம் என்றழைக்கப்பட்ட முகமது யூசுப்கானை ஆங்கிலேயரும் ஆற்காட்டு நவாபுகளும் தமது எதிரியான தமிழகத்தைச் சேர்ந்த பாளையக்காரர்களுக்கு எதிராகப் போரில் ஈடுபடச்செய்தனர். பிற்காலத்தில் மதுரையை ஆளும் அதிகாரத்தினை இவருக்கு அளித்தபோதும் தம் வாழ்நாளின் இறுதியில் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியாளருக்கு எதிராகச் செயல்பட்டார். அக்டோபர் 15, 1764ஆம் ஆண்டில் மதுரை சம்மட்டிபுரம் பகுதியில் ஆங்கிலேயரால் தூக்கிலிடப்பட்டார்.

1792 – உடன்படிக்கை ஒன்றின் மூலம் ஆற்காட்டு நவாப்பிடமிருந்த ஆட்சிப் பொறுப்பை கிழக்கிந்தியக் கம்பெனி மேற்கொண்டது.

1795 – வெள்ளையர்களுக்கு அடங்க மறுத்த இராமநாதபுரம் மன்னர் ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி 1795ஆம் ஆண்டு பிப்ரவரி 8 அன்று ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டார். தொடர்ந்து 14 ஆண்டுகள் சிறைவைக்கப்பட்ட ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி மன்னர் சென்னை கோட்டையிலுள்ள சிறையில் 23.01.1809 அன்று இயற்கை எய்தினார்.

1799 – வெள்ளை அரசுக்கு வரி தர மறுத்து, 1792 முதல் 1798 வரை வெள்ளையருடன் போராடிய பாஞ்சாலங்குறிச்சி மன்னன் வீரபாண்டிய கட்டபொம்மன் வெள்ளையர்களால் கைது செய்யப்பட்டு, கயத்தாறில் தூக்கிலிடப்பட்டார். 1974ஆம் ஆண்டு கட்டபொம்மனின் தியாகத்தைப் போற்றி, அன்றைய தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் பாஞ்சாலங்குறிச்சியில் மாதிரி கோட்டையைக் கட்டினார்.



1801 – தென்னிந்திய விடுதலைப் போராளிகளில், ஆங்கிலேயரை எதிர்த்துப் போராட, முதன்முதலாக மக்களைத் திரட்டியவர்கள் சிவகங்கை சீமையின் மன்னர்களான மருது பாண்டியர்கள். 1801ஆம் ஆண்டு மருது சகோதரர்களின் புகழ்பெற்ற ஜம்புத்தீவு பிரகடனம் திருச்சி கோட்டையில் பிரகடனப்படுத்தப்பட்டது. இராமநாதபுரத்தின் அருகே அமைந்த திருப்பத்தூர் கோட்டையில் 1801 அக்டோபர் 24 அன்று மருதுபாண்டியர்கள் ஆங்கிலேயர்களால் தூக்கிலிடப்பட்டனர். இதே ஆண்டு கட்டபொம்மனின் தம்பிகளான ஊமைத்துரையும், செவத்தையாவும் பிடிக்கப்பட்டு 1801 நவம்பர் 16இல் பாஞ்சாலங்குறிச்சியில் வெள்ளையர்களால் தலை துண்டிக்கப்பட்டு வீரமரணம் அடைந்தனர்.

1805 – கோவைப் புரட்சியை நடத்திய தீரன் சின்னமலை வெள்ளையர்களால் 1805ஆம் ஆண்டு ஜூலை 31 அன்று சங்ககிரிக் கோட்டையின் உச்சியில் தூக்கிலிடப்பட்டார்.

1806 – வேலூர் கலகம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்து முதன் முதலில் இராணுவப் புரட்சி செய்தவர்கள் தமிழ்நாட்டுப் படைவீரர்களே; 1806, ஜூலை 10ஆம் தேதி வேலூர் கோட்டையில் வைக்கப்பட்டிருந்த இந்தியப் படைவீரர்கள், புரட்சி செய்து ஆங்கில அதிகாரிகளையும் வீரர்களையும் கொன்றனர். இந்தப் புரட்சி 1857இல் நடந்த சிப்பாய் கலகத்திற்கான ஒத்திகை ஆகும்.

1852 – சென்னைவாசிகள் சங்கம் தென்னிந்தியாவில், தொடங்கப்பெற்ற காலத்தால் முற்பட்ட இவ்வமைப்பு, தனிப்பட்ட குழுக்களின் விருப்பங்களைக் காட்டிலும் பொதுமக்களின் தேவைகளை அனைவருக்கும் தெரிவிப்பதை நோக்கமாகக் கொண்டு உருவானது. இவ்வமைப்பு 1852இல் காஜுலு லட்சுமிநரசு, சீனிவாசனார் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்களால் நிறுவப்பெற்றது.

1878 – இந்தியத் தேசிய நாளிதழ் 'தி இந்து' தோற்றம். ஜி. சுப்பிரமணிய ஐயர், முடும்பை வீரராகவாச்சாரியார் உள்ளிட்ட ஆறு இளைஞர்கள் இதனைத் தொடங்கினர். தமிழின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரம் வேதநாயகம் பிள்ளையால் எழுதப்பெற்றது. இந்நாவலில் ஆங்கில மொழியின் ஆதிக்கத்தை எதிர்க்கும் உரையாடல்கள் இடம்பெற்றன.

1882 – தமிழில் வெளிவந்த முதல் அரசியல் இதழான சுதேசமித்திரன் ஜி.சுப்பிரமணிய ஐயரால் தொடங்கப்பட்டது.

1884 – சென்னை மகாஜன சபை தென்னிந்தியாவில், தெளிவான தேசிய நோக்கங்களுடன் துவங்கப்பெற்ற தொடக்கக் கால அமைப்பு சென்னை மகாஜன சபையாகும். 1884 மே 16இல் மு.வீரராகவாச்சாரி, பி.அனந்தாச்சார்லு, பி.ரங்கையா மற்றும் சிலரால் நிறுவப்பட்ட இவ்வமைப்பின் முதல் தலைவராக பி.ரங்கையா பொறுப்பேற்றார்.

1885 – இந்தியத் தேசிய காங்கிரசின் முதல் கூட்டம் 1885 டிசம்பர் 28 அன்று பம்பாயில் கூடியது. சென்னை மாநிலத்தின் பிரதிநிதியாக ஜி.சுப்பிரமணிய ஐயர் கலந்துகொண்டார்.

1887 – இராவ்சாகிப் தஞ்சை மூக்கன் ஆசாரி மூன்றாம் காங்கிரஸ் மாநாட்டில் தமிழில் உரையாற்றியவர்.

1896 – அக்டோபர் 14 அன்று காந்தியடிகள் முதன்முறையாகத் தமிழகம் வந்தார்.

1898 – ஆங்கிலேயர்களை எதிர்த்து, மன்னர்களும் மக்களும் மட்டுமல்ல; தமிழ் இலக்கியங்களும் முழங்கின. ஆங்கிலேயர்களை எதிர்த்து "ஆங்கிலேய அந்தாதி" எழுதிய வண்ணச்சரபம் தண்டபாணிசாமிகள் மறைந்தார்.



1906 – வ.உ.சி.யும், மகாகவி பாரதியும் இணைந்து சென்னையில் சென்னை ஜனசங்கத்தைத் தோற்றுவித்தனர். 1906 அக்டோபர் 16ஆம் நாள் வ.உ.சியின் சுதேசிக் கப்பல் நிறுவனம் முறைப்படி பதிவு செய்யப்பட்டது.

மண்டையக் குடும்பத்தினரால் 1906ஆம் ஆண்டு இந்தியா பத்திரிகை தொடங்கப்பட்டது. இந்தியாவின் ஆசிரியர் மகாகவி பாரதியார்.

1908 – தூத்துக்குடி சதி வழக்கு 1908 மார்ச் 13இல் வ.உ.சியும், சிவாவும் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து நெல்லையில் கலகம் வெடித்தது. இதன் காரணமாக, 07.07.1908 அன்று வ.உ.சிக்கு இரட்டை ஆயுள் தண்டனையும், சிவாவுக்குப் பத்தாண்டு கடுங்காவல் தண்டனையும் ஆங்கிலேயர்களால் வழங்கப்பட்டது.

1911 – ஆஷ் கொலை – (திருநெல்வேலி சதி வழக்கு) 1904இல் நீலகண்ட பிரம்மச்சாரியும் வேறு சிலரும் பாரத மாதா சங்கம் எனும் இரகசிய அமைப்பை உருவாக்கினர். ஆங்கில அதிகாரிகளைக் கொல்வதன் மூலம் மக்களிடையே நாட்டுப்பற்று உணர்வைத் தூண்டுவதே இவ்வமைப்பின் நோக்கமாகும்.

செங்கோட்டையைச் சேர்ந்த வாஞ்சிநாதனின் உள்ளுணர்வு இவ்வமைப்பினால் தூண்டப்பட்டது. 1911 ஜுன் 17இல் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரான ராபர்ட் W.D.E. ஆஷ் என்பவரை மணியாச்சி இரயில் சந்திப்பில் வாஞ்சிநாதன் சுட்டுக் கொன்றார்.

1915 – 1915ஆம் ஆண்டு டிசம்பர் முதல் நாள் இந்தியாவிற்கு வெளியே "நாடு கடந்த இந்தியச் சுதந்திர அரசு" ஆப்கான் தலைநகர் காபூலில் அமைக்கப்பட்டது. இதன் மூளையாகச் செயல்பட்டவர் நாடு கடந்த இந்திய அரசின் வெளியுறவு அமைச்சரும், நாஞ்சில் தமிழருமான வீரன் செண்பகராமன்.

1916 – ஹோம்ரூல் லீக் 1916ஆம் ஆண்டு இந்திய அரசியலில் ஒரு புதிய அமைப்பு உதயமானது. ஹோம்ரூல் லீக் எனப்படும் தன்னாட்சி இயக்கம் தொடங்கப்பட்டது. இந்த இயக்கத்தைத் தொடங்கியவர் அன்னிபெசன்ட் அம்மையார், தொடங்கப்பட்ட இடம் தமிழ்நாடு. சென்னையில் தான் ஹோம்ரூல் இயக்கம் தொடங்கப்பட்டது.

1919 – மார்ச் 18இல் மெரினா கடற்கரையில் நடைபெற்றக் கூட்டத்தில் காந்தியடிகள் உரையாற்றினார். 1919 ஏப்ரல் 6இல் 'ரௌலட் சட்டத்தை' எதிர்க்கும் நோக்கில் கடையடைப்பும் வேலை நிறுத்தங்களும் நடத்தப்பட்டன. தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

1920 – தமிழ்நாட்டில் 1920 ஏப்ரல் 17இல் மௌலானா சௌகத் அலி தலைமையேற்ற ஒரு பொதுக்கூட்டத்துடன் கிலாபத் நாள் கடைப்பிடிக்கப்பட்டது.



தாஷ்கண்டில் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி எம்.என்.ராய் தலைமையில் தொடங்கப்பட்டது. தமிழகத்தைச் சேர்ந்த எம்.பி.டி. ஆச்சார்யா அதன் தோற்றுநர்களில் ஒருவர்.

நாகபுரியில் நடந்த இந்தியத் தேசிய காங்கிரஸ் கூட்டத்தைத் தலைமையேற்று நடத்திய தமிழர் சி.விஜயராகவாச்சாரியார்.

1922 – வேல்ஸ் இளவரசர் வருகையை எதிர்த்து ஈரோட்டில் பெரியார் கடையடைப்புப் போராட்டம் நடத்துதல்.

1924 –1925 வைக்கம் சத்தியாக்கிரகத்தை பெரியார் ஈ.வெ.ரா. வெற்றிகரமாகத் தலைமை தாங்கி நடத்தினார்.

1927 – நீல் சிலை அகற்றும் போராட்டம் ஜேம்ஸ் நீல், துப்பாக்கி ஏந்திய காலாட்படை, மதராஸ் பிரிவைச் சேர்ந்தவர். 1857 பேரெழுச்சியின்போது நடைபெற்ற கான்பூர் படுகொலை என்றழைக்கப்படும் சம்பவத்தில் பல ஆங்கிலப் பெண்களும் குழந்தைகளும் கொல்லப்பட்டனர். இதற்கு வஞ்சம் தீர்க்கும் வகையில் நீல் கொடூரமாக நடந்துகொண்டார், பின்னர், நீல் இந்திய வீரர் ஒருவரால் கொல்லப்பட்டார். சென்னை மௌண்ட்ரோட்டில் ஆங்கிலேயர் அவருக்கு ஒரு சிலை வைத்தனர். இதை, இந்தியர்களின் உணர்வுகளுக்கு இழைக்கப்படும் அவமரியாதை எனக் கருதிய தேசியவாதிகள் சென்னையில் தொடர் போராட்டங்களை மேற்கொண்டனர். சென்னை மாகாணத்தின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்த போராட்டக்காரர்களுக்குத் திருநெல்வேலியைச் சேர்ந்த எஸ்.என்.சோமையாஜுலு தலைமையேற்றார். பலர் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். அச்சமயம் சென்னைக்கு வந்த காந்தியடிகள் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தார்.

1928 – சைமன் கமிசன் எதிர்ப்பு இயக்கம்

பாரதி பாடல்கள் பறிமுதல். இதற்கு எதிராகச் சென்னை சட்டமன்றத்தில் ஒத்திவைப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1930 – வரலாற்றுப் புகழ்பெற்ற வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிரக நடைப்பயணத்தை இராஜாஜி மேற்கொண்டார். 1930 ஏப்ரல் 13இல் திருச்சிராப்பள்ளியிலிருந்து தொடங்கி, ஏப்ரல் 28இல் தஞ்சாவூர் மாவட்டத்தின் வேதாரண்யத்தைச் சென்றடைந்தது. இவ்வணிவகுப்புக்கென்றே "கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது, சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்" எனும் சிறப்புப் பாடல் நாமக்கல் கவிஞர் இராமலிங்கனாரால் புனையப்பட்டது.

1931 – சட்டமறுப்பு இயக்கம்

1932 – ஜனவரி 11இல் திருப்பூரில், திருப்பூர் குமரன் என்றழைக்கப்பட்ட குமாரசாமி தேசியக் கொடியை உயர்த்திப் பிடித்தவாறே விழுந்து இறந்தார்.

ஜனவரி 25 அன்று நள்ளிரவு பாஷ்யம் என்று அழைக்கப்பட்ட ஆரியா சென்னை கோட்டையில் இரகசியமாக நுழைந்து தேசியக் கொடியை ஏற்றினார்.



1937 – தமிழகத்தில் இராஜாஜி தலைமையில் காங்கிரஸ் அமைச்சரவை பதவியேற்பு



MADRAS : TUESDAY, AUGUST 8, 1942.

QUIT INDIA MOVEMENT

A GANDHI

8th August

Mantra DO OR DIE

Karo Ya Maro

1939 – இந்தியா முழுவதும் காங்கிரஸ் அமைச்சரவைகள் (சென்னையில் இராஜாஜி உட்பட) பதவி விலகின.

1940 – தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக காமராஜர் தேர்வு.

1942– வெள்ளையனே வெளியேறு இயக்கம், சீர்காழி சதி வழக்கு, குலசேகரப்பட்டினம் சதி வழக்கு, குரும்பூர் மெய்ஞ்ஞானபுரம் சதி வழக்கு.

1947– வெள்ளையர் ஆதிக்கத்திலிருந்து இந்தியா விடுதலை பெற்றது.

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள், 02.11.2021 அன்று, கண்காட்சியினைப் பார்வையிட்டார்

நடிகர் திரு.சிவகுமார் அவர்கள் 06.11.2021 அன்று, கண்காட்சியினைப் பார்வையிட்டார்

விடுதலைப் போரில் தமிழகம் - புகைப்படக் கண்காட்சி



வேலு நாச்சியார்

கணவர் முத்துவடுகநாதனையும், சிவகங்கையும் ஆங்கிலேயரிடம் 1772இல் பறிகொடுத்து, 8 ஆண்டுகள் கழித்து 1780இல் போரிட்டு மீண்டும் சிவகங்கையை மீட்டார். சுதந்திரப் போராட்ட வரலாற்றில் இழந்த நாட்டை மீட்ட ஒரே ராணி.

குயிலி

1780ஆம் ஆண்டு விஜயதசமி அன்று, வேலுநாச்சியாருடன் சிவகங்கை அரண்மனையிலுள்ள கோயிலுக்குச் செல்வது போல் சென்று, தன் சேலையில் தீயைப் பற்ற வைத்துக்கொண்டு ஆங்கிலேயரின் ஆயுதக் கிடங்குக்குள் விழுந்து உயிர் நீத்தாள் இந்தத் தியாக மங்கை.

மாயக்காள்

பெருங்காமநல்லூரில் கைரேகைச் சட்டத்தை எதிர்த்து 03.04.1920 அன்று, கலவரம் நடந்தது. போலீசார் 16 பேரைச் சுட்டுக்கொன்றனர். குண்டடி பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த ஒருவருக்குக் குடிக்கத் தண்ணீர் கொடுத்த மாயக்காள் என்ற பெண்ணையும் இரக்கமின்றி சுட்டுக்கொன்றனர்.

நாகம்மையார் ஈ.வெ.ரா.

தந்தை பெரியாரின் மனைவி. காந்தியடிகள் ஈரோட்டில் பெரியார் இல்லத்தில் தங்கியிருந்தபோதுதான் கள்ளுக்கடை முன்பு மறியல் போராட்டம் நடத்த முடிவெடுக்கப்பட்டது. பெரியார் மறியலில் இறங்கி கைதானார். அடுத்த நாள் நாகம்மையார், பெரியாரின் தங்கை எஸ்.ஆர். கண்ணம்மாள் ஆகிய இருவரும் களமிறங்கினர். 1924இல் கேரள மாநிலம், வைக்கத்தில் நடைபெற்ற கோயில் தெரு நுழைவு போராட்டத்தில் கலந்துகொண்டார்.

எஸ்.ஆர். கண்ணம்மாள்

பெரியாரின் இளையசகோதரி. 1930களில் குடியரசு இதழின் வெளியீட்டாளராக விளங்கினார். இவ்விதழில் "இன்றைய ஆட்சி ஏன் ஒழிய வேண்டும்" என்ற தலைப்பிலான பெரியார் எழுதிய தலையங்கத்திற்காக ஆசிரியர் பெரியாரும் வெளியீட்டாளர் கண்ணம்மாளும் கைது செய்யப்பட்டனர். பெரியாருக்கு 6 மாதங்களும், கண்ணம்மாளுக்கு 3 மாதங்களும் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. கண்ணம்மாள் 1925க்குப் பிறகு பெரியாரின் வழியைப் பின்பற்றிச் சென்றவர். கண்ணம்மாள் 1932இல் ஈரோடு நகர மன்ற உறுப்பினராக இருந்தார்.

அஞ்சலை அம்மாள்

கடலூரில் பிறந்து இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் தன் கணவர் முருகப்பன், 10 வயது மகள் லீலாவதி ஆகியோருடன் கைது செய்யப்பட்டு, குடும்பத்துடன் சிறை சென்றார். கர்ப்பிணியாக இருந்தும், அஞ்சலையம்மாள் தொடர்ந்து போராடி, சிறையிலிருந்து பரோலில் வந்து குழந்தைப் பெற்றார். 1961ஆம் ஆண்டு பிப்ரவரி 20இல் மறைந்தார்.

அம்மு சுவாமிநாதன்

வழக்கறிஞர் சுவாமிநாதனின் மனைவி. கேப்டன் லட்சுமியின் தாயார். அக்காலத்தில் கார் ஓட்டுதல், குதிரையேற்றம், நீச்சல் சாகசம், டென்னிஸ் ஆடுதல் போன்ற பல்துறைகளில் தேர்ச்சிப் பெற்றவர். 1920இல் காந்தியடிகளின் உரையைக் கேட்டபிறகு, விடுதலை இயக்கத்தில் கால்பதித்தார். ஆடம்பரமான வீடு அமைதியின் இருப்பிடமானது. கதர் ஆடையை அணிந்தனர். அம்மு சுவாமிநாதன் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக இருந்தார். இரண்டு முறை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். ஆங்கிலேய ஆட்சிக்கு எதிரான இயக்கங்களில் தீவிரமாகப் பங்கேற்றார்.

பத்மாசினி அம்மையார்

தேச விடுதலைக்காக மதுரையில் பெண்கள் அணியைத் திரட்டி ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராட வைத்தவர். இவரது துணிச்சல் மற்றும் பேச்சாற்றலால் ஏராளமான பெண்கள் தாமாகவே முன்வந்து, சுதந்திரப் போரில் கலந்துகொள்ள வைத்தது. சிறைக் கொட்டடியில் சித்திரவதைப்பட்டவர்.

சொர்ணத்தம்மாள்

1930இல் அன்னியத் துணிக்கடை மறியலில் 3 வாரங்களும், 1940இல் தனிநபர் சத்தியாகிரகத்தில் 4 மாதங்களும் சிறையில் இருந்தார். மதுரைக் காவல்துறையின் கொடூரமான தாக்குதலுக்கு உள்ளானவர். சொல்லுவதற்கே நா கூசும் சித்திரவதைக்கு ஆளானவர். இத்தனைக்கும் மீறி இலட்சியத்தில் உறுதியாக இருந்தவர்.

ருக்மினி லட்சுமிபதி

1930இல் வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகத்தில் பங்கேற்றுக் காவல்துறையால் தாக்கப்பட்டவர். சிறைத் தண்டனை பெற்றார். அன்னியத்துணி மறியல் போராட்டத்திலும் சிறை சென்றார். தன் நகைகள் அனைத்தையும் 1933இல் காந்தியடிகளிடம் அரிஜன நிதிக்காக அளித்தார். 1937இல் சென்னை மாகாண சட்ட மேலவைத் துணைச் சபாநாயகராக விளங்கினார். 1940இல் தனி நபர் சத்தியாகிரகத்திலும் சிறை சென்றார். 1946இலும் சட்டமன்றப் பேரவை உறுப்பினராக ஆனார். அமைச்சராகவும் திகழ்ந்தார்.

அம்புஜம்மாள்

பெண்கள் பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்றியவர். 1930இல் காந்தியின் சத்தியாகிரகப் போரில் பங்கு பெற்றார். அந்நியத் துணிகளை எதிர்த்து, 1932இல் 6 மாதம் சிறைத் தண்டனை அடைந்தார். ஆனாலும் மனந்தளராமல் சுதந்திரம் அடையும் வரை அனைத்துப் போராட்டங்களிலும் கலந்துகொண்டார்.

வை.மு.கோதைநாயகி

பட்டாடை, அதிக நகைகள் அணிந்து பழகிய அவர், காந்தியவாதியானதும் கதர் ஆடையை உடுத்த ஆரம்பித்தார். 1931இல் கள்ளுக்கடை மறியலிலும், 1932இல் லோதியன் கமிஷனுக்கு எதிராக நடந்த போராட்டத்திலும் கலந்துகொண்டு பலமுறை சிறை சென்றவர். மிகச் சிறந்த எழுத்தாளர்.

கே.பி.சுந்தராம்பாள்

தேசிய பற்றுக் கொண்டவர். காந்திய இயக்கத்தில் இணைந்து பணியாற்றினார். சுதந்திரப் போராட்ட பாடல்களைப் பாடி தமிழ் மக்களிடையே எழுச்சியை உருவாக்கினார்.

லட்சுமியம்மாள்

1932இல் திருப்பூர் குமரன் பங்கேற்ற ஊர்வலத்திற்குத் தலைமையேற்ற பி.எஸ். சுந்தரத்தின் தாயார். பஞ்சம் பிழைக்கப் பர்மா சென்றிருந்த லட்சுமியம்மாள் அங்கே காந்தி சேவா சங்கம் என்ற அமைப்பை ஏற்படுத்தி, கதர் இயக்கத்தை வலுப்படுத்தியவர். தனது மகன் பி.எஸ். சுந்தரத்தை பொதுச் சேவைக்காகக் காந்தியடிகளிடம் ஒப்படைத்தவர். லட்சுமியம்மாளும் சுந்தரத்தின் மனைவி சுமித்ரா தேவியும் இராஜாஜி தலைமையில் திருச்செங்கோட்டில் சத்தியாகிரகத்தில் பங்கேற்று இருவரும் ஆறு மாதங்கள் சிறைத் தண்டனை பெற்றனர்.

கே.பி. ஜானகி அம்மாள்

மதுரையைச் சார்ந்தவர். மக்களின் விழிப்புணர்வுகளுக்காக மேடையில் பாடினார், நடித்தார். சுதேசி இயக்கம் சார்பாக விஸ்வநாததாஸ் பணமில்லாதபோது, தனது நகைகளை விற்றுப் பணம் தந்தார். மதுரையில் சுதந்திரப் போராளிகள் இரகசிய மாநாடு நடத்தத் தனது மேலவாசி வீதி வீட்டையே விற்றுப் பணம் தந்தார்.

கேப்டன் லட்சுமி

நேதாஜியின் தலைமையில் இயங்கிய இந்தியத் தேசிய இராணுவத்தின் மகளிர் படை ராணி ஜான்சி ரெஜிமென்ட் என்பதாகும். அப்படையின் தளபதியாக நேதாஜியால் நியமிக்கப்பட்டவர் கேப்டன் லட்சுமி. இப்படையில் சுமார் 1000 பெண்கள் இணைந்து ஆங்கிலேய இராணுவத்திற்கு எதிராக ஆயுதங்களுடன் அணிவகுத்தனர். இப்படையில் 80 சதவிகிதம் பேர் தமிழ்ப் பெண்கள் இடம்பெற்றிருந்தனர்.

மீனா கிருஷ்ணசாமி

13 வயதில் சிறை சென்றவர். 1939இல் காந்தியடிகளின் வார்தா ஆசிரமத்தில் சேர்ந்தவர். அங்கு 3 ஆண்டுகள் ஆதாரக் கல்வி பயின்றவர். 1942இல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் வார்தாவைச் சுற்றியுள்ள கிராமங்களில் பிரச்சாரம் செய்தவர். 1942இல் கைதாகி நாக்பூர் சிறையில் ஓராண்டு காலம் அடைக்கப்பட்டவர். மொத்தம் 6 ஆண்டுகள் சிறைவாசம் இருந்தவர்.

லீலாவதி

கடலூர் அஞ்சலையம்மாளின் மகள். 1927இல் சென்னையில் நீலன் சிலை அகற்றும் போராட்டத்தில் தாய் அஞ்சலையம்மாளுடன் பங்கேற்றவர் லீலாவதி. அப்போது அவருக்கு வயது 9. தாயாருடன் கைதான லீலாவதி, வயது காரணமாக இளம் பெண்கள் சிறையில் 4 ஆண்டு காலம் அடைக்கப்பட்டார். விடுதலையானவுடன் காந்தியடிகளின் பாரத ஆசிரமத்திற்கு வரவழைத்தார் காந்தியடிகள். அம்மாக்கண்ணு என்று பெற்றோர் இட்ட பெயரை லீலாவதி என்று மாற்றியவர் காந்தியடிகள். விடுதலை வீரர் இ.ரா. ஜமதக்னியை மணந்தார் லீலாவதி.

சொர்ணம்மாள்

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நாகர்கோவிலுக்கு 1927 அக்டோபர் 8ஆம் தேதி காந்தி கஸ்தூரிபாவுடன் வந்தபோது, அவரை நேரில் சந்தித்துச் சுதந்திரப் போராட்ட நன்கொடையாக தன் நகைகள் அனைத்தையும் கொடுத்து, சத்தியாகிரகப் போராட்டங்களிலும் கலந்துகொண்டு சிறை சென்றார்.

விடுதலைப் போராட்டத்தில் தமிழக வீரர்களின் பங்கு

75 சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

வ.உ.சிதம்பரனார்

1907இல் தூத்துக்குடியில் முன்னணி வக்கீலாக இருந்தார். ஆங்கிலேயருக்கு எதிராக 1907ஆம் ஆண்டு கப்பல் வாங்கி, தூத்துக்குடியில் இருந்து கொழும்புவிற்கு அனுப்பினார். இவர் மீது தேசத்துரோக வழக்கைப் பதிவுசெய்து, 1908 ஜூலை 8ஆம் தேதி 40 ஆண்டுக் காலம் சிறைத்தண்டனை விதித்தனர்.

கோவை சிறையில் இவரைச் செக்கிழுக்க வைத்துச் சித்ரவதை செய்தனர்.

ம.சிங்காரவேலர்

மீனவக் குடும்பத்தில் பிறந்த இவர் உயர்நீதிமன்ற வழக்கறிஞராக விளங்கியவர். ஒத்துழையாமை இயக்கத்தின்போது தனது வழக்கறிஞர் அங்கியைத் தீக்கிரையாக்கி விட்டு முழுநேரப் பேராசிரியரானார். எழுத்து, பேச்சு, சிந்தனை இவரது தனித்தன்மையாகும். ஏராளமான நூல்களை எழுதியவர். 1923இல் இந்தியாவின் முதல் மே தினத்தைச் சென்னையில் நடத்தியவர். 1925இல் கான்பூரில் நடைபெற்ற கம்யூனிஸ்ட்

அமைப்பு மாநாட்டிற்குத் தலைமையேற்றவர். அழுத்தமான தொழிற்சங்கத் தலைவர். பலமுறை சிறை சென்றவர்.

சுப்ரமணிய சிவா

வ.உ.சிதம்பரத்துடன் இணைந்து, ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடினார். 1908 மற்றும் 1921இல் சிறைத்தண்டனை பெற்றார். தனது போராளி இயக்கத்தை, பென்னகரம் தாலுகாவில் உள்ள பாப்பாரப்பட்டியில் நடத்தினார். தேசத்துரோக வழக்கில் 10 வருடச் சிறைத்தண்டனை பெற்றார். சிறையில் ஆங்கிலேயரின்

கொடுமையால் தொழுநோயாளி ஆனார்.

டி.எஸ்.எஸ்.ராஜன்

பர்மாவில் மருத்துவராக பணியாற்றியவர். மேல்படிப்புக்காக இலண்டன் சென்றார். தென்னாப்பிரிக்காவிலிருந்து லண்டன் வந்த காந்தியடிகளை இந்தியா ஹவுசில் பார்க்கவும், பழகவும், அவரின் உரையைக் கேட்கவும் டி.எஸ்.எஸ். ராஜனுக்கு வாய்ப்புக் கிடைத்தது. பின்னர், இந்தியா திரும்பிய ராஜன் மருத்துவப் பணியுடன் காங்கிரஸ் இயக்கப் பணிகளையும் செய்துவந்தார். 1921இல் காந்தியடிகள் தமிழகம் வந்தபோது அவருடன் சுற்றுப் பயணத்தில் சென்றதோடு காந்தியடிகளின் உரைகளைத் தமிழில் மொழி பெயர்த்தார். நாகபுரியில் நடைபெற்ற கொடிப் போராட்டத்தில் பங்கேற்றுக் கைதாகி ஒருவருடம் சிறையில் இருந்தார். 1930இல் இராஜாஜி

தலைமையில் வேதாரண்யம் நோக்கிப் புறப்பட்ட உப்புச் சத்தியாகிரகக்குழு திருச்சியில் ராஜன் இல்லத்திலிருந்துதான் பயணத்தைத் தொடங்கியது. 1937இல் இராஜாஜி அமைச்சரவையில் சுகாதாரத்துறை அமைச்சராகப் பணியாற்றியவர்.

வ.வே.சு. அய்யர்

வக்கீலான இவர், மேல்படிப்பிற்காக இலண்டன் சென்றார். சுதந்திரப் புரட்சி வீரரான இவர் இலண்டனில் மூன்று ஆண்டுகளில் 600 வேளை பட்டினியாக இருந்து, அந்தப் பணத்தைச் சேமித்துத் துப்பாக்கிகள், மற்றும் ஆயுதங்களை வாங்கிக் கொண்டு வந்தார்.

ப. ஜீவானந்தம்

தனது 14ஆவது வயதில் வைக்கத்தில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் கலந்து கொண்டார். 1937இல் “ஜனசக்தி” வார இதழைத் தொடங்கினார். வறுமையிலும் நேர்மையாக வாழ்ந்தார். “காலுக்குச் செருப்பும் இல்லை. கால் வயிற்றுக் கூழும் இல்லை. பாழுக்கு உழைத்தோமடா, என் தோழா, பசையற்றுப் போனோமடா” –

என்று இறுதிவரை குடிசையிலேயே வாழ்ந்தார்.

பூ.கக்கன்

தேச விடுதலைக்காக, தனிமனித அறப்போரில் ஈடுபட்டார். இதனால் கோபம் அடைந்த ஆங்கில அரசு 24.10.1940 அன்று இவருக்குக் கடுங்காவல் தண்டனை விதித்தது. தண்டனையை மேலூர் சிறையிலும், மதுரை மத்தியச் சிறையிலும் கழித்தார். நாடு விடுதலையடையும்வரை, எண்ணற்ற

போராட்டங்களில் கலந்துகொண்டு, சிறை சென்றார்.

பி.எஸ்.குமாரசாமிராஜா

ராஜபாளையத்தைச் சேர்ந்த இவர் அன்னிபெசன்ட் அம்மையார், சத்தியமூர்த்தி மற்றும் காந்தியடிகளின் மீது தாக்கம் பெற்று சுதந்திரப் போராட்டத்தில் கலந்துகொண்டார். 1932ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசின் கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராகப் போராடி சிறை சென்றார். கதர் மற்றும் கூட்டுறவுத் துறைகளில் தனிக் கவனம் செலுத்தினார். தென்மாவட்டங்களில் விடுதலை இயக்கம் விரிவுபடக் காரணமாக

இருந்தவர்களில் ஒருவர். சட்டமன்ற உறுப்பினராக இருந்த இவர் 1949 முதல் 1952 வரை தமிழ்நாடு முதலமைச்சராக இருந்தார்.

சக்கரைச் செட்டியார்

1924 முதல் 1948 வரை 24 ஆண்டுகள் சென்னை மாமன்ற உறுப்பினராகப் பணியாற்றினார். இடையில் 1941 – 1942 ஆண்டுகளில் சென்னை மாநகராட்சி மேயராகவும் பணியாற்றினார். சென்னையில் பல்லாயிரம் தொழிலாளர்களை உள்ளடக்கிய பல தொழிற்சங்கங்களுக்குத் தலைவராக விளங்கியவர் சக்கரைச் செட்டியார். இவர் ‘தொழிலாளர்களின் தலைவர் மட்டுமல்ல, தேசிய இயக்கத்தின் தலைவருமாவார்

என இராஜாஜியால் புகழப்பெற்றவர். பாரதியின் உற்ற நண்பரான செட்டியார், பாரதியின் உடல் தகனம் செய்யப்பட்ட இடத்தில் இரங்கல் உரையாற்றிய நால்வரில் ஒருவர்.

டாக்டர் ப.சுப்பராயன்

திருச்செங்கோடு – குமாரமங்கலத்தைச் சார்ந்த இவர் வழக்கறிஞராக பணியைத் தொடங்கி விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்டார். 1922ஆம் ஆண்டு முதன்முதலாகச் சென்னை மாகாண பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1926ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிட்டு வெற்றிபெற்ற இவர், அன்றைய அரசியல் சூழல் காரணமாக முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் காங்கிரஸ் இயக்கத்தில் இணைந்தார்.

1942ம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் கலந்துகொண்டு திருச்சி சிறையில் அடைக்கப்பட்டார். இவரது குடும்ப உறுப்பினர்கள் அனைவருமே பொது வாழ்வில் ஈடுபட்டவர்கள்.

மதுரை மௌலானா சாகிப்

1921இல் கள்ளுக்கடை மறியலில் கைதாகி சிறை புகுந்தார். கிலாபத் ஒத்துழையாமை இயக்கத்தையொட்டி 1921 இல் தஞ்சாவூரில் மாகாண மாநாடு நடைபெற்றது. அதில் மௌலானா உரை ஆவேசமிக்கதாக இருந்தது. ஆவேசத்துடன் உரையாற்றினார். பேசி முடிந்து கீழே இறங்கியவுடன் கைது செய்யப்பட்டு, 18 மாதங்கள் சிறையில் இருந்தார். 1932இல் சட்ட மறுப்பு இயக்கத்தில்

இரண்டாண்டுகள் கடலூர் சிறையில் இருந்தார். இச்சிறைவாசத்தின்போது மௌலானாவின் மனைவி சுல்தான் பீவி மறைந்தார். பலரும் வலியுறுத்தியும் பரோலில் செல்ல மறுத்துவிட்டார்.

ராஜகோபாலாச்சாரியார்

1900இல் வழக்கறிஞராக இருந்தார். காந்திய இயக்கத்தில் பற்றுக் கொண்டிருந்தார். ரௌலட் சட்டத்திற்கு எதிரானப் போராட்டம், ஒத்துழையாமை இயக்கம், வைக்கம் சத்தியாக்கிரகம் முதலிய போராட்டங்களில் ஈடுபட்டுச் சிறை சென்றார்.

பெ.வரதராஜுலு

1918இல் மதுரை ஹார்வி மில் தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் போராடினார். போராட்டத்திற்கு ஆதரவளித்து அனல் பறக்கும் உரை நிகழ்த்தினார். 1920 ஆகஸ்டில் திருப்பூர் வந்தபோதும் செப்டம்பரில் சேலம் வந்தபோதும் இவரின் இல்லத்தில்தான் காந்தியடிகள் தங்கினார். வலிமைமிக்க சொற்பொழிவாளர். இதழாசிரியர், தொழிற்சங்கத் தலைவர், பலமுறை சிறை சென்றவர். இவர் எழுதிய எழுச்சிமிக்க கட்டுரைகளுக்காகவே கைது செய்யப்பட்டவர்.

நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை

1906இல் உருவான அரசியல் எழுச்சியின் தாக்கத்தால் சுதேசி இயக்கத்தில் களமிறங்கத் தூண்டப்பட்ட இளைஞர். 1914இல் திருச்சியில் நடைபெற்ற அரசியல் மாநாட்டில் உரை நிகழ்த்தினார். அங்குதான் அன்னிபெசன்ட் அம்மையாரைச் சந்தித்தார். இவர் எழுச்சிமிக்க காந்தியுகக் கவிஞர், நற்றமிழ் உரையாளர் சிறந்த ஓவியர். 1930இல் உப்பு சத்தியாகிரகப் போராட்டத்துக்கான வழிநடைப்பாடலாக 'கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என்னும் பாடல் தேசபக்தர்களின் போர்ப்பரணியாயிற்று. 1932இல் சட்டமறுப்பு இயக்கத்தில் பங்கேற்றுச் சிறை சென்றார். காந்தியடிகளின் திட்டங்களான மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, கதர் இயக்கம், கைத்தொழில் வளர்ச்சி பற்றிய கவிதைகளை எழுதியுள்ளார்.

கு.காமராஜர்

1921இல் இருந்து விடுதலைப் போர்க்களத்தில் இயங்கியவர் காமராஜர். 1921இல் காந்தியடிகளின் மதுரை உரையைக் கேட்க விருதுநகரிலிருந்து ஆர்வமுடன் வந்திருந்தார். 1927இல் சென்னையில் நடைபெற்ற அகில இந்திய மாநாட்டில் தொண்டர் படைத் தளபதியாகப் பங்கேற்றார். பலமுறை கைது செய்யப்பட்டுப் பல்லாண்டுகள் சிறைப்பட்டவர். 1940, 1942, 1944, 1946, 1948, 1950 ஆகிய ஆண்டுகளில் மாகாணக் காங்கிரஸ் தலைவராகத் தொடர்ந்து தேர்வு செய்யப்பட்டார். 1946இல் சாத்தூர் சட்டப்பேரவை உறுப்பினரானார். விடுதலைக்குப் பிறகு காங்கிரஸ் கட்சியின் அகில இந்தியத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் உள்ளிட்ட மிக உயர் பொறுப்புகளை வகித்தார்.



எம். பக்தவச்சலம்

1927இல் சென்னையில் நடைபெற்ற அகில இந்தியக் காங்கிரஸ் மாநாட்டின் வரவேற்புக்குழுச் செயலாளராக விளங்கினார். 1928இல் சைமன் கமிஷன் எதிர்ப்புப் போரில் பங்கேற்றார். 1932இல் காவல்துறையால் தாக்கப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டார். காங்கிரஸ் நடத்திய அனைத்து இயக்கங்களிலும் பங்கேற்றார். பலமுறை சிறை சென்றவர். விடுதலைக்குப்பிறகு தமிழக முதலமைச்சர் ஆனார்.

பாரதிதாசன்

தன் உடற்பயிற்சியாளரான வேலு நாயக்கரின் திருமண நிகழ்வில் 'வீர சுதந்திரம் வேண்டி நின்றார். பின்னர் வேறொன்று கொள்வாரோ' என்ற மகாகவி பாரதியின் பாடலைப் பாடியுள்ளார். மகாகவி பாரதியாரும் அந்நிகழ்வில் உள்ளார் என்பதை அறியாமலே பாடியுள்ளார். இருவருக்குமான முதல் சந்திப்பே மகாகவி பாரதியின் தேசியப் பாடல் மூலம் நிகழ்ந்துள்ளது. காந்தியடிகளைப் பற்றிப் பல பாடல்கள் பாடியுள்ளார். வ.உ.சியைப் பற்றி 'திக்கெல்லாம் திருட வந்த சிவந்த தோல் பரங்கியரின் பல்லுடைப்பதைப் போல அவர் கல்லுடைத்ததாகவும் வெள்ளைக்காரரின் மண்டையைப் பிழிவோம் என்றும் மனதில் எண்ணி எண்ணிச் செக்கிழுத்ததாகவும் புனைந்துள்ளார். ஆஷ் கொலைவழக்கில் இருந்த மாடசாமியை 'நாடு தொழும் ஊழியர்' என்றார். கதர் பற்றிய இவரது பாடல்கள் தனித்துவம் வாய்ந்தது. 1937இல் இருந்து சுயமரியாதை இயக்கத்தவராகப் பரிணாமம் பெற்றார்.

பெரியார் ஈ.வெ.ரா.



பொதுவாழ்வில் பெற்றிருந்த 29 பதவிகளை 1919இல் உதறித் தள்ளிவிட்டு விடுதலைப் போர்க்களத்தில் குதித்தார். அப்பொறுப்புகளில் ஈரோடு நகரமன்றத் தலைவர் பதவியும் ஒன்று. இத்தகைய தீவிர முடிவெடுத்ததற்கு ஜாலியன் வாலாபாக் படுகொலையும் முக்கியக் காரணமாகும். கள்ளுக்கடை மறியல், கதர் இயக்கம், வைக்கம் கோயில்தெரு நுழைவுப் போராட்டம் எனத் தொடர்ந்து பல இயக்கங்களில் பங்கேற்றுப் பலமுறை சிறை சென்றார். தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக விளங்கியவர். 1925இல் காங்கிரஸிலிருந்து வெளியேறி சுயமரியாதை இயக்கம் கண்டார்.

முத்துராமலிங்கத் தேவர்

தேசியத்தையும், தெய்வீகத்தையும் தனது இரு கண்களாகப் போற்றியவர். 1939இல் மதுரையில் ஆலயப் பிரவேசம் நடக்கக் காரணமாயிருந்தார். ஆங்கிலேயரின் கொடுமையான கைரேகைச் சட்டத்தை எதிர்த்துப் போரிட்டுப் பல முறை சிறை சென்று, அதனை ரத்து செய்ய வைத்தார். தேச விடுதலைக்காகப் பலமுறை சிறை சென்றார்.

ஜி. சுப்ரமணிய அய்யர்

பத்திரிகையாளரான சுப்ரமணிய அய்யர் தனது பத்திரிகையில் "அரசு ஏழை விவசாயிகளைக் கொடுமைப்படுத்தி வருகிறது. இதற்குக் கையேந்தி கிளர்ச்சி நடத்தும் முறை உதவாது" என்று எழுதினார்.

மகாகவி சி.சுப்பிரமணிய பாரதியார்

மூன்று அகில இந்தியக் காங்கிரஸ் மாநாடுகளில் பங்கேற்றுத் தன் அரசியல் அனுபவத்தையும் ஆளுமையையும் செழுமைப்படுத்திக் கொண்டார் பாரதி. சென்னையில் தம் முற்போக்குக் கருத்துகளுக்கு ஒத்திசைவாக விளங்கிய சில தேசபக்தர்களை ஒன்றிணைத்து 'சுதேசி பிரசாரணி' என்ற அமைப்பை நிறுவினார். இளைஞர்களை, மாணவர்களை தீவிர அரசியலுக்கு வென்றெடுக்கும் களப்பணியை மிகுந்த ஈடுபாட்டுடன் மேற்கொண்டார். தமிழகத்தில் அரசியல் எழுச்சியைப் பாடல்கள் மூலமும் சொற்பொழிவு வாயிலாகவும் மூட்டியவர். இதழியலில் ஆழத் தடம் பதித்தவர்.

வாஞ்சிநாதன்

வ.உ.சிதம்பரத்திற்கு அளிக்கப்பட்ட இரட்டை ஆயுள் தண்டனையைக் கேள்விப்பட்டு மனம் கொதித்த வாஞ்சிநாதன், 1911 ஜூன் 17இல் நெல்லை கலெக்டர் ஆஷ் இரயிலில் பயணித்து மணியாச்சி இரயில் நிலையம் வந்தபோது, தன் கைத்துப்பாக்கியால் ஆஷ்துரையைச் சுட்டுக் கொன்றான். காவலர்கள் பிடிக்க வந்தபோது, தன்னைத் தானே சுட்டுக் கொண்டார்.

சேலம் சி. விஜயராகவாச்சாரியார்

வழக்கறிஞரான இவர் தேச விடுதலைக்குக் குரல் கொடுப்பவர்களை அரசுக்கு எதிராகச் சதி செய்தவர்கள் எனக் குற்றம்சாட்டி அவர்களுக்குக் கடும் தண்டனை தருவதை எதிர்த்தார். தென்னாப்பிரிக்க இந்தியர்களின் பிரச்சினைகளை இந்தியாவின் கவர்னர் ஜெனரலிடம் எடுத்துரைக்கும்படி ஆச்சாரியாருக்குக் காந்தியடிகள் கடிதம் எழுதியிருந்தார். தன் வாழ்நாளின் இறுதிவரை ஆங்கிலேய ஆட்சிக்கும் அவர்களின் அடக்குமுறைக் கொள்கைகளுக்கும் எதிராக இடைவிடாது இயங்கி வந்தவர். காங்கிரஸின் அகில இந்தியத் தலைவராக விளங்கியவர்.

இம்மானுவேல் சேகரன்



இவர் 1924இல் இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி அருகில் உள்ள செல்லூரில் பிறந்தார். 1942ஆம் ஆண்டு தனது 18ஆவது வயதில் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் இணைந்து சேவையாற்றினார். இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னரும் ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து இராணுவத்தில் பணிபுரிந்தார். ஒடுக்கப்பட்ட மக்களுக்கான போராட்டங்களை முன்னெடுத்தார். 1957இல் மறைந்தார்.

ஏ.வைத்தியநாத ஐயர்

1930இல் வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகத்தில் பங்கேற்று உரையாற்றியதால் காவல்துறையால் கடுமையாகத் தாக்கப்பட்டவர். மதுரையிலிருந்து அதிக எண்ணிக்கையிலான சத்தியாகிரகிகள் பங்கேற்கக் காரணமாக இருந்தார். ஆறுமாதக் கடுங்காவல் தண்டனைப் பெற்றார். 1932இல் சட்ட மறுப்புப் போராட்டத்தில் பங்கேற்று ஓராண்டு தண்டனைப் பெற்றார். 1932இல் மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் தாழ்த்தப்பட்டவர்களையும் அழைத்துச் சென்று ஆலயநுழைவுப் போராட்டம் நடத்தினார். 1946இல் சட்டமன்ற உறுப்பினரானார். இவரது குடும்பமே சிறை சென்றது.

சத்தியமூர்த்தி

வக்கீலாக இருந்தாலும்,தேசப்பற்றின் காரணமாக 1919இல் தன்னைக் காந்திய இயக்கத்தில் இணைத்துக் கொண்டார். 1932இல் நடந்த கொடிப் போராட்டம் உட்படப் பல போராட்டங்களில் கலந்து கொண்டு பலமுறை சிறை சென்றார்.

திரு.வி.கலியாணசுந்தரனார்

விடுதலைப் போராளி, தொழிற்சங்கவாதி, சொற்பொழிவாளர், இதழாளர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், அரசியலாளர், காந்திய நெறியாளர் ஆகிய பன்முகம் கொண்டவர். 07.12.1917அன்று 'தேசபக்தன்' என்னும் பத்திரிகை ஆசிரியரானார். பின் அதிலிருந்து விலகி, 'நவசக்தி' வார இதழைத் தொடங்கினார். சென்னையில், வ.உ.சியுடன் திலகரை 17.12.1919அன்று சந்தித்து, பெரம்பூரில் தொழிலாளர் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தார். 1918இல் சென்னையில் தொழிலாளர் சங்கம் என்ற பேரமைப்பை நிறுவி 1920இல் சென்னை மாகாணத் தொழிலாளர் மாநாட்டை நடத்தினார். 1921இல் மகாத்மா காந்தியைப் பலமுறை சந்தித்த இவர் தமிழகத்தில் அண்ணல் காந்தியடிகள் ஆற்றிய பல ஆங்கில உரைகளைத் தமிழில் மொழிபெயர்த்தார்.

ஓமந்தூர் பி.ராமசாமி ரெட்டியார்



1920இல் நாகபுரியில் நடைபெற்ற அகில இந்தியக் காங்கிரஸ் மாநாட்டில் பங்கேற்றார். ஓமந்தூரார் தலைமையில் ராமேசுவரம் ஆலயப் பிரவேசம் நடைபெற்றது. 1930இல் வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகத்தில் பங்கேற்றுக் கைதானார். ஆறு மாதச் சிறைத் தண்டனைப் பெற்றார். 1938இல் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஆனார். 1940இல் காங்கிரஸ் இயக்கத்தின் 40ஆவது மாநாடு ஓமந்தூரார் தலைமையில் நடைபெற்றது. 1947இல் ஆகஸ்ட் 15இல் சென்னைக் கோட்டையில் தேசியக் கொடி ஏற்றப்பட்டபோது ஓமந்தூராரே மாகாணப் பிரதமராகப் பதவி வகித்தார்.

திருப்பூர் குமரன்

10.01.1932 அன்று திருப்பூரில் சட்ட மறுப்பு ஊர்வலத்தில், கொடியைக் கையிலேந்தி ஊர்வலத்தின் முன்பகுதியில் கம்பீரமாக அணிவகுப்புப் பாணியில் நடந்து சென்றவர். காவல்துறையினர் வெறியுடன் குமரனைத்தான் முதலில் குறிவைத்துத் தாக்கினர். தலையில் பலத்த அடிபட்ட குமரன் மயங்கி விழுந்தார். கொடியை விடவில்லை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்; மரணமடைந்தார்.

ம.பொ.சிவஞானம்

மூன்றாம் வகுப்பு வரையில் படித்திருந்தாலும், தமிழ் மொழியின் மீது தீராத பற்றுக்கொண்டிருந்தார். விடுதலைப் போராட்ட இயக்கத்தில் கலந்துகொண்டு 755 நாட்கள் சிறையிலிருந்தார். கட்டபொம்மனையும், வ.உ.சி.யையும் தனது நூல்கள் வாயிலாக உலகறியச் செய்தார்.

ஜே.சி.குமரப்பா



காந்தியப் பொருளாதார நிபுணர். அமெரிக்காவிலும், லண்டனிலும் மேற்படிப்பைப் படித்தவர். 'பொதுநிதியும் இந்தியாவின் வறுமையும்' என்னும் இவரது ஆய்வுக்கட்டுரை ஆங்கிலேயரின் சுரண்டலை அப்பட்டமாக வெளிப்படுத்தியது. 1931இல் ராஜதுவேஷ எழுத்துக்காக ஒன்றரை ஆண்டுகள் சிறை வைக்கப்பட்டவர். காந்தியடிகளுடன் சபர்மதி ஆசிரமத்தில் பணியாற்றியவர். 1932இல் இரண்டாண்டுகள் கடுங்காவல் தண்டனைப் பெற்று நாசிக் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

கப்பலோட்டியத் தமிழர் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 150ஆவது ஆண்டு விழா

"நகரும் புகைப்படக் கண்காட்சிப் பேருந்து"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 01.11.2021 அன்று கோயம்பேடு புறநகரப் பேருந்து நிலைய வளாகத்தில் தியாகச் சீலர் வ.உ.சி. அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் பொதிந்துகிடக்கும் அரிய நிகழ்வுகளை வெளிக்கொணரும் வகையில் "நகரும் புகைப்படக் கண்காட்சிப் பேருந்தினைக்" கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

75ஆம் ஆண்டு சுதந்திரத் தின விழா உரையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தியாகத்தின் திருவுருவான கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி. அவர்களின் 150ஆவது பிறந்த திருநாளை அரசு சார்பில் எழுச்சியுடனும், மகிழ்ச்சியுடனும் கொண்டாடப்படும் என்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, தியாகச் சீலர் வ.உ.சி. அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் பொதிந்துகிடக்கும் அரிய நிகழ்வுகளைத் தமிழகத்தில் உள்ள பள்ளி மாணவ, மாணவியர் பார்வையிட்டுப் பயன்பெறும் நோக்கில் போக்குவரத்துத்துறையின் உதவியோடு நகரும் புகைப்படக் கண்காட்சிப் பேருந்து உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நகரும் புகைப்படக் கண்காட்சிப் பேருந்தில் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் வாழ்க்கை வரலாறு குறித்த புகைப்படங்கள் வைக்கப்பட்டுள்ளன. குறும்படங்களும் திரையிடப்படவுள்ளது. இப்பேருந்து, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலுள்ள பள்ளிகளுக்கும், வ.உ.சிதம்பரனார் வாழ்க்கை வரலாறு குறித்து மாணவ, மாணவியர்கள் அறிந்து பயனடையும் விதமாக வாரந்தோறும் திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை இயக்கப்படும்.

அரசு வழிகாட்டுதலின்படி கொரோனா தடுப்பு முறைகளைப் பின்பற்றி, பள்ளி மாணவ, மாணவியர் மற்றும் பொதுமக்களும் நகரும் புகைப்படக் கண்காட்சிப் பேருந்தினைப் பார்வையிட்டுத் தியாகத் திருவுருவான கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி. அவர்களின் வரலாற்றினை அறிந்து பயன்பெறலாம்.

எல்லைப் போராட்டத் தியாகிகளுக்குப் பொற்கிழி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 01.11.2021 அன்று தலைமைச் செயலகத்தில், நவம்பர் 1ஆம் நாளை எல்லைப் போராட்டத் தியாகிகள் நாளாக அனுசரிக்கும் வகையில், எல்லைப் போராட்டங்களில் நேரடியாக ஈடுபட்டுச் சிறைசென்று தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் எல்லைப் போராட்டத் தியாகிகளைச் சிறப்பிக்கும் வகையில், சிறப்பு நேர்வாக ஒவ்வொருவருக்கும் 1 இலட்சம் ரூபாய்க்கான பொற்கிழி மற்றும் நினைவுப் பரிசு வழங்கிச் சிறப்பித்தார்.

இந்திய நாடு விடுதலைப் பெற்ற பின்பு, 1956ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் நாள் இந்தியா முழுவதும் மொழிவாரி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டன. அவ்வாறு பிரிக்கப்பட்டபோது, அப்போதைய மெட்ராஸ் மாகாணத்திலிருந்து ஆந்திரா, கருநாடகா மற்றும் கேரளத்தின் சில பகுதிகள் பிரிந்து சென்றன. அவ்வாறு பிரித்தபோது, தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளை மீண்டும் தமிழகத்தோடு இணைக்க நடைபெற்றப் போராட்டங்களில் பலர் ஈடுபட்டு உயிர்நீத்தும், சிறை சென்றும் தியாகம் செய்துள்ளனர்.

அவ்வாறு போராட்டங்களில் ஈடுபட்டு, தியாகம்செய்தவர்களைநினைவுகூரும்வகையில் மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட நவம்பர் 1ஆம் நாளை எல்லைப் போராட்டத் தியாகிகள் நாளாகத் தமிழ்நாடு அரசு அனுசரிக்கும் வகையில், எல்லைப் போராட்டங்களில் நேரடியாக ஈடுபட்டுச் சிறைசென்று தியாகம் செய்து தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் எல்லைக்காவலர்கள் 110 பேருக்குச் சிறப்பு நேர்வாக ஒவ்வொருவருக்கும் 1 இலட்சம் ரூபாய் பொற்கிழி வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். அதன்படி, 110 எல்லைப் போராட்டத் தியாகிகளில், 14 பேருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 1 இலட்சம் ரூபாய்க்கான காசோலை மற்றும் நினைவுப் பரிசு வழங்கிச் சிறப்பித்தார். மற்ற எல்லை போராட்டத் தியாகிகளுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வாயிலாக வழங்கப்படும்.

இந்து சமய அறநிலையத்துறை சார்பில் கொளத்தூரில் அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 02.11.2021 அன்று இந்து சமய அறநிலையத்துறை சார்பில் கொளத்தூரில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தொடங்கிவைத்து மாணவர்களுக்குக் கல்வி உபகரணங்களை வழங்கினார்.

2021–2022ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் 10 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, சென்னை – கொளத்தூர், நாமக்கல் மாவட்டம் – திருச்செங்கோடு, திண்டுக்கல் மாவட்டம் – தொப்பம்பட்டி, தூத்துக்குடி மாவட்டம் – விளாத்திகுளம் ஆகிய நான்கு இடங்களில் B.Com, BBA, BCA, B.Sc., Computer Science ஆகிய நான்கு பாடப் பிரிவுகளுடன் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கிட உயர்கல்வித்துறை அனுமதி அளித்து அரசாணை வெளியிடப்பட்டது.

இந்நான்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் சென்னை, கொளத்தூரில், மயிலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில் சார்பில், அருள்மிகு சோமநாத சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான சுமார் 5 ஏக்கர் நிலப் பரப்பில் கல்லூரித் தொடங்கிடத் திட்டமிடப்பட்டு, நடப்புக் கல்வி ஆண்டிலேயே அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி என்ற பெயரில் சென்னை, கொளத்தூர், எவர்வின் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் தற்காலிகமாக நடத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இக்கல்லூரியில் மாணவ, மாணவியர் சேர்க்கைக்கான அறிவிப்பு 08.10.2021 அன்று வெளியிடப்பட்டு இதுவரை 210 மாணவ, மாணவியர்கள் சேர்ந்துள்ளனர். மேலும், இக்கல்லூரிக்குப் பல்கலைக்கழக விதிமுறைகளின் அடிப்படையில் உதவிப் பேராசிரியர் பணியிடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்ட 9 நபர்களுக்கும், ஒரு நூலகர் மற்றும் ஒரு உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்களுக்குத் தேர்வு செய்யப்பட்ட நபர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 21.10.2021 அன்று பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டுள்ள இக்கல்லூரியில் 7 வகுப்பறைகள், 2 கணினி ஆய்வகம், 1 நூலகம், கல்லூரி முதல்வர் நிருவாக அறை, பேராசிரியர், பணியாளர்கள் அறை உள்ளிட்ட வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சேரும் அனைத்து மாணவ, மாணவியர்களின் கல்விக் கட்டணம், கல்வி உபகரணங்கள் அனைத்தும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஏற்பாட்டின்படி இலவசமாக வழங்கப்படும்.

ரூ.142.16 கோடியில்

புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழர்களுக்குப் புதிய குடியிருப்புகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 02.11.2021 அன்று வேலூர் மாவட்டம், மேல்மொணவூரில் நடைபெற்ற அரசு விழாவில், புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழர்களுக்கு ரூ.142.16 கோடி மதிப்பீட்டில் 3,510 புதிய குடியிருப்புகள் மற்றும் ரூ.30 கோடி மதிப்பீட்டில் 78 முகாம்களில் குடிநீர், மின்சாரம், சாலை வசதி போன்ற அடிப்படைத் திட்டப் பணிகள் ஆகிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

மேலும், முகாம் வாழ் தமிழர்களுக்கு, 58,747 நபர்களுக்கு ரூ.12.41 கோடி உயர்த்தப்பட்ட பணக்கொடை, 58,677 நபர்களுக்கு ரூ.4.52 கோடி மதிப்பீட்டில் இலவச கைத்தறி துணிமணிகள், 18,890 குடும்பங்களுக்கு ரூ.2.42 கோடி மதிப்பீட்டில் ஐந்து வகையான எட்டு எவர்சில்வர் பாத்திரங்கள், 18,890 குடும்பங்களுக்கு ரூ.8.66 கோடி மதிப்பீட்டில் இலவச எரிவாயு உபகரணங்கள் மற்றும் மானிய விலையில் 5 எரிவாயு உருளைகள், 5,000 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் உபகரணங்கள், பொறியியல், வேளாண் / வேளாண் பொறியியல், முதுநிலை மாணவ, மாணவியருக்கு ரூ.3.10 கோடிக்கான கல்வி மற்றும் விடுதிக் கட்டணத்திற்கான காசோலைகள், 940 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.1.25 கோடிக்கான உயர்த்தப்பட்ட கல்வி உதவித்தொகை, 621 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.6.15 கோடி சமுதாய முதலீட்டு நிதி, 106 முகாம்களுக்கு ரூ.5 கோடி வாழ்க்கைத் தர மேம்பாட்டு நிதி, ரூ.19 இலட்சம் செலவில் இலவச அரிசி என மொத்தம் ரூ.225.86 கோடி மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் திட்டத்தையும், வழங்கித் தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, மேல்மொணவூர் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமினை நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வுசெய்து, அங்குள்ள இலங்கைத் தமிழர்களிடம் வசதிகள் குறித்துக் கேட்டறிந்தார். மேலும், முகாமில் உள்ள அங்கன்வாடி மையத்தைப் பார்வையிட்டு, ஆய்வுசெய்து, குழந்தைகளுக்கு இனிப்புகளை வழங்கினார்.

விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை

இந்த விழாவிற்கு முன்னிலை ஏற்றுள்ள தமிழகத்தின் மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களே!

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு. செஞ்சி கே.எஸ். மஸ்தான் அவர்களே!

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர். காந்தி அவர்களே!

துவக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பி.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., அவர்களே!

நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் ஜெகத்ரட்சகன் அவர்களே! திரு.கதிர் ஆனந்த் அவர்களே! திரு. கலாநிதி வீராசாமி அவர்களே! சட்டப்பேரவை உறுப்பினர்கள் திரு.நந்தகுமார் அவர்களே! திரு. கார்த்திகேயன் அவர்களே! திருமதி அமுலு விஜயன் அவர்களே! திரு. ஈஸ்வரப்பன் அவர்களே! திரு. வில்வநாதன் அவர்களே! திரு. தேவராஜ் அவர்களே!

நிறைவாக நன்றி நல்கவிருக்கக்கூடிய பொதுத்துறை செயலாளர் திரு.ஜகந்நாதன், இ.ஆ.ப., அவர்களே!

மறுவாழ்வு மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நல ஆணையர் திருமதி ஜெசிந்தா லாசரஸ், இ.ஆ.ப., அவர்களே!

இந்தச் சிறப்பான நிகழ்ச்சியில் பங்கேற்றிருக்கக்கூடிய முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களே! அரசு அதிகாரிகளே! பெருந்திரளாகத் திரண்டிருக்கக்கூடிய பெரியோர்களே! தாய்மார்களே!

நம் அன்பிற்கினிய தொப்புள்கொடி உறவோடு நம்மிடையே வருகை தந்திருக்கக்கூடிய இலங்கைத் தமிழர்களே! தொலைக்காட்சி, ஊடகத்துறையின் நண்பர்களே! தலைவர் கலைஞர் அவர்களின் உயிரினும் உயிரான அன்பு உடன்பிறப்புக்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

இலங்கைத் தமிழர் நலத்திட்டங்கள், அவர்களுக்காக நாம் பல்வேறு காலகட்டங்களில் செய்திருந்தாலும் ஆறாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழக அரசின் சார்பில் அவர்களுக்குப் பல நல்ல திட்டங்களை உருவாக்கி அந்தத் திட்டங்களுடைய தொடக்க விழாவாக, அடிக்கல் நாட்டு விழாவாக நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இந்தச் சிறப்பான நிகழ்ச்சியிலே நானும் பங்கேற்று உங்கள் அனைவரையும் சந்திக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன், பெருமைப்படுகிறேன், பூரிப்பு அடைகிறேன்.

புலம்பெயர்ந்து நம்முடைய தாய்த் தமிழ்நாட்டிற்கு வந்து வாழ்ந்துகொண்டிருக்கக்கூடிய இலங்கைத் தமிழர்கள் ஒரு அடையாளச் சொல்லாகத்தான் இலங்கைத் தமிழர்கள் என்று நான் அழைத்தேன், மற்றபடி தமிழர்கள் அனைவரும் எங்கே, எந்த நாட்டில் வாழ்ந்தாலும் அவர்கள் அனைவரும் ஒரு தாய் மக்கள்தான் என்பதை நாங்கள் மறந்துவிடவில்லை. அந்த அடிப்படையில் சொன்னால், தமிழகத் தமிழர்களும், இலங்கைத் தமிழர்களும் இனத்தால், மொழியால், பண்பாட்டால், நாகரிகத்தால் ஒன்றுபட்டவர்கள். இன்னும் மகிழ்ச்சியாக, பெருமையாக, பூரிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், நாம் அனைவரும் தமிழ் இனத்தைச் சார்ந்தவர்கள். கடல்தான் நம்மைப் பிரிக்கிறது. நீங்கள் விட்ட கண்ணீர் நம்மை இன்றைக்கு இணைத்துக் கொண்டிருக்கிறது. இலங்கைத் தமிழர்கள் தங்களுடைய தாயகத்தில் பாதிக்கப்பட்ட காலம் முதல் அவர்களுக்காகக் குரல் கொடுத்துவரக்கூடிய இயக்கம்தான் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை யாரும் மறுத்திட, மறைத்திட முடியாது. 1983 முதல் ஈழத்திலிருந்து தமிழ் மக்கள் இங்கு வருவது தொடங்கியது, அவர்களுக்காக முகாம்கள் அமைக்கப்பட்டன, சிலர் வெளியிலும் தங்கியிருந்தார்கள். இந்த முகாம்களின் நிலைமை மிக மோசமாக இருக்கிறது என்பதை உணர்ந்து பார்த்து, நம்முடைய தமிழினத்தினுடைய தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1997ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்த நேரத்தில், ஏராளமான திட்டங்களை அறிவித்து அவர் செயல்படுத்திக் காட்டினார். அதனால், அவர்கள் ஓரளவுக்கு, முழுமையாக என்று சொல்லமாட்டேன், ஓரளவுக்குத் தன்னிறைவு அடைந்தார்கள்.

ஆனால், கடந்த 10 ஆண்டுக்காலத்திலே, அ.தி.மு.க. அரசு அவர்களுக்காக எந்த நன்மையும் செய்திடவில்லை, அவர்களைப் பற்றிக் கவலையே படவில்லை. இந்த நிலையில், இப்போது திமுக அரசு பொறுப்பேற்றவுடனே, இலங்கைத் தமிழர்கள் நல்வாழ்வுத் திட்டங்களை மீண்டும் நாம் தொடங்கியிருக்கிறோம். அவர்கள் அகதிகள் அல்ல, அனாதைகள் அல்ல, அவர்களுக்கு நாம் இருக்கிறோம் என்பதை உணர்த்துவதற்காக அகதிகள் முகாம் என்று அவற்றை, அவர்களை அழைத்திடக்கூடாது. அதனால்தான், சட்டமன்றத்தில் 110 விதியைப் பயன்படுத்தி, இதற்கென ஒரு அறிவிப்பை வெளியிட்ட நேரத்தில் நான் சுட்டிக்காட்டினேன், இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் என்று அழைப்போம் என்பதைச் சட்டமன்றத்தில் நான் அறிவித்தேன். அதனைச் செயல்படுத்தக்கூடிய நாள்தான் இந்த நாள். அதற்காகத்தான், இந்த முகாமிற்கு நாங்களெல்லாம் வந்திருக்கிறோம்.

நம்முடைய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு 1997–1998ஆம் ஆண்டில் 3,594 புதிய வீடுகள் கட்டித் தரப்பட்டன. 1998–1999ஆம் ஆண்டில் 3,826 வீடுகள் கட்டித் தரப்பட்டன. கடந்த 2009ஆம் ஆண்டும் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்குப் போதுமான அடிப்படை வசதிகள் செய்து தருவதாக நம்முடைய கழக அரசு தாயுள்ளத்தோடு ரூ.100 கோடி அன்றைக்கு ஒதுக்கீடு செய்தது. இந்த நிலையில், இன்னும் அந்த வாழ்விடங்களைச் செழுமைப்படுத்த

திட்டமிட்டிருக்கிறோம். எனவேதான் இந்த முறை ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே அனைத்து முகாம்களையும் அந்தத் துறையின் அமைச்சர் மட்டுமல்ல, அமைச்சர்களாகப் பொறுப்பேற்றிருக்கக் கூடியவர்கள் எல்லா முகாம்களையும் சென்று பார்வையிட வேண்டும், தமிழகத்தில் இருக்கின்ற 106 இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வு முகாம்களையும் ஆய்வு செய்து, அவர்களுக்கு என்ன உடனடித் தேவைகள் என்பது குறித்து அறிக்கையை நீங்கள் என்னிடத்தில் கொண்டு வந்து தரவேண்டும் என்று இப்படிப் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. 19,046 குடும்பங்களைக் கொண்ட இலங்கைத் தமிழர்களின் முகாம்களில், மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள 7,469 வீடுகளைக் கட்டித்தரவும், அவர்களது அனைத்து முகாம்களிலும் அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்கிடவும், அதை மேம்படுத்திடவும் இலங்கைத் தமிழர் மேம்பாட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என நான் சட்டமன்றத்தில் அறிவித்தேன்.

முகாம்வாழ் பிள்ளைகளின் கல்வி மேம்பட பொறியியல், வேளாண், வேளாண் பொறியியல் மற்றும் முதுநிலை பயிலக்கூடிய மாணவ, மாணவியருக்கு அனைத்துக் கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் ஆகிய அனைத்தையும் அரசே முழுமையாக ஏற்றுக் கொள்ளும் என்று அறிவித்தேன். கலை, அறிவியல் மற்றும் பட்டயப் படிப்பு படித்து வருகின்றவர்களுக்கு உயர்த்தப்பட்ட கல்வி உதவித்தொகை வழங்கப்படும். அவர்களுக்கு வேலைவாய்ப்புத் தகுதியினை மேம்படுத்திடத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்குதல், முகாம்களில் இயங்கிவரக்கூடிய சுயஉதவிக் குழுக்களுக்குச் சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படும். கடந்த 10 ஆண்டுகாலமாக உயர்த்தப்படாத மாதாந்திர பணக்கொடை உயர்த்தி வழங்கப்படும். சமையல் எரிவாயு மற்றும் அலுமினியப் பாத்திரங்களுக்குப் பதிலாக எவர்சில்வர் பாத்திரங்கள் வழங்கப்படும். கோ–ஆப்டெக்ஸ் வாயிலாக முகாம்வாழ் தமிழர்களுக்கு உயர்த்தப்பட்ட விலையில் தரமுள்ள ஆடைகள் வழங்கப்பட இருக்கிறது. சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்று தலைவர் கலைஞர் அவர்கள் வழிகாட்டியிருக்கிறார்கள். எனவே, அந்த வழி நின்று இந்த அரசும் நிச்சயமாக அதைச் செயல்படுத்துவோம் என்று நான் உறுதி தருகிறேன்.

நான் ஏற்கெனவே அறிவித்திருந்த இலங்கைத் தமிழ் மக்களுக்கான 12 நலத் திட்டங்களை அறிவித்து, இந்த இரண்டு மாதங்களிலேயே துவக்கி வைத்துச் செயல்படுத்துவதில் நாங்கள் பெருமைப்படுகிறோம். இவற்றில் சமூக நலத்திட்டங்கள் இப்போது தொடங்கப்படுகின்றன. உயர்த்தப்பட்ட பணக்கொடைக்காக ரூ.12.41 கோடியும், துணிமணிகள் வழங்குவதற்காக ரூ.4.52 கோடியும், ஐந்து வகையான எவர்சில்வர் சமையல் பாத்திரங்கள் வழங்க ரூ.2.42 கோடியும், இலவச எரிவாயு இணைப்பு மற்றும் எரிவாயு உருளைக்கான மானியம் வழங்க ரூ.8.66 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முகாம்வாழ் தமிழர்களுக்கான அரிசி மானியத் தொகையை அரசே முழுமையாக ஏற்றுக்கொண்டு, முழுவதும் இலவசமாக வழங்குவதும் தற்போது தொடங்கப்பட்டுள்ளது.

அதேபோல், முகாம்களில் வசிக்கும், கல்லூரியில் அனைத்து ஆண்டுகளிலும் பயிலக்கூடிய வகையில் இலங்கைத் தமிழர் மாணவர்களுக்கு இலவசக் கல்வி மற்றும் உயர்த்தப்பட்ட கல்வி உதவித் தொகைக்காக ரூ.4.35 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. முகாம்வாழ் தமிழர்களுக்குப் பொருளாதார ரீதியில் கவுரவமான வாழ்க்கை அளிக்கப்படும் என்று ஏற்கெனவே அறிவித்ததற்கேற்ப, 621 சுய உதவிக் குழுக்களுக்கு சமூக முதலீட்டு நிதி வழங்க அந்த நிதியை ரூ.6.15 கோடியும், சுயதொழில் மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்க 5,000 இலங்கைத் தமிழர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி, தொழிற்கல்விகள் மற்றும் வேலைவாய்ப்பு முகாம்களுக்கு என்று ரூ.10 கோடியும் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், முகாம்களின் உடனடி அவசியத் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றித் தர இலங்கைத் தமிழர் வாழ்க்கைத் தரம் மேம்பாட்டு நிதிக்காக ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த 10 நலத்திட்டங்களும் முழுமையான செயல்பாட்டிற்கு வரும்.

அதுமட்டுமன்றி, இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் அடிப்படைக் கட்டமைப்புகளை மேம்படுத்தத் தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய இலங்கைத் தமிழர் முகாம்களில் முதற்கட்டமாக 290 சதுர அடி கொண்ட 3,510 புதிய வீடுகள் கட்டுவதற்கான அடிக்கல் இங்கே நாட்டப்பட்டிருக்கிறது. மேலும், குடிநீர், மின்சாரம், சாலை வசதி மற்றும் கழிவுநீர்க் கால்வாய் இதுபோன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.30 கோடி மதிப்பீட்டிலான பணிகளும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. இந்த நலத்திட்டங்களுக்கு இந்த மேல்மொணவூர் கிராமத்தில் அமைந்துள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் அடிக்கல் நாட்டுவதிலும், நலத்திட்ட உதவிகளை வழங்கித் தொடங்கி வைப்பதிலும் நான் உள்ளபடியே பெருமைப்படுகிறேன். பூரிப்போடு நின்று கொண்டிருக்கிறேன். இது முடிவல்ல, தமிழ்நாட்டிலுள்ள மற்ற 105 இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களிலும் அனைத்து அமைச்சர் பெருமக்களும் சென்று இப்பணிகளைத் தொடங்கி வைக்க இருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நிறைவாக நான் சொல்ல விரும்புவது, நாங்கள் இருக்கிறோம், என்றைக்கும் திராவிட முன்னேற்றக் கழகமும், கழக அரசும் உங்களுக்குத் துணையாக நிற்கும். நீங்கள் ஆதரவற்றவர்கள் அல்ல, என்னை உங்களின் உடன்பிறப்பாக நீங்கள் நினைத்துக் கொள்ளுங்கள். ஒரு ஜன்னல் மூடினால் மற்றொரு ஜன்னல் திறக்கும் என்று சொல்வார்கள், ஒரு ஜன்னல் மூடினாலும் இன்னொரு ஜன்னல் திறந்துள்ளது. இலங்கைத் தமிழர்களுக்காகத் திராவிட முன்னேற்றக் கழக அரசு தனது கதவைத் திறந்து வைத்திருக்கிறது. எனவே, என்றைக்கும் இந்த அரசு உங்களுக்குத் துணை நிற்கும் என்ற அந்த உறுதியை இந்த நேரத்தில் எடுத்துச்சொல்லி, நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்று எத்தனையோ அரசு நிகழ்ச்சிகளுக்குச் சென்றிருந்தாலும், இன்றைக்கு இலங்கைத் தமிழர்களுக்காக நடைபெறக்கூடிய இந்த அரசு நிகழ்ச்சிக்கு வந்திருப்பதிலே நான் அளவுகடந்த பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன் என்பதை மட்டும் இந்த நேரத்தில் எடுத்துச்சொல்லி, உங்களுக்கு நாங்கள் என்றைக்கும் துணை நிற்போம், துணை நிற்போம் என்ற உறுதியை எடுத்துச்சொல்லி, இந்த நல்ல வாய்ப்புக்கு மீண்டும் ஒருமுறை நன்றி கூறி விடைபெறுகிறேன்.



கோவிட் பெருந்தொற்றுப் பணியில் ஈடுபட்ட மருத்துவப் பணியாளர்களுக்கு ரூ.196.91 கோடி ஊக்கத்தொகை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 03.11.2021 அன்று தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் கோவிட் பெருந்தொற்றுப் பணியில் ஈடுபட்ட 24,908 மருத்துவ அலுவலர்கள், 26,615 செவிலியர்கள், 6,791 சுகாதார ஆய்வாளர்கள், 8,658 கிராமச் சுகாதாரச் செவிலியர்கள், 6,083 ஆய்வகத் தொழில்நுட்பனர்கள் மற்றும் 32,113 இதரப் பணியாளர்கள் என மொத்தம் 1,05,168 பணியாளர்களுக்கு ரூ.196.91 கோடி ஊக்கத்தொகை வழங்கிடும் அடையாளமாக, 13 பணியாளர்களுக்கு ஊக்கத்தொகைக்கான காசோலையை வழங்கினார்.

கோவிட்–19 பெருந்தொற்றுத் தடுப்புப்பணிகளில் கடந்த ஏப்ரல், மே மற்றும் ஜூன் ஆகிய மூன்று மாதங்களில் பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையைச் சார்ந்த 34,396 நபர்கள், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறையைச் சார்ந்த 13,371 நபர்கள், மருத்துவக்கல்வித் துறையைச் சார்ந்த 49,908 நபர்கள், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையைச் சார்ந்த 270 நபர்கள், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் (தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம்) துறையைச் சார்ந்த 962 நபர்கள், தமிழ்நாடு சுகாதாரச் சீரமைப்புத் திட்டத்தைச் சார்ந்த 6,261 நபர்கள், என மொத்தம் 1,05,168 பணியாளர்கள் பணியாற்றி வந்தனர்.

2021 ஏப்ரல், மே மற்றும் ஜூன் ஆகிய மூன்று மாதங்களில் கோவிட்–19 பெருந்தொற்றுத் தடுப்புப் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வந்த அரசுப் பணியாளர்கள் மற்றும் ஒப்பந்தப் பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

அந்த அறிவிப்பைச் செயல்படுத்தும் விதமாக, பொதுச் சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறைக்கு ரூ.65.11 கோடி, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறைக்கு ரூ.28.19 கோடி, மருத்துவக்கல்வி துறைக்கு ரூ.91.69 கோடி இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறைக்கு ரூ.55.75 இலட்சம், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறைக்கு (தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம்) ரூ.1.96 கோடி, தமிழ்நாடு சுகாதாரச் சீரமைப்புத் திட்டத்திற்கு ரூ.9.39 கோடி, என மொத்தம் 1,05,168 பணியாளர்களுக்கு ரூ.196.91 கோடி ஊக்கத்தொகை வழங்கத் தமிழ்நாடு அரசால் 26.10.2021 அன்று அரசாணை வெளியிடப்பட்டது.

அதன்படி, கோவிட் பெருந்தொற்றுப் பணியில் பணிபுரிந்த 1,05,168 பணியாளர்களுக்கு ஊக்கத்தொகைக்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கித் தொடங்கி வைத்தார்.

நரிக்குறவர், இருளர் இனமக்களுக்கு ரூ.4.53 கோடியில் நலத்திட்ட உதவிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 04.11.2021 அன்று செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், பூஞ்சேரியில் வசிக்கும் நரிக்குறவர் மற்றும் இருளர் இனத்தைச் சேர்ந்த 282 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள், குடும்ப அட்டைகள், வாக்காளர் அடையாள அட்டைகள், சாதிச் சான்றிதழ்கள், நல வாரிய அட்டைகள், பயிற்சிக்கான ஆணைகள், வங்கிக் கடனுதவிகள் ஆகியவற்றை வழங்கினார்.

முதலமைச்சரின் சிறப்பு வரன்முறைப்படுத்தும் திட்டத்தின்கீழ், பூஞ்சேரி கிராமத்தில் வசிக்கும் நரிக்குறவர் மற்றும் இருளர் இனத்தைச் சேர்ந்த 81 நபர்களுக்கு ரூ.3.52 கோடி மதிப்பீட்டில் வீட்டுமனைப் பட்டாக்கள், 6 நபர்களுக்கு முதியோர் உதவித்தொகைக்கான ஆணைகள், 21 நபர்களுக்குக் குடும்ப அட்டைகள், 18 நபர்களுக்கு வாக்காளர் அடையாள அட்டைகள், 88 நபர்களுக்கு இருளர் (ST) சாதிச் சான்றிதழ்கள், 34 நபர்களுக்கு நரிக்குறவர் (MBC) சாதிச் சான்றிதழ்கள், 34 நபர்களுக்கு நரிக்குறவர் நல வாரிய அட்டைகள், 25 நபர்களுக்குப் பழங்குடியினர் நலவாரிய அட்டைகள், சுயவேலைவாய்ப்பினை உருவாக்கச் செயற்கை முறை ஆபரணங்கள் தயாரிப்பதற்கான பயிற்சி அளிக்க 18 நபர்களுக்குப் பயிற்சி ஆணைகள், முத்ரா திட்டத்தின்கீழ் 12 நபர்களுக்குத் தலா ரூ.1 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.12 இலட்சம் கடனுதவி, சிறுதொழில் செய்வதற்கான வங்கிக்கடன் திட்டத்தின்கீழ் 33 நபர்களுக்கு ரூ.10,000 வீதம் ரூ.3.30 இலட்சம் கடனுதவி, ரூ.75 இலட்சம் மதிப்பீட்டில் கலைஞர் நகர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் முன்மொழிவு ஒப்புதல், மெட்ராஸ் அட்டாமிக் பவர் ஸ்டேஷன் (MAPS)நிறுவனத்தின்மூலம் பெருநிறுவனங்களின் சமூகப் பொறுப்புத் திட்டத்தின்கீழ்ப் புதியதாக அங்கன்வாடி மையம் மற்றும் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்குக் கூடுதலாக இரண்டு புதிய வகுப்பறைகள் கட்டுவதற்கான ஆணை மற்றும் பேரூராட்சி பொது நிதித் திட்டத்தின்கீழ் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் வளர்ச்சித் திட்டப் பணிகள் மேற்கொள்ள ஆணை என மொத்தம் 282 நபர்களுக்கு ரூ.4.53 கோடி மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நன்றி தெரிவித்துப் பேசிய பயனாளிகள் திருமதி பவானி, திருமதி அஸ்வினி ஆகியோர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தங்கள் இல்லங்களுக்கு வரவேண்டும் என்று அழைப்பு விடுத்தார்கள். அவர்களது அழைப்பினை ஏற்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அவர்களது இல்லங்களுக்கு நேரில் சென்று, குடும்பத்தினரிடம் நலம் விசாரித்தார். அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நரிக்குறவர் மற்றும் இருளர் குடியிருப்புகளைப் பார்வையிட்டு, ஆய்வு செய்து, அவர்களிடம் வசதிகள் குறித்துக் கேட்டறிந்து, கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.

மேலும், பூஞ்சேரி ஊராட்சிப் பகுதியில் வசிக்கும் நரிக்குறவர், இருளர் இன மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர், மின்சாரம் மற்றும் சாலை வசதிகளை முழுமையாக ஏற்படுத்தி, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உறுதியளித்தார்.



இருளர் மற்றும் குறவர் இன வாழ்வில் ஒளியேற்றும் நாள் இது...

சமூகத்தின் விளிம்புநிலையில் இருக்கும் ஒருவரையும் விடாது சுயமரியாதையும் சமூக நீதியையும் காப்பதே திராவிட இயக்கத்தின் பணி!

சகோதரி அசுவினி அவர்களுக்கு மறுக்கப்பட்டது உணவு அல்ல; மரியாதை. அதை மீட்டுத்தர ஆட்சிப் பொறுப்பு என்பது பெருவாய்ப்பு.

அதனைத்தான், “நடமாடும் கோயில் திருப்பணியைத்தான் தி.மு.க. ஆட்சிக்கு வரும்போதெல்லாம் செய்கிறது” என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார்.

திராவிட இயக்கம் உருவாகி நூறாண்டுகளைக் கடந்திருக்கலாம். ஆனால் காலம் என்ற பெருவெளியில் நூறாண்டு என்பது கைக்குழந்தையே!

ஆயிரமாயிரம் ஆண்டுகள் சமூகத்தில் புரையோடிவிட்ட அழுக்குகளைக் களைந்து, சமூகநீதியை நிலைநாட்டி, மானுட ஒளியைக் காக்க நாம் பயணிக்க வேண்டிய தொலைவு இன்னும் உள்ளது.

பூஞ்சேரி கிராமத்து இருளர் மற்றும் குறவர் இன மக்களுக்குப் பட்டா, சாதிச் சான்றிதழ், வாக்காளர் அடையாள அட்டை, வாழிடச் சான்றிதழ், முதியோர் உதவித்தொகை, நலவாரிய அடையாளச் சான்றிதழ், பயிற்சிச் சான்றிதழ், வங்கிக் கடன்கள் ஆகியவற்றை வழங்கினேன்.

இருளர் மற்றும் குறவர் இன வாழ்வில் ஒளியேற்றும் நாள் இது!

இதேபோல் இரண்டுவார காலத்துக்குத் தமிழ்நாடு முழுவதும் இம்மக்களுக்கான நலத்திட்ட உதவிகள் செய்யப்பட உத்தரவிட்டுள்ளேன்.

இவற்றையெல்லாம் செய்யும்போது, திராவிட இயக்கம் கடந்து வந்த நெருப்பாறு என் நினைவுகளில் நிழலாடுகிறது!

‘பெரியார் – அண்ணா – கலைஞர்’ ஆகியோரை நெஞ்சிலேந்தி அவர்களுக்கான உதவிகளை வழங்கினேன். நடமாடும் கோயில் திருப்பணி தொடரும்!

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
(04.11.2021)

நாமக்கல் கவிஞர்

நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளை அவர்கள் நாமக்கல் மாவட்டம், மோகனூரில் 19.10.1888 அன்று பிறந்தார். சிறந்த தமிழறிஞரும், கவிஞரும் ஆவார். தேசியத்தையும் காந்தியத்தையும் போற்றியவர். "தமிழன் என்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா" என்கின்ற வீரநடைக்கு வித்திட்டவர். தமது தேச பக்திமிக்கப் பேச்சினால் பல இளைஞர்களைத் தேசத்தொண்டர்களாக மாற்றியவர். 1971இல் மத்திய அரசின் பத்மபூஷன் விருது பெற்றார். 5 ஆண்டுக்காலம் தமிழக அரசின் அரசவைக் கவிஞராக விளங்கியவர்.

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் மரு. மா. மதிவேந்தன் அவர்கள் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களின் நினைவு இல்லத்தில் அன்னாரது திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

அமுதகவி

அமுதகவி உமறுப்புலவர் அவர்கள், தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரத்தில் 1642இல் பிறந்தார். அரசவைப்புலவர் கடிகைமுத்துப் புலவரிடம் இலக்கண, இலக்கிய, கவி நிகண்டு பயின்றார். எட்டையபுரம் மன்னரின் அரசவையில் ஆணவத்துடன் வாது புரிய வந்த வடபுலவன் வாலைவாருதியை துணிந்து எதிர்கொண்டு இறையருட் கவி பாடி வென்றார். அதுமுதல் அரசவைப் புலவராக நியமிக்கப்பட்டார். கீழக்கரை கொடை வள்ளல் சீதக்காதி மரைக்காயர், உமறுப்புலவரின் ஆற்றலைக் கண்டு, முகமது நபி வாழ்க்கையைச் சீறாப்புராணமாக எழுதக் கீழக்கரைக்கு அழைத்துச் சென்றார். சீறாப்புராணம் எழுதி முடிக்கப்பட்டுப் பரங்கிப்பேட்டையில் அரங்கேற்றம் நடைபெற்றது.

தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் அமுதகவி உமறுப்புலவர் அவர்களின் எட்டையபுரம் மணிமண்டபத்தில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மரியாதை.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 08.11.2021 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்த்த இத்தாலியப் பேறறிஞர் வீரமாமுனிவர் அவர்களின் பிறந்தநாளையொட்டி அன்னாரின் வாழ்க்கை வரலாற்றினை விளக்கும் ''வீரமாமுனிவர்'' மற்றும் வீரமாமுனிவரின் கையெழுத்துப் பிரதி ஆவணத்தின் அச்சுப்பிரதியான ''சித்திரக் கதைகள்'' ஆகிய புத்தகங்களை வெளியிட்டார்.

"தமிழகராதியின் தந்தை" வீரமாமுனிவர்

அழகுத் தமிழில் அரிய பல இலக்கியப் படைப்புகளையும் இலக்கண நூல்களையும் எழுதி இருந்தாலும், தமிழ்மொழி இதுவரை காணாத வகையில் தமிழ்ச்சொற்களுக்கு அகரமுதலி எழுத்து வரிசையில் முதல் தமிழ் அகராதியாம் ''சதுரகராதி'' உருவாக்கிச் சாதனை படைத்துத் தமிழ் வரலாற்றில் உச்சம் தொட்டவர் வீரமாமுனிவர்.

ஒரு மொழியிலுள்ள சொற்கள் அனைத்தும் அகரமுதலி எழுத்து வரிசையில் தொகுத்து அவற்றிற்கானப் பொருளை அதே மொழியிலோ, வேறொரு மொழியிலோ எடுத்துரைப்பதும், சொல்லின் பொருளோடு அதன் உச்சரிப்பு, தோற்றம், இலக்கியத்தில் குறிப்பிட்டுள்ள இடம், அது வழங்கும் நாடு உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் உள்ளடக்கியதே சதுரகராதி ஆகும். முதுமொழியாம் தமிழ் மொழியின் பொருள் கூறும் நிகண்டுகள் பல இருந்தாலும், நிகழ்காலத்தில் தமிழ் மொழியின் செம்மையினை வெளிப்படுத்தும் முதல் அகராதியை உருவாக்கி அதற்குக் 'கருவூலம்' என்று பெயர் சூட்டிய பெருமையும் தமிழ் முனியாம் வீரமாமுனிவரையே சாரும்.

தனது தமிழ்ப் பணியைத் தொய்வின்றி தொடர்ந்து தொன்மை வாய்ந்த திருக்குறள், தேவாரம், திருப்புகழ், நன்னூல், ஆத்திச்சூடி ஆகியவற்றின் பெருமைகளை அயல்நாட்டினரும் அறிந்து பயன்பெறுகின்ற வகையில், ஐரோப்பிய மொழியிலும் மொழியாக்கம் செய்து வெளியிட்டார்.

தமிழுக்கு அவர் ஆற்றிய அளப்பரிய தொண்டினைப் போற்றிடும் வகையில், வீரமாமுனிவருக்கு 1968ஆம் ஆண்டு பேறிஞுப் பெருந்தகை அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு நடத்தப்பட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சீரிய முயற்சியினால் வீரமாமுனிவர் அவர்களின் திருவுருவச் சிலையானது சென்னை மெரினா கடற்கரையில் நிறுவப்பட்டு அவருடைய பிறந்தநாளான 08.11.2021 அன்று அரசு விழாவாக ஆண்டுதோறும் சிறப்புடன் கொண்டாடப்பட்டு வருகிறது. மேலும் 'தமிழகராதியின் தந்தை' எனப் போற்றப்படும் வீரமாமுனிவரின் பிறந்தநாளினைப் போற்றிடும் வகையில் தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் ''தமிழ் அகராதியியல் நாள்'' ஆகக் கொண்டாடப்பட்டும் வருகிறது.

வீரமாமுனிவர் அவர்களின் பிறந்தநாளையொட்டி, சென்னை மெரினா கடற்கரையில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச்சிலைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

நவீன இந்தியாவின் சிற்பி

**இன்றைய குழந்தைகள்
நாளைய இந்தியாவை
உருவாக்குவார்கள்.
நாம் அவர்களை வளர்க்கும்
விதத்தில்தான்
நமது நாட்டின் எதிர்காலம்
தீர்மானிக்கப்படும்.**

– பண்டித ஜவஹர்லால் நேரு

குழந்தைகள் நாட்டின் செல்வங்கள்

குழந்தைகள் மீது அளவற்ற அன்பு கொண்டிருந்த இந்திய ஒன்றியத்தின் முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்தநாளைக் குழந்தைகள் தினமாகக் கொண்டாடி மகிழ்கிறோம். குழந்தைகள் இந்நாட்டின் செல்வங்கள், ஒளிச்சுடர்கள்!

ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு வகையில் திறமையானவர்கள் – அழகானவர்கள்! குழந்தைகளின் தனித் திறமைகளைக் கண்டறிந்து, அவர்களை வளர்த்தெடுப்போம்.

குழந்தைகளுக்குப் பாதுகாப்பான சூழலை உருவாக்கி, மழலைப்பருவத்தில் உலகை அச்சமின்றி அணுகிக் கற்கத் துணை நிற்போம்!

குழந்தைகளைப் பாதுகாப்பது ஒட்டுமொத்தச் சமூகத்தின் கூட்டுச் செயல்பாடாகும். அவர்களுக்கு எதிரான பாலியல் – உளவியல் துன்புறுத்தல்களை அரசு இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கும்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. **ஆர்.என்.ரவி** அவர்கள் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் 133ஆவது பிறந்தநாளையொட்டித் தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை கிண்டி, கத்திபாரா சந்திப்பில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

“

**உலக வரலாற்றைப்
படிப்பதைவிட உலகில்
வரலாறு படைப்பதே இனிமை...**

**நற்பண்பு இல்லா அறிவு
ஆபத்தானது!
அறிவில்லாத நற்பண்பு
பயனற்றது!**

– பண்டித ஜவஹர்லால் நேரு

”

டிசம்பர் 11 : மகாகவி பாரதியார் பிறந்தநாள்

"இலட்சியவாதி"

தமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்குழைத்தல், இமைப் பொழுதுஞ் சோராதிருத்தல் என்ற உறுதியோடு பதினேழு ஆண்டுக்காலம், சுதேசமித்திரன், இந்தியா, சக்கரவர்த்தினி, பாலபாரதா போன்ற பல பத்திரிகைகள் மூலம் நெருப்பு மழை பொழியும் கட்டுரைகளையும், கனல் தெறிக்கும் கவிதைகளையும் எழுதி மக்கள் உள்ளங்களில் சுதந்திரத் தாகத்தை வளர்த்த சீரிய சிந்தனையாளர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

பெண் விடுதலைக்காக எழுச்சிமிகுப் பாடல்களைப் பாடியவர். குழந்தைத் திருமணத்தை எதிர்த்தவர். தாய்மொழியாம் தமிழைத் தெய்வமாகவே போற்றியவர்.

எட்டையபுரத்தில், 1882ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் பிறந்து, பதினாறு ஆண்டுக் காலம் எட்டையபுரத்திலும், மூன்று ஆண்டுகள் காசியிலும், மூன்றாண்டுகள் எட்டையபுரம் அரசவைப் பணியிலும், சில மாதங்கள் மதுரையிலும், 1904ஆம் ஆண்டு நவம்பரில் சென்னை வந்து சுதேசமித்திரன் உதவி ஆசிரியர் பொறுப்பேற்றது முதல் நான்கு ஆண்டுகள் சென்னையிலும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறை காரணமாக, 1908ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் 1918 நவம்பர் வரை பத்து ஆண்டுகள் புதுச்சேரியிலும், சில மாதங்கள் மனைவியின் ஊரான கடையத்திலும், 1920 ஆகஸ்டு முதல் 1921 செப்டம்பர் வரை மீண்டும் சென்னையிலும் வாழ்ந்தவர்.

நாட்டிற்காக, மக்கள் சமுதாய ஏற்றத்திற்காக, தாய்த் தமிழின் உயர்வுக்காக, அறநெறிக்காக, அருந்தொண்டாற்றி, 39 வயது முடிவதற்குள்ளாகவே அழியாப் புகழை நிலை நாட்டி விட்டுச் சென்ற பாரதியாரின் வாழ்க்கையை ஓர் இலட்சியவாதியின் வீர வரலாறாக உலகமே போற்றுகிறது.

டிசம்பர் 10 : மூதறிஞர் இராஜாஜி பிறந்தநாள்

'சி.ஆர்.'

சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரி, இந்தியத் தேசிய காங்கிரசின் சிறந்த தலைவர்களுள் ஒருவர். சிறந்த விடுதலைப் போராட்ட வீரர், வழக்கறிஞர், அரசியல்வாதி மற்றும் எழுத்தாளர் ஆவார். அனைவராலும் இராஜாஜி என்றும் சி.ஆர். என்றும் அழைக்கப்பட்டவர். இந்தியாவின் கடைசித் தலைமை ஆளுநராகப் பணியாற்றியவர். சென்னை மாகாணம், சென்னை மாநில முதலமைச்சர், மேற்கு வங்க ஆளுநர், இந்திய ஒன்றியத்தின் உள்துறை அமைச்சர் போன்ற பல பதவிகளிலும் பணியாற்றியவர். பாரத ரத்னா விருதைப் பெற்ற முதல் இந்தியர்களில் ஒருவர். 1959இல் சுதந்திராக் கட்சியைத் தொடங்கினார். பெரியார் ஈ. வே. இராமசாமியுடன் தமது கடைசிக் காலம் வரையில் நட்பு பாராட்டியவர். அணுவாற்றல் போர்க்கருவிகளைக் குறைக்கப் போராடியவர்.

தமது எழுத்தாற்றலால் தமிழ் மற்றும் ஆங்கில இலக்கியத்திற்குச் சிறப்பாகப் பங்காற்றியவர். தமிழில் இராமாயணம் மற்றும் மகாபாரதம் காவியங்களை மொழிபெயர்த்துள்ளார். புகழ்பெற்றக் கருநாடக இசைப்பாடலான "குறை ஒன்றும் இல்லை, மறைமூர்த்தி கண்ணா" இவர் இயற்றிய பாடலே.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 08.11.2021 அன்று
சென்னை, அன்னை சத்யா நகரில் மழைநீர் தேங்கியுள்ள குடியிருப்புகளுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டு,
அப்பகுதி மக்களிடம் தேவைப்படும் உதவிகள் குறித்துக் கேட்டறிந்து, நலம் விசாரித்தார்.

தமிழரசு

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2021-2023
& WPP No. TN/PMG (CCR) 518/2021-2023

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 09.11.2021 அன்று சென்னை, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட செம்பியம் வியாபாரிகள் சங்கத் திருமண மண்டபத்தில் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக, உணவு தயாரிக்கப்படும் பணிகளைப் பார்வையிட்டு, உணவினைச் சுவைத்து, தரத்தினை ஆய்வு செய்தார்.

Published by Dr.V.P. JEYASEELAN, I.A.S., on behalf of Information and Public Relations Department Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS, Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor: Dr.V.P. JEYASEELAN, I.A.S.,